ANGLO ASIAN
MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 6 06 – 12 ஜூலை 2000 முழக்கம்: 286

AYNGARAN VIDEO
உங்களுக்குத் தேவையான
ORIGINAL VIDEO, VCD, DVD, CD
மற்றும் தொலைக்காட்சி
நாடகங்கள், பிரபல் மேடை
நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)
80, Burlington Road
New Malden
SURREY KT3 4NU
Tel: 07939238296
Pub.


# சந்திரிகாவின் திட்டம் புலிகளால் நிராகரிப்பு

*(03.07.00)*

வடக்கு கிழக்கிற்கென சந்திரிகா அரசு அறிவித்துள்ள இடைக்கால நிர்வாகசபைத் திட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது. சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் கூடி கலந்தாலோசித்து உருவாக்கியிருக்கும் அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளை கடுமையாக விமர்சித்த திரு.பாலசிங்கம் அவர்கள், அரசு அறிவித்துள்ள இத் தீர்வுத் திட்டமானது தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு அடிப்படையாக அமையவில்லை எனவும், அதில் எவ்விதமான உருப்படியான அதிகாரங்களும் இல்லையெனவும் தெரிவித்ததுடன், விடுதலைப்புலிகள் இத் திட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கில் 70 வீதமான நிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதென சுட்டிக்காட்டிய பாலசிங்கம் அவர்கள், யாழ். குடாவும் புலிகளிடம் விரைவில் வீழ்ந்துவிடும், குடாநாடு முழுமையாக அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடும் என்பதை ஓயாத அலைகள் ஓய்ந்துவிடாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

திரு.பாலசிங்கம் அவர்களின் இக் கருத்துக்கள், இலண்டனில் இருந்து வெளியாகும் *தமிழ் கார்டியன்* ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. தமிழ் கார்டியனுக்கு அவர் அளித்த விரிவான பேட்டியிலேயே இவ்விடயங்கள் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. செவ்வியின் ஒரு கட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி அமெரிக்காவிடமோ அல்லது இந்தியாவிடமோ அல்லது சிறீலங்காவிடமோ இருக்கவில்லை எனவும், எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தினையும் தலைவிதியினையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது தமிழீழ மக்களேயென தெளிவுபடுத்தியுள்ளார்.



(செவ்வியின் முழுவிபரம் நடுப்பக்கத்தில் பார்க்கவும்.)

## சிறீலங்கா இராணுவக்கட்டமைப்பு மூழ்கும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது


**– தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் –**

*(03.07.00)*

சிறீலங்கா இராணுவக்கட்டமைப்பு நிச்சயமாக ஒரேயடியாக மூழ்கத்தான் போகின்றது. அதற்கான காலம் வெகு விரைவில் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஆனையிறவு ஒலிப்பேழை, கவிதை நூல் வெளியிட்டு விழாவின்போது தெரிவித்தார். இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன்று ஆனையிறவு பெரும் சமரின், ஆனையிறவு மீட்பின் வெற்றி நாளாக, வெற்றி நிகழ்வாக ஒலிப்பேழை, கவிதைநூல் ஆகியன வெளியிட்டு வைப்பதில் பெரு மகிழ்வடைகின்றோம். இந்தக் கவிதை நூலையும், ஒலிப்பேழையையும் பார்க்கின்ற, கேட்கின்றபோது ஆனையிறவு வெற்றியின் பரிமாணத்தை முழு அளவில் உணர்த்துகின்ற ஒரு போர் எழுச்சியை எமது மனதில் இந்தப் படைப்புகள் ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் இந்த படைப்புகளைப்படைத்த கவிஞர்கள், கலைஞர்கள் போற்றுதற்குரியவர்கள். ஆனையிறவு படைத்தள வெற்றியென்பது தனியே ஒரு இராணுவ வெற்றியாக, இராணுவ வரையறைக்குள் படைத்துவிட்டு போகின்ற நிகழ்வாக அதை நாம் கொள்ள முடியாது. இன்று உலகெங்கும் இந்த ஆனையிறவு வெற்றியை பெரு எழுச்சி விழாவாக, தமிழனுடைய பெரு வெற்றிவிழாவாக கொண்டாடுகின்றார்கள்.

வரலாற்று ரீதியாக எமது இனம் காலங்காலமாக பல நூற்றாண்டுகாலமாக அடிமை வாழ்விற்குள் அகப்பட்டிருந்தது. அடிமைத்தனத்தின் அடையாளச் சின்னமாக சந்ததி சந்ததியாக வரலாற்று ரீதியாக அடிமையென எங்களைச் சுட்டிக்காட்டுகின்ற ஒரு குறியீடாக ஆனையிறவுத் தளம் பல நூற்றாண்டுகளாக இருந்திருக்கின்றது. அதனால் தான் இந்த ஆனையிறவுத்தள வெற்றியென்பது மிகப்பெரிய அளவில் உலக அரங்கிலே, அரசியல் அரங்கிலே அதிர்வலைகளையும் உணர்வலைகளையும் ஏற்படுத்திய நிகழ்வாகவும், தமிழனின் வீரத்தை உலகெங்கும் பரப்புகின்ற ஒரு நிகழ்வாகவும் அமைந்திருக்கின்றது. ஆனையிறவு வெற்றி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பெரும் அரசியல் திருப்புமுனைகளை ஏற்படுத்திய நிகழ்வாக நாம் பார்க்க வேண்டும்.



(☞ 6ம் பக்கம்)

இணையத்தளத்தில்
ஈழமுரசு
உங்கள் ஈழமுரசு வார இதழினை இனி நீங்கள் www.eelamurasu.com என்ற இணையத்தளத்தினூடும் கண்டுகொள்ளலாம்.

## மூதூர் இராணுவ – பொலிஸ் கூட்டுமுகாம் அழிப்பு

*(03.07.00)*

திருமலை மூதூரில் அமைந்திருந்த சிறீலங்கா இராணுவ — பொலிஸ் கூட்டு முகாம் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல் அணியினரால் கைப்பற்றப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலின்போது ஒரு அதிகாரி உட்பட சில இராணுவத்தினரும், பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)


## மன்னார் நகரில் பறந்த புலிக்கொடிகள்

*(03.07.00)*

மன்னார் நகரில் சிறீலங்கா இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலையத்தினுள் இன்று காலை விடுதலைப் புலிகளால் புலிக்கொடிகள் பறக்கவிடப்பட்டமை, மன்னார் இராணுவ வட்டாரங்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. மன்னார் நகரின் வைத்தியசாலைச் சந்தி

(☞ 2ம் பக்கம்)

**ஜூலை 5**



உலகத்தையே வியந்து பார்க்க வைத்த தேசத்தின் கரும்புலிப் புதல்வர்களின் நாள்!

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

# ஈரோட்டில் ம.தி.மு.க. மாநாடு

(03.07.00)

ஈரோட்டில் கடந்த சனி, ஞாயிறு இரு தினங்கள் ம.தி.மு.க.வின் மாபெரும் இரு நாள் மாநாடு இடம்பெற்றது. இம் மாநாட்டில் இந்திய உட்துறை அமைச்சர் அத்வானி, பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், நிதியமைச்சர் ஜஸ்வந்த் சின்கா, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, காஸ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லா, பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங் பர்தல் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க செயலளர் திருநாவுக்கரசு உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளனர்.

மாநாட்டினையொட்டி மாபெரும் பேரணி ஒன்று ஈரோடு வ.உ.சி பூங்காவில் இருந்து மாநாட்டு மண்டபம் வரை இடம்பெற்றது. இதில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டதாகச் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப் பேரணியில் இந்தியப் பிரமுகர்களின் உருவப்படங்களுடன் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படங்களையும் ஏந்தியவாறு மக்கள் கலந்துகொண்டிருந்தனர். சனியன்று நடந்த முதல்நாள் மாநாட்டில் நிதியமைச்சர், தமிழக முதல்வர், ஆந்திர முதல்வர் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள். மறுநாள் ஞாயிறன்று நடந்த இரண்டாவது நாள் மாநாட்டில் உள்துறை அமைச்சர் அத்வர்னி, பெர்னாண்டஸ் உட்பட பல பிரமுகர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மன்னார்...

மற்றும் கடைவீதி, மன்னார் விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலேயே புலிக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. நகரில் இக் கொடிகள் பறந்ததால் பொதுமக்கள் அவற்றை ஆச்சரியத்துடன் பார்த்தனர். இச் செய்தி சிறீல-ங்கா இராணுவத்தினருக்கும் பொலிசாருக்கும் எட்டியதால் அவர்கள் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை பலப்படுதிய பின்னர் அப்பகுதிக்கு வந்து புலிக்கொடிகளை அகற்றியுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவத்தை அடுத்து சிறீலங்கா இராணுவத்தினர் தமது தேடுதல் வேட்டைகளை மன்னார் நகரில் மிகக்கடுமையாக மேற்கொண்டனர். பொதுமக்கள் அனைவரிடமும் புலிக்கொடிகளை கட்டியவர்களை உங்களுக்கு தெரியுமா எனக்கேட்டு கடுமையாக விசாரித்துள்ளனர். குறிப்பாக மன்னார் மூர் வீதிப் பகுதியிலேயே படையினரின் கெடுபிடிகள் அதிகமாக இருந்தன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மூதூர்...

பலர் காயமடைந்துள்ளனர். இத் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக படையினரும் பொலிசாரும் காட்டுப் பகுதிகளுக்குள் சிதறி ஓடியுள்ளனர். நேற்று இரவு 7.30 மணியளவில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமது அதிரடித் தாக்குதல் மூலமாக முகாமினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த விடுதலைப் புலிகள் அங்கு சுமார் 90 நிமிடநேரம் நிலைகொண்டிருந்தனர். முகாமில் இருந்த ஆயுத தளவாடங்கள் விடுதலைப் புலிகளால் அப்புறப்படுத்தப்பட்டதன் பின்பே முகாம் கட்டடங்கள் குண்டுகள் வைத்து அழிக்கப்பட்டுள்ளது.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet, 75010 Paris.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:** P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com
eelamurasu@noos.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64
ஜேர்மனி: **Leama**
**Tel: 0208 2053650**
**Fax: 0208 2053651**
டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588
சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16
பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0181-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
ஹரி - Tel: 07887874177
பாஸ்கரன் - Tel: 208-7698302
இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056
நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527
நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804
அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au
கனடா:
**Shoppers World Postal Outlet**
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

## மரண அறிவித்தல்



பிறப்பு:
09.04.1981

இறப்பு:
13.06.2000

**செல்வி நளாயினி பாலசுப்ரமணியம் (நளா)**
**செனேகா கல்லூரி மாணவி**
*(கல்வியங்காடு)*

தமிழீழம், கல்வியங்காடு, ஞானபாஸ்கரதோய சங்க வீதியை பிறப்பிடமாகவும், தற்போது கனடா ஸ்காபுறோவில் வசித்து வந்தவருமாகிய நளா என அழைக்கப்படும் செல்வி நளாயினி பாலசுப்பிரமணியம் (செனேகா கல்லூரி மாணவி) 13.06.2000 செவ்வாய்க் கிழமை அகால மரணமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் (பாலு), வசந்தகுமாரி (வசந்தா), தம்பதியினரின் அருமை மகளும் நந்தா, நந்ததாஸ், நிர்மலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேகவர்ணனின் அன்பு மைத்துனியும் அபர்ணன், லவர்ணன் (அப்பன்) ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
தாய், தந்தை, சகோதரர்கள்
(416) 496 - 0717

Pub. Canada Gra.


## இசைக்கச்சேரி

பிரபல திரைப்படப் பின்னணிப் பாடகி
P.சரளா வழங்கும் பக்திப்பாமாலை.
அவரோடு இணைந்து பிரபல
திரைப்படத் தபேலா வித்துவான் திரு.
அம்பி சுவாமிநாதன் அவர்கள் தபேலா
வாசிக்கின்றார்.

காலம்: 07.07.2000 வெள்ளி மாலை 7 மணி
இடம்: அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்.

அனைத்து இசைப் பிரியர்களையும்
அன்புடன் அழைக்கின்றார்கள்.

தொடர்புகளுக்கு: அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்
26, Rue Departement, 75018 Paris
M°: La Chapelle
T.P: 01 40 38 30 75

## நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.



**நித்தி:**
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

Pub Fr

## இந்திய உணவகம்

தந்தூரி - மற்றும் இந்திய உணவு வகைகள் -
தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்தவர்கள்
கோடைகால விடுமுறைக்குத் தேவை.
மேலதிக விபரங்களுக்கு: 0147310506 என்ற
இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# படையினரின் கைதின் பின் காணாமல் போன இளைஞர்கள்

வவுனியா பூந்தோட்டம் தடுப்பு முகாமில் இருக்கும் இருவர் உட்பட நான்கு இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகிறது. நலன்புரி நிலையம் என்ற பெயரில் சிறீலங்கா இராணுவ அழுத்தங்களுடன் இத் தடுப்பு முகாம்கள் இயங்கி வருவது தெரிந்த விடயமே. அங்கு தங்கியிருக்கும் இரு இளைஞர்கள் காணாமல் போனமைக்கு படையினரே காரணமெனத் தெரியவருகிறது.

முத்துக்கிருஸ்ணன் சூரியகாந்தன் என்பவர் இந்தத் தடுப்பு நிலையத்தில் தங்கியிருப்பவர். கடந்த 24ம் திகதியன்று பம்மை மடுப்பகுதிக்கு இவர் விறகுவெட்டச் சென்றார். அதன்பின்னர் இவர் மீண்டும் திரும்பவில்லை. இதைப்போல, இதே நிலையத்தைச் சேர்ந்த முனுசாமி புவனேஸ்வரன் என்பவர் படையினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். இவர்களைவிட தம்பையா விஜயகுமார் என்னும் வேப்பங்குளத்தைச் சேர்ந்த நபரும் ஆறுமுகம் மகேந்திரன் என்பவரும் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டுசெல்லப்பட்ட பின்னர் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை சிறீலங்காப் பொலிசாரினால் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் பொலிசாரின் சித்திரவதைகளால் ஏற்பட்ட காயங்கள் காரணமாக மரணமடைந்தது தெரிந்ததே. மரணமடைந்த இவர் யார் என்பது குறித்து இன்னமும் அடையாளங் காணப்படாததால் அவரை அடையாளம் காணுவது தொடர்பான விசாரணைகளில் மனித உரிமை ஆணைக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

# சுதேச மருத்துவமா? சிங்கள மருத்துவமா?

சிறீலங்காவின் சுகாதாரம் மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு அண்மையில் 274 சுதேச மருத்துவர்களுக்கு சமாதான நீதிபதிப் பட்டங்களை வழங்கியுள்ளது. ஆனால் இவ்வாறு பட்டங்கள் வழங்கப்பட்டவர்களுள் வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சித்த, யுனானி மருத்துவம் புரியும் தமிழ் முஸ்லிம் வைத்தியர் ஒருவர்கூட இடம்பெறவில்லை. முழுக்க முழுக்க சிங்களவர்களுக்கே இவ்வாறான சமாதான நீதவான் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதென வடக்குக் கிழக்கு மாகாண சுதேச திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக சிறீலங்கா சுகாதார அமைச்சு மேற்படி சுதேச மருத்துவர்களை கௌரவிப்பதென தீர்மானித்து சகல மாகாணங்களின் ஆயுள் வேத திணைக் களங்களிடமிருந்து தகுதியான சுதேச வைத்தியர்களின் பெயர்களைக் கோரியிருந்தது. இந்த அறிவிப்புக்கிணங்க வடக்குக் கிழக்கு மாகாண ஆயுள்வேதத் திணைக்களமும் தமிழ் சித்த, யுனானி வைத்தியர்களின் பெயர்களை அனுப்பிவைத்தது. ஆனால் அனுப்பி வைக்கப்பட்ட அப் பெயர்களில் இருந்து ஒருவரைக் கூட சிறீலங்காவின் சுகாதார அமைச்சு தெரிவு செய்யாமல், அப்பட்டமான 'தனது' பேரினவாத மனோபாவத்தை வெளிக் காட்டியுள்ளது.

# கேபிளில் வந்த வெடிகுண்டால் பொலிசார் பலி

மூதூர் மூன்றாம் கட்டையில் அமைந்திருக்கும் பொலிஸ் காவலரணில் இடம்பெற்ற குண்டு வெடிப்பொன்றில் சிறீலங்காப் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டார். இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இக் குண்டு வெடிப்பு தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

பச்சனூரில் உள்ள சிறீலங்கா பொலிஸ் முகாமுக்குப் பாதுகாப்பாக 3ம் கட்டை மலை உச்சியில் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு பொலிசார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மலை உச்சியில் அமைக்கப்பட்டுள்ள இக் காவலரணில் கடமை புரியும் பொலிசாருக்குத் தேவையான பொருட்கள் மலை அடிவாரத்திலிருந்து காவலரணுக்கு பொருத்தப்பட்டுள்ள கம்பி வழியாகவே வழமையாக அனுப்பப்பட்டு வருகிறது.

மலை அடிவாரத்தில் உள்ள கம்பியில் பொருட்களைக் கட்டிவிட்டால், மலை உச்சிக் காவலரணில் இருக்கும் பொலிஸார் கம்பியை மேலே இழுத்து அதில் கட்டப்பட்டுள்ள பொருட்களை எடுத்துக் கொள்வார்கள்.

கடந்த சனியன்றும் அவ்வாறே கேபிள் மூலம் மேலே வந்த பொதியை பொலிசார் எடுத்துப் பிரித்த போது அதனுள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிசாருக்கு பொருட்கள் அனுப்பப்படும் இவ்வழியை அவதானித்திருந்த விடுதலைப் புலிகளே இதனை மேற்கொண்டிருக்கலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆர்.பி.ஜி. தாக்குதலிலேயே பொலிசார் கொல்லப்பட்டதாகப் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.


## லியோன், லியோன் புறநகர் வாழ் தமிழீழ மக்களுக்கான பொதுக்கூட்டம்

தமிழீழ ஆதரவாளரும், பத்திரிகையாளரும் சிறந்த பேச்சாளருமான தமிழ்நாடு பொதுவுடமைக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பெ. மணியரசன் அவர்கள் வருகை தந்து சிறப்புரை வழங்கவுள்ளார்.

**காலம்:** 08.07.2000 சனிக்கிழமை
**நேரம்:** பிற்பகல் 3.30 மணி
**இடம்:** தமிழ்ச்சோலை மண்டபம்
122, Rue Sully, 69006 Lyon.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு: 05.61.16.68.22/05.61.43.99.52/06.63.72.30.30


# தொடரும் சிறீலங்காவின் மருந்துத்தடை இரு குழந்தைகள் பரிதாப மரணம்

வன்னிப் பகுதி மீதான பொருளாதாரத் தடையை சிறீலங்கா அரசு நாளுக்குநாள் இறுக்கி வரும் இந்நிலையில் அத்தியாவசிய மருத்துவ வசதியில்லாமல் இரு குழந்தைகள் பரிதாபகரமாக வன்னியில் மரணத்தைத் தழுவியுள்ளன.

மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 9 வயதே ஆன சிந்துஜா என்ற சிறுமியும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த சசிகலா என்ற 2 வயதுக் குழந்தையுமே இவ்வாறு மரணத்தைத் தழுவிக்கொண்டவர்களாவர். போதிய மருந்துகள் இல்லாத காரணத்தினாலேயே இவர்கள இறந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த வருடத்திற்குரிய முதல் காலாண்டு மருந்து வகைகளையே இன்னும் சிறீலங்கா அரசு ஒழுங்காக அனுப்பி வைக்கவில்லை என்பதும், இதன் காரணமாக முல்லை மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தையும் எட்டியுள்ளன குறிப்பிடத்தக்கது.

# கல்லடியில் இரு ரெலோ உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

மட்டக்களப்புக் கல்லடிப் பகுதியில் கடந்த 28ம் திகதியன்று இரு ரெலோ உறுப்பினர்கள் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

ஆரையம்பதி ரெலோ அலுவலகத்தில் இருந்து இவ் இருவரும் மட்டு நகருக்குச் சென்றுவிட்டு மீண்டும் ஆரையம்பதியை நோக்கி வந்துகொண்டிருக்கும் போதே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து சிறீலங்காப் படையினரும், பொலிசாரும், ரெலோ உறுப்பினர்களும் அவ்விடத்திற்குச் சென்று தேடுதலை நடாத்தியுள்ளனர். இத்தேடுதலின்போது பொது மக்கள் சிலர் இவர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். பலியான ரெலோ உறுப்பினர்கள் மணிவண்ணன் எனப்படும் மணி, புஸ்பராஜா எனப்படும் புஸ்பன் ஆகியோர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த $7^{th}$ திகதி மட்டு நகரில் மண்முனைப்பற்று முன்னாள் பிரதேச சபைத் தலைவர் நவரட்ணராஜா (ரொபேட்) என்பவரும் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. உறுப்பினர் வீட்டில் குண்டுத் தாக்குதல்

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் வீட்டின் மீது கடந்த 29ம் திகதி அதிகாலை இனந்தெரியாதோர் குண்டுத் தாக்குதல் ஒன்றினை நடாத்தியுள்ளனர். மாத்தளை நகரில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இக்குண்டுத்தாக்குதல் காரணமாக உறுப்பினரது வாகனமும் வீடும் சேதமடைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரதேச சபை உறுப்பினராக இவர் பதவியேற்று சில மணித்தியாலங்களில் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலுக்கு சிறீலங்கா சுதந்திரக் கட்சி காரணமாக இருக்கலாம் எனவும் மாத்தளை நகரில் தெரிவிக்கப்படுகிறது.

## சிப்பாய்களின் சச்சரவு கொலையில் முடிவு

மட்டக்களப்பு ஏரிக்கரை வீதியில் உள்ள சிறீலங்காப் படைமுகாமில் ஒரு சிப்பாய் இன்னொரு சிப்பாயால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார். மேற்படி இரு சிப்பாய்களுக்குமிடையே அடிக்கடி சச்சரவு இருந்து வந்ததாகவும் சம்பவம் நடந்த அன்று இவர்கள் இருவருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு இறுதியில் துப்பாக்கிப் பிரயோகத்தில் முடிவடைந்ததாகவும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளனர். லான்ஸ் கோப்ரல் விஜயசிறீ என்பவரே சக சிப்பாயினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.


ஈழமுரசு
Eelamurasu Weekly

EELAMURASU
22, Rue Perdonnet, 75010 Paris, France
Tel: 0033-1-40 37 63 63
Fax: 0033-1-40 37 64 64
E.Mail-eelamurasu@aol.com
இணையத் தளத்தில்
www.eelamurasu.com

உங்கள் விளம்பரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஈழமுரசு காத்திருக்கின்றது. மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு இது ஒரு நல்வாய்ப்பு.

**வர்த்தக நிறுவனங்கள் சாராத விளம்பரதாரர்களுக்கு வழங்கும் புதிய சேவை இதோ!**

ஈழமுரசில் நீங்கள் செய்யும் **விளம்பரங்கள்**
பிரான்ஸ், சுவிஸ், பிரித்தானியா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கனடா (இலவச இதழ்) ஆகிய அனைத்துப் பதிப்புக்களில் மேலதிக கட்டணமின்றி பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**புகலிட இதழ்களிலேயே சர்வதேச ரீதியில் இவ் வாய்ப்பினை அளிக்கும் முதல் இதழாளர்களும் நாமே!**

# ஆனையிறவு வெற்றியின் ஒலிநாடாவும் கவிதைத் தொகுதியும் வெளியிடப்பட்டன

(03.07.00)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரால் ஆனையிறவு என்ற பாடல் ஒலிப் பேழையும், கவிதைத் தொகுதியும் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன. ஆனையிறவு என்ற தலைப்புடன் வெளிவந்துள்ள ஒலிப் பேழையில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பாடல் வரிகளுக்கு இசைவாணன் கண்ணன் இசையமைத்துள்ளார். இதில் இடம்பெற்றுள்ள பாடல்களை எஸ்.வி.சாந்தன், ஜி.அப்துல்லா, நிரோசன், திருமலைச் சந்திரன், செங்கதிர், மணிமொழி, தவமலர் ஆகியோர் பாடியுள்ளனர்.

இதேவேளை ஆனையிறவு என்ற தலைப்புடன் கவிதைத் தொகுதியும் வெளியடப்பட்டுள்ளது. அதில் 42 கவிஞர்கள் பல வேறு உணர்வு நிலையில் நின்று, வெற்றி கொள்ளப்பட்ட ஆனையிறவைப் பற்றியும், அச்சமற்ற வாழ்வின் அடையாளமாகவும் அமைந்துவிட்ட ஆனையிறவு வெற்றி கொள்ளப்பட்ட வரலாற்று நிகழ்வு பற்றியும் தங்கள் கவிதை வரிகள் மூலம் பதிவாக்கியுள்ளனர்.

# கரும்புலிகள் எழுச்சி நிகழ்வுகள் கொண்டாட ஏற்பாடு

(02.07.00)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தடைக்கற்களை தகர்த்தெறியும் தற்கொடையாளர்களை நினைவுகொள்ளும் கரும்புலிகள் நாள் நினைவுகள் வன்னிப் பகுதிகளிலும், மற்றும் மீட்கப்பட்டுள்ள தென் தமிழீழப் பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக அனுட்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. லிபரேசன் ஒப்பரேசன் என்ற பெயருடன் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து, நெல்லியடி , மத்திய மகாவித்தியாலய முகாமில் நிலைகொண்டிருந்த ஆக்கிரமிப்புப் படைகள் மீது 1987 யூலை ஐந்தில் வெடிமருந்து சுமந்துசென்று முதன் முதல் தற்கொடைத் தாக்குதல் நடாத்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலி கப்டன் மில்லர் நினைவுநாளான கரும்புலிகள் நினைவுநாளில், தமிழீழ விடுதலைக்காக தங்கள் உயிர்களை தற்கொடையாக்கிய போராளிகளை கௌரவிக்கவும் அவர்களை நினைவு கொள்ளவும் மீட்கப்பட்ட பிரதேசங்கள் எங்கும் பேரணிகள், பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பூநகரியில் வான்தாக்குதல் மீனவர் பலி

(02.07.00)

பூநகரி தெற்கு கடற்கரைப் பகுதியில் சிறீலங்கா வான் படை கிபீர் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் மீனவர் ஒருவர் உடல் சிதறிப் பலியாகியுள்ளார். இரு மீனவர்கள் படுகாயமடைந்துள்ளனர் இவ்வாறு இன்று காலை புலிகளின் குரல் வானொலி தனது செய்தியறிக்கையில் தெரிவித்துள்ளது.

பூநகரி புல்லாவெளி பூந்தோட்டக் குடாக்கரைப் பகுதியில் மக்கள் மீனவர்களின் வாடி மீது சிறீலங்கா வான்படையின் கிபீர் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார். நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. விமானங்கள் வீசிய நான்கு குண்டுகள் அப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததாக புலிகளின் குரல் வானொலி தனது செய்தியறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்போது யாழ். மயிலிட்டியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான ஆசா(47) என்பவர் உடல் சிதறிப்பலியானார். இவர் இடம்பெயர்ந்து முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையில் வசித்து வந்தவர் ஆவர். இதே வேளை இத்தாக்குதலில் புங்குடுதீவைச் சேர்ந்த இம்மனுவேல் (55) என்பவரும் இன்னொருவரும் காயமடைந்துள்ளனர்.

# வன்னி எல்லைகளற்ற மருத்துவர் நிறுவனம் முன்பு மக்கள் ஆர்ப்பாட்டம்

(02.07.00)

புதுக்குடியிருப்பில் உள்ள எல்லைகளற்ற மருத்துவர் (எம்எஸ்எப்) நிறுவனத்தின் முன்னால் நேற்று முன்தினம் மாலை திரண்டு சென்ற மக்கள் மருத்துவ வசதிகள் இன்றி நோயினாலும் தாங்கள் படும் வேதனைகளை எடுத்துக் கூறி இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர். அங்கு கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் மருந்து வகைகளை வன்னிப் பகுதிக்கு பெற்றுத்தர வேண்டும். இல்லாது விடின் உங்களது அலுவலகத் திற்கு முன் அணுவணுவாக நோயாளர்கள் செத்து மடியும் காட்சியே நிகழுமென கூறியுள்ளனர்.

இவர்களின் கோரிக்கைளுக்கு புதுக்குடியிருப்பில் உள்ள நிறுவனத்தின் பொறுப்பான வைத்திய கலாநிதி பீப் அவர்கள், நாம் உங்களது பிரச்சினையை அறிவோம். மருந்தின்மையால் மக்கள் அனுபவிக்கும் துயர்களையும் அறிவோம். மருந்து இங்கு தட்டுப்பாடாக இருக்கின்றது என்பதையும் அறிவோம். வன்னியில் மருந்தின்மையால் மக்கள் படும் அவலத்தைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக்கூறி உள்ளோம். இதன் பின்பு மேலதிகாரிகளின் மூலம், மேலும் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்து மருந்து வகைகளைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# இரு அகதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

வாழைச்சேனை கல்மடுவில் உள்ள அகதி முகாமில் இருக்கும் இரு மீனவர்கள் சிறீலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 24ம் திகதி இந்த அராஜகம் நடைபெற்றுள்ளது. இம் மீனவர்கள் தமது ஜீவனோபாய நிமித்தம் புனாணைக் குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்றவேளையே இக் கொடூரம் நடைபெற்றுள்ளது. பலியானவர்கள் சின்னத்தம்பி செல்வராஜா (28), கந்தவனம் மங்களம் (30) ஆகியோரென சக அகதிகள் அடையாளம் காட்டியுள்ளனர். இவர்கள் மீன் பிடிக்கத் தான் வருகிறார்கள் எனத் தெரிந்திருந்தும் படையினர் இந்தக் கொடூரத்தை நடத்தியுள்ளனர்.

கல்மடு அகதிமுகாமில் வடமுனை, புனாணை, ஊத்துச் சேனை ஆகிய எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் சிறீலங்கா இராணுவத்தினால் துரத்தப்பட்ட நிலையில் கடந்த 10 வருட காலமாக அவல நிலையில் வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது.

# 'தமிழ் இனி 2000' அனைத்துலக இலக்கிய மாநாடு

(03.07.00)

தமிழ் இனி 2000 எனும் பன்னாட்டு தமிழ் இலக்கிய மாநாடு ஒன்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 1, 2, 3 ம் திகதிகளில் சென்னையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. இம்மாநாடு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்காக www.tamil-ini2000.org எனும் இணையத்தளம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம் மாநாட்டினை இந்திய, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள தமிழ் இலக்கிய ஆர்வம்கொண்ட பத்திரிகைகள், இணையத்தளங்கள், மற்றும் நிறுவனங்கள் இணைந்து நடாத்துகின்றன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புத்தளம் சுற்றிவளைப்பு 300 பேர் கைது


(03.07.00)

புத்தளம் பகுதியை நேற்று சுற்றிவளைத்த சிறீலங்காப் படையினர் 300 இளவயதினரைக் கைதுசெய்து விசாரணைக்காகக் கொண்டு சென்றுள்ளனர். அதிகாலை முதல் பலத்த தேடுதலை மேற்கொண்ட நூற்றுக்கணக்கான படையினர் விசாரணைக்கெனக் கொண்டுசென்ற 140 பேரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஈரோட்டில் நடைபெற்ற ம.தி.மு.க. மாநாட்டின் பேரணியில் தமிழ் உணர்வாளர்கள் சிலர் விடுதலைப் புலிகள் போன்று இராணுவச் சீருடையில் கலந்துகொண்டிருந்தனர்.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்
யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Köln - Str. 79, 53111 Bonn.
உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.
தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652895
GE-Pub.


ரதி ஜுவலர்ஸ்

28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL
Tel: 0181-9033063-Fax: 0181-9039711
'எப்பொழுதுமே மலிவு விலை'
OPEN: 7 Days a Week
Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.
Pub

# இடைக்கால நிர்வாகசபை நாட்டைப் பிரிக்கும்!

## - சோபிததேரர் -

சிறீலங்காவின் பிரபல பௌத்த பிக்குவான சோபித தேரோ அரசாங்கத்தின் இடைக் கால சபைக்கு ஆதரவு அளிப்ப வர்கள் சொந்த இனத்திற்குத் துரோகம் செய்பவர்கள் எனத் தெரிவித்திருக்கின்றார். அத்து டன் அரசின் இத் திட்டத்திற்கு எதிராகச் செயற்படுமாறு பொது ஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அவர் கோரிக்கையும் விடுத்துள்ளார். கொழும்பில் கடந்த 29ம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இச் செய்தி யாளர் மாநாடு சிறீலங்காவின் மேன்முறையீட்டு நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற் றிய தேரர்,

இடைக்கால நிர்வாக சபையை அமைத்து வடக்குக் கிழக்கினை புலிகளுக்குத் தாரை வார்த்துக்கொடுக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின் றன. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அதிகார பகிர்வுத் திட்டம் என்பது நாட் டைப் பிரிக்கும் ஒரு திட்டமாத லால் சிங்கள மக்கள் ஒருபோதும் இதற்கு இடமளிக்கக்கூடாது என வும் சிங்களவர்களின் வாக்குக ளைப் பெற்றுவந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இத் திட்டத் திற்கு ஆதரவளித்து தங்களின் இனத்திற்குத் துரோகம் செய்யக் கூடாது எனவும் அவர் தெரிவித் திருந்தார்.

# வாகரை பேருந்துச்சாலையை மூட படை உத்தரவு

மட்டு. வாகரையில் இயங்கி வரும் பேருந்துச்சாலையை உட னடியாக மூடுமாறு சிறீலங்காப் படையினர் உத்தரவிட்டுள்ள னர். விடுதலைப் புலிகளின் கட் டுப்பாட்டில் வாகரைப் பிரதே சம் இருப்பதால் இப் பேருந்துச் சாலையை மேலும் இயங்க அனு மதிக்க முடியதென படைத்தரப் புத் தெரிவித்துள்ளது. இப் பேருந்துச்சாலை இயங்கிவரும் பேருந்துகள் உபகரணங்கள் அனைத்தையும் வாழைச்சேனைச் சாலைக்கு அனுப்பிவைக்குமா றும் சிறீலங்காப் படை இணைப் பதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

இப் பேருந்துச்சாலை மூடப் படுமானால் இப் பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து இன்னல் களுக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்படுமென சமூகநல அமைப் புக்கள் தெரிவித்துள்ளன.

# தமிழ்மொழி பாடநூல்களின் தவறுகள் குறித்து உலக வங்கியிடம் முறையீடு

சிறீலங்கா உயர் கல்வி அமைச் சினால் 2001ம் ஆண்டு வெளியி டவிருக்கும் தமிழ்மொழிப் பாட நூல்களில் பல கருத்துப் பிழைக ளும் திரிபுகளும் இருக்கப்போ வது குறித்து இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் உயர் கல்விய மைச்சுக்குச் சுட்டிக்காட்டியது டன் அப்பாட நூல்கள் இடம் பெறவேண்டிய திருத்தங்கள் குறித்தும் யோசனைகளைச் சமர்ப்பித்தது. ஆயினும் இலங் கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் சமர்ப்பித்த அந்த யோசனைகளை சிறீலங்கா உயர்கல்வி அமைச்சு நிராகரித்துவிட்டது. சிறீலங்காத் தரப்பின் இந்தச் செய்கை குறித்து உலக வங்கியிடம் இலங்கைத் தமிழ் ஆசிரியர்சங்கம் முறையீடு செய்துள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடனேயே சிறீலங்கா கல்வியமைச்சு பாடநூல்களை அச்சிடுவதும் வழக்கம். இதனால் கொழும்பிலுள்ள உலக வங்கி யின் அலுவலகத்திற்கு நேரடியா கச் சென்ற தமிழ் ஆசிரியர் சங் கத்தின் தூதுக்குழு ஒன்று சிறீ லங்கா வந்துள்ள உலக வங்கி யின் தெற்காசியப் பிராந்தியத்திற் கான பிரதிநிதிகள் குழுவைச் சந் தித்து தமது முறையீட்டினைத் தெரிவித்துள்ளனர். தமிழாசிரியர் சங்கத்தின் இந்த முறையீட்டை ஏற்றுக்கொண்ட உலக வங்கி தூதுக் குழுவின் தலைவர் கலாநிதி வின்சன் கிறீனி இது பற்றித் தான் கவனிப்பதாகவும் தமிழ் ஆசிரியர் சங்கக் குழுவிடம் தெரி வித்துள்ளார்.

# சிறீலங்கா ரெலிக்கொம் மோசடி

சிறீலங்கா ரெலிக்கொம் நிறு வனம் வவுனியா நகரப் பகுதி யைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற் பட்ட தொலைபேசிப் பாவனை யாளர்களுக்கு பணம் செலுத் தக்கோரி அனுப்பப்பட்ட ஆவ ணம் மோசடியானதென மேற் படி தொலைபேசிப் பாவனை யாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அழைப்பைப் பெறுபவர்கள் பணம் செலுத்தும் நடைமுறை யின் கீழ் வெளிநாடுகளில் இரு-ந்தே மேற்படி பாவனையாளர்க ளுக்கு அழைப்புக்கள் எடுக்கப் பட்டதனாலேயே பணம் செலுத் துமாறு ரெலிக்கொம் நிறுவனம் அறிவித்துள்ளது. குறிப்பாக இங் கிலாந்தில் இருந்தே இவ்வாறான அழைப்புக்கள் எடுக்கப்பட்டதா கவும் அந்நிறுவனம் தெரிவித்துள் ளது. ஆனால் வவுனியாத் தொலைபேசி பாவனையாளர் களோ, தமக்கு வெளிநாடுகளில் இருந்து இவ்வாறு தொலைபேசி அழைப்புக்களை எடுப்பதற்கு ஆட்கள் எவரும் இல்லாத நிலை யில் மோசடியான முறையில் ரெலிக்கொம் நிறுவனம் பணம் அனுப்புமாறு கூறி கட்டளை ஆவணத்தை அனுப்பியுள்ளதா கவும் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ரெலிக்கொம் நிறுவனத்திற்கு எழுத்து மூலமா கவும் அவர்கள் முறையிட்டுள் ளதுடன், அம் முறையீட்டு மனு வின் பிரதியினை சிறீலங்காவி லுள்ள பிரித்தானியத் தூதரகத் திற்கும் அனுப்பி வைத்துள்ள னர்.


**உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்.**

**`VICTOR SARL'**

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக் கொள்ள

**VICTOR SARL**

43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30



**உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம்**
**இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு**

எமது புதிய அறிமுகம்
**NATURINA 2000 வெளிவந்துவிட்டது!**



தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!

இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.

இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.

Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.

இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் படைப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules, Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.

*இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!*

நீங்கள் சுவிசிலிருந்து வாங்கவிரும்பின் **Postfinance, A/ C No. 40_176111_3** என்ற வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும், பிரித்தானியாவிலிருந்து வாங்க விரும்பின் **Barclays Bank, Sort Code 20-40-71, A/C No. 80327069** என்ற வங்கிக்கணக்கு இலக்கத்திற்கும் உரிய பணத்தைச் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான அத்தாட்சியைத் தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ எமக்கு அனுப்பி உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.




மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Nassauer str 33-37, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 915910 / Fax: 0049 2381 91591-21 - Internet: www.naturina.de

**உங்கள் விசேட சலுகைகளை அனுபவியுங்கள் பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்!**
**நீங்கள் தவறவிடக் கூடாத ஒரே சந்தர்ப்பம் இதுவே!**
Naturina® தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தி, அவற்றின் வெற்றியைக் கொண்டாடும் Intercare நிறுவனத்தின் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்!

*0049 2381 9159115 - 0049 2381 9159116*
ஆகிய இலக்கங்களில்
எம்முடன் தமிழிலும் தொடர்புகொள்ளலாம்
(வாரநாட்களில் பிற்பகல் 3 - 6 மணி) (ஜேர்மனி நேரம்)


Naturina வின் விளம்பரதாரராக விரும்புகின்றீர்களா?
ஐரோப்பிய நாடுகளில், வீட்டிலிருந்தவாறே மேலதிக வருமானம்பெற விரும்புகின்றீர்களா? விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

# சிறீலங்கா இராணுவக்கட்டமைப்பு முழ்கும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது

## – தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் –

எமது தலைவர் வழியிலே, இந்த விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மலர்ந்து, முனைப்புப் பெற்ற காலத்தில் இருந்தே மிக ஆழமாக இந்த ஆனையிறவுத் தளத்தை மீட்டெடுக்க வேண்டும், இந்த ஆனையிறவுத் தளத்தில் இருக்கின்ற ஆக்கிரமிப்பு அரக்கன் அழித்து ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் எங்களுடைய தலைவர் மிக உறுதியாக இருந்தார். அதன் முதற்படியாக 1991ம் ஆண்டு காலப்பகுதியிலே ஆனையிறவு மீட்புக்கான ஒரு சமர் தொடங்கியது. ஆனையிறவை முற்றுகைக்கு உட்படுத்தி அதற்கான விநியோகங்களை எல்லாம் துண்டித்த நிலையில் ஆனையிறவு படிப்படியாக வீழ்ச்சியுறும் நிலை தோன்றியது. அது அன்றைய காலகட்டத்திலே அரசியல் இராணுவ ஆய்வாளர்களினால் பெரும் அதிர்ச்சியோடும் வியப்போடும் பார்க்கப்பட்ட விடயம். எமது வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலேயே ஆனையிறவுத் தளத்தை மீட்பதற்கான ஒரு பெரும் சமரை எம் தலைவர் தொடக்கியிருந்தார். அன்று சிறீலங்காவிடம் இருந்த கடற்படை வளர்ச்சி ஆனையிறவின் முழுமையான வீழ்ச்சிக்கு இடையூறாக இருந்தது. அன்று அந்தச்சமர், எங்கள் போராட்ட வரலாற்றிலேயே பெரும் படிப்பினைகளையும் திருப்பங்களையும் ஏற்படுத்த காரணமாக இருந்தது. அன்று அந்தச்சமர் வெற்றியடைய முடியாததற்கு எடுத்துக்கொண்ட பாடமாக, கடற்படையை கட்டியெழுப்பவில்லை என்பது இருந்தது என, எமது தலைவர் கூறுவார். எமது கடல் வலிமையை வளர்த்தெடுக்க வேண்டும் என அன்றே எமது தலைவர் முடிவெடுத்தார். அன்றிலிருந்து அவரது நேரடி கண்காணிப்பிலும், நேரடி கவனிப்பிலும் கடற்புலிகள் அணி பெரு வளர்ச்சி கண்டது. ஆரம்பத்திலே சிறு சிறு தாக்குதல்களை கடலில் மேற்கொண்டு சிறீலங்கா அரசின் கடற்படையை பலவீனப்படுத்தி, எமது கடற்சண்டை அனுபவங்களை வளர்த்தெடுத்து, எமது கடற்புலிகளை தலைவர் கட்டியெழுப்பினார். சிறீலங்கா இராணுவத்தின் தோல்வியை ஆனையிறவில் தடுத்து நிறுத்த எது துணை நின்றதோ இன்று ஆனையிறவில் இராணுவத்தின் படுதோல்விக்கு எமது தலைவரால் கட்டியெழுப்பப்பட்ட கடற்புலிகளின் வளர்ச்சி முதன்மையான பங்கை வகித்தது.

ஆனையிறவு தள மீட்புக்கான யுத்தத்தின் ஆரம்பமாக ஆனையிறவே முற்றுகைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கையாக எமது கடற்புலிகள் அணி எமது பெரும் தரைப்படை ஒன்றை கொண்டு சென்று பளைக்கு அருகாமையில் தரையிறக்கியது. அங்கு சென்ற எமது படையணிகள் யாழ் கண்டி வீதியை ஊடறுத்து ஆனையிறவு பெரும் படைத்தளத்திற்கான விநியோகங்களை துண்டித்து முழுமையான ஒரு முற்றுகைக்குள்ளே ஆனையிறவைக் கொண்டுவந்தன. இருந்தும், ஆனையிறவு படையினருக்கும் சிறீலங்கா படைத்தலைமைக்கும் பெருத்த நம்பிக்கை இருந்தது. கடலால் மீண்டும் ஒரு தரையிறக்கத்தை செய்யலாம் விநியோகங்களை மேற்கொள்ளலாம் என்ற நம்பிக்கை படைகளுக்கு இருந்தது. ஆனால் எமது கடற்புலிகளின் நடவடிக்கை அதனையும் தடுத்து நிறுத்தியது. இப்படி பல வழிகளிலும் துண்டிக்கப்பட்ட ஆனையிறவு பெரும் படைத்தளம், மிகவும் பலவீனமடைந்து வீழ்ச்சியுறும் நிலையை அடைந்தது. அப்போது எமது படைகள் முன்னேறி பெரும் தாக்குதலை மேற்கொண்டு முழுமையான கட்டுப்பாட்டில் ஆனையிறவுப் படைத்தளத்தை கொண்டு வந்தன. எமது எதிர்கால உறுதியான வெற்றிகளுக்கு அடிகோலிய வெற்றியாகவும் இது அமைந்துள்ளது.



சென்ற ஆண்டின் நடுப்பகுதியிலே இந்த வன்னி மண்ணிலே நாம் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தோம். இராணுவம் பெரிய படையெடுப்புக்களை நடாத்தி வன்னி மண்ணின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து நின்றது. அன்று எமது தலைவர், எமது மக்களுக்கு தனது திட்டங்களை கூறி எதிர்காலத்தில் ஏற்படப்போகும் திருப்பங்களுக்கு ஏற்ற தயார்படுத்தல்களை செய்யும்படி எமக்குப் பணித்திருந்தார். நாம் அதனை மக்களுக்கு விளக்கினோம். அந்த சூழலில் எமது மக்கள் அனைவரும் முன்வந்து எமது நிரந்தரப்படையை வலுவாக்கியதும் எமது எல்லைப் படைகளை உருவாக்கி இந்தப் போர்ப் பணியிலே மக்களும் பங்காற்றிய தன்மைதான் கடந்த ஒரு ஆண்டில் நாம் பெற்ற வெற்றிகளுக்கு காரணமாக இருந்தது. ஆகவே எமது மக்களாற்றிய பங்களிப்பும் எமது மக்களின் போர்ப் பணிச் செயற்பாடுகளும் எங்களுக்கு இன்று பெரு வெற்றிகளை ஈட்டித் தந்தன. ஆனையிறவு வெற்றியின் ஓயாத அலைகள் 3ல் நாங்கள் பெற்ற வெற்றிகளும் உலக அரங்கிலே எமது விடுதலைப் போராட்டத்திற்கான ஒரு அங்கீகாரம் கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையையும் அனைவரும் இந்தப் போராட்டத்தை தமிழர்களது இந்த அவலத்தை இந்த விடுதலைக்கான போராட்டத்தை திரும்பிப் பார்க்க வைக்கின்ற நிகழ்வுகளாக அமைந்திருக்கின்றன.

**சிறீலங்கா அரசிற்கு தமிழர் பிரச்சனையை தீர்க்கவேண்டும் எனக்கொடுக்கின்ற அழுத்தத்தை சமாளிப்பதற்காக வெளியுலகிற்கு ஒரு மாயையை ஏற்படுத்துவதற்காக அவசரமான எந்தப் பிரயோசனமும் அற்ற, எமது மக்களின் அபிலாசைகளையோ எதிர்பார்ப்புக்களையோ நிறைவேற்றக்கூடிய தீர்வாக இல்லாது, அவசர அவசரமாக சில அறிக்கைகளை சந்திரிகா அரசு வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. இது பெரும் பரபரப்பாக இருந்தாலும் எமது மக்களைப் பொறுத்தவரையில் வரலாற்றை கற்றுக் கொண்டவர்கள், தெரிந்துகொண்டவர்கள். அவர்கள் அதையிட்டு பெரிதாக அலட்டிக்கொள்ளா விட்டாலும் அவர்களை ஆத்திரப்பட வைக்கிற அளவிற்கு அரசின் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.**

இங்கே நடக்கின்ற பெரும் மனித உரிமை மீறல்களையும் பெரும் அவலங்களையும் உள்நாட்டுப் பிரச்சனையென புறந்தள்ளியது வெளியுலகம். ஆனையிறவு வெற்றிக்கு பின்னாலே தான் இதையொரு சர்வதேசப் பிரச்சனையாக இதை தமிழர்களுக்கு எதிராக நடக்கின்ற இன ஒடுக்குமுறையாக பார்த்து இங்கே நேரடியாக தலையிடுகின்ற நிலைமைக்கு சர்வதேச சமூகம் தள்ளப்பட்டது. எமது மக்கள் காட்டிய பங்களிப்பும் எமது தலைவரின் சிறந்த திட்டமிடலாலே ஏற்படுத்திய இராணுவ சாதனைகளும், பெரு வெற்றிகளுமே இதற்கு காரணமாகும். எமது தலைவர் கூறுவதுபோல, எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். நாமே எம்மைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். நாமே எமது விடுதலையை நிர்ணயிக்க வேண்டும் என்ற எமது தலைவரின் விருப்பத்தை எமது மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு ஆற்றிய பங்குதான் இந்த மாற்றத்திற்கும் இந்த வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது. தொடர்ந்து நாமே எமது போராட்டத்திற்கு ஊடாகவே விடுதலையை தேடிக்கொள்ள வேண்டும். சர்வதேச சமூகம் எமது விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தையும் அதனது வெற்றியை நோக்கிய பயணத்தையும் பார்த்து திகைத்து நிற்கின்ற சூழ்நிலையிலேயே, அது சிறீலங்கா அரசிற்கு தமிழர் பிரச்சனையை தீர்க்கவேண்டும் எனக் கொடுக்கின்ற அழுத்தத்தை சமாளிப்பதற்காக வெளியுலகிற்கு ஒரு மாயையை ஏற்படுத்துவதற்காக அவசரமான எந்தப் பிரயோசனமும் அற்ற, எமது மக்களின் அபிலாசைகளையோ எதிர்பார்ப்புக்களையோ நிறைவேற்றக்கூடிய தீர்வாக இல்லாது, அவசர அவசரமாக சில அறிக்கைகளை சந்திரிகா அரசு வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

இது பெரும் பரபரப்பாக இருந்தாலும் எமது மக்களைப் பொறுத்தவரையில் வரலாற்றை கற்றுக் கொண்டவர்கள், தெரிந்துகொண்டவர்கள். அவர்கள் அதையிட்டு பெரிதாக அலட்டிக்கொள்ளா விட்டாலும் அவர்களை ஆத்திரப்பட வைக்கிற அளவிற்கு அரசின் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதில் எதுவுமே எமக்கு தீர்வைக் கொண்டுவரப்போவ

(தொடர்ச்சி 31ம் பக்கம்)


# விடுதலை மாலை

இசை - நடன - நாடக விழா

தமிழகத்திலிருந்து வருகைதரும்
**புஸ்பவனம் குப்புசாமி**
குழுவினரின்
தமிழ், தமிழீழ உணர்வுப் பாடல்கள்

தமிழீழ ஆதரவாளர் அமைப்பைச்
சேர்ந்த மணியரசன் அவர்களின்
சிறப்புப் பேச்சு

தமிழீழ ஆதரவும் ஓயாத அலைகளின்
ஆர்ப்பரிப்பும் ஆனந்தமும்

**சங்காரம்**
தமிழர்களை அடிமைப்படுத்தி அழித்தொழித்த
அதர்மத்தை அழித்தொழிக்கும் தர்மம்
தமிழர் கலை பண்பாட்டுக் கழகம்



முதல் தடவையாகத் திறந்தவெளி அரங்கில்
09.07.2000

இடம்: முற்றவெளி அரங்கம்
ஸ்தான் மைதானம்
காலம்: 09.07.2000
நேரம்: மாலை 3.30 மணி!

Porte de la Chapelle இல் இருந்து
விசேட வாகன ஒழுங்குகள் உண்டு
குறித்த நேரத்தில் நிகழ்வு ஆரம்பமாகும்.

வாருங்கள்!
ஓயாதஅலைகள் தந்த
இறுமாப்புடன் வாருங்கள்!

தரம், சுவை மிக்க மாலை, இரவு உணவு
வகைகளை வழங்கக் காத்திருக்கிறது
**தமிழீழ உணவகம்**

# ‘தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்’

‘இ டக்கிறது கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி திண்ணையில் வை!’ என்ற கதையாக சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகாவும் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் சில மெத்தப்படித்த சிங்களப் பேரினவாதிகளின் துணையோடு நடாத்தி வந்த பேச்சுக்கள் ஒரு கட்டத்துக்கு வந்துவிட்டதாக சிறீலங்காவிலிருந்து செய்திகள் வெளிவந்துள்ளன. தமிழ்த் தேசியம் நடாத்திவரும் விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாகவும் தமிழ்மக்களுக்கு அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாகவுமே இவ் இரு தரப்புக்களும் இவ்வளவு காலமும் பேச்சுக்களை நடாத்தியதான பரபரப்பான கதைகள் கடந்தவாரத்தோடு ஒரு கட்டத்திற்கு வந்துவிட்டதாக சிறீலங்காவில் பரவலான எண்ண ஓட்டம் இருப்பதாக அங்கிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் இரு தரப்புக்களும் இதுவரை சந்தித்துக்கதைத்து, என்னதான் பிடித்துவைத்திருக்கிறார்களோ என்பதைச் சற்றுத் திரும்பிப்பார்ப்பது இவ்வேளை உசிதமானது. வடக்குக் கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக சபையை நிறுவுவது, இலங்கைத் தீவின் காணி அதிகாரங்கள் தொடர்பாக ஒரு முடிவினை எடுப்பது ஆகியவையே இப் பேச்சுக்களில் அடிபட்ட முக்கியமான விடயங்கள். இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் யாருமற்ற அநாதைகள் அவர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்ற மனோபாவ நடிப்புடனேயே இப்பேச்சுக்கள் நடாத்தப்பட்டதுதான். கடந்தவாரம் கூட இவ்விருதரப்புக்களும் பல மணித்தியாலங்களாகக் கூடிக் கதைத்து இறுதியில் தமிழ் மக்களுக்காக ஒரு முடிவினை எடுத்துள்ளார்கள். அது என்னவென்றால் இலங்கைத் தீவின் சகல நிலப்பரப்புக்களும் சிறீலங்காக் குடியரசிற்கே சொந்தமானது என்பதுதான். வேண்டுமானால் அமைக்கப்படும் உத்தேச இடைக்கால நிர்வாக சபையோ அல்லது ஏதாவது வேறு பெயர்களுடன் உருவாகும் சபைகளோ வடக்குக் கிழக்கு நிலப்பரப்புக்களில் ‘கொஞ்சூண்டு’ பலனை எடுத்துக் கொள்ளலாம் என்ற கண்டு பிடிப்பினையும் இவ்விரு தரப்புக்களும் பெரிதாகக் கண்டு பிடித்துள்ளனர்.

சிறீலங்கா என்ற தேசம் மிகக் கேடுகெட்ட நிலையில் இப்போது இருப்பதற்கு இந்தச் சம்பவங்கள் வரலாற்றில் அழிக்க முடியாதபடி பதிவுகளை உருவாக்கியுள்ளன. வேண்டுமானால் தமிழ்த் தேசியத்தின் வரலாறு தெரியாத வாயில்லாப் பூச்சிகளுக்கு இந்தப் பேரினவாதிகள் இந்தக் கதைகளைக் கட்டியடிக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியத்திற்கு ஒரு பலமான வரலாற்றுப் பின்னணி இருக்கும் நிலையில் இவ்வாறான கேவலமான கூத்துக்களைச் சிங்களதேசம் தொடர்ந்து அரங்கேற்ற நினைப்பது அவர்களுக்குத்தான் வினையினைத் தேடித்தரும்.

> **வடக்குக் கிழக்குத் தாயகம் சிறீலங்காக் குடியரசின் நிலமாக இருக்கும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கும் இந்தப் பேரினவாதிகளுக்கு இலங்கையின் ஆதிக் குடிகளாக தமிழர்கள் இருந்த வரலாற்று உண்மை தெரிந்திருக்கின்றதா?**

வடக்குக் கிழக்குத் தாயகம் சிறீலங்காக் குடியரசின் நிலமாக இருக்கும் என்பதை உறுதியாகத் தெரிவிக்கும் இந்தப் பேரினவாதிகளுக்கு இலங்கையின் ஆதிக் குடிகளாக தமிழர்கள் இருந்த வரலாற்று உண்மை தெரிந்திருக்கின்றதா? என்ன செய்வது வரலாற்றுப் பாதை எம்மை வஞ்சித்ததால் நாம் இதனை வெறும் பேச்சிலும் எழுத்திலும் மீண்டும் மீண்டும் சொல்லவேண்டிய வேதனையான காலகட்டம். எமக்கு வரலாற்றில் கிடைத்த அந்நியக் குடியேற்றவாத ஆதிக்கம் எமது சந்ததியை ‘வாழையடி வாழையாக’ இந்த வேதனையான காலகட்டத்திற்குள் தள்ளிவிட்டது. 15ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இலங்கைத் தீவில் காலடி எடுத்து வைத்தபோது இத்தீவு 3 இராச்சியங்களாக ஆளப்பட்டுக் கொண்டிருந்தது என்ற உண்மை எத்தனை பேரினவாதிகளுக்குத் தெரியும்.

கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் ஆகிய 3 இராச்சியங்களும் அப்போதிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசம் அந்நியக் குடியேற்றவாத ஆதிக்கத்திற்குள் வரும் வரை தமிழ் மன்னர்களாலேயே ஆளப்பட்டு வந்ததை யாரும் மறுத்துரைக்க முடியாது, அவ்வாறு மறுத்துரைப்பவர்களுக்கு வரலாறு சரியாகத் தெரியாது.

**பேம்பி**

தமது நிர்வாகச் சுலபத்திற்காக தமிழ் இராச்சியத்தினை வீழ்ச்சியுறச் செய்த குடியேற்றவாதம் தமது குடியேற்றத்தினை முடித்துக்கொண்டு இலங்கைத் தீவில் இருந்து வெளியேறும்போது செய்த வரலாற்றுத் தவறுதான் எமக்கிந்த வேதனையைத் தந்தது. அதாவது மிகப் புராதன காலத்திலிருந்து 1832ம் ஆண்டு வரை (பிரித்தானியப் படைகளால் வன்னித் தமிழ் இராச்சியம் கைப்பற்றப்படும் வரை) தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆண்டு வந்ததற்கு வரலாற்று ரீதியான மிகப் பலத்த ஆதாரங்கள் உண்டு.

ஆனால் இன்று தமிழர் தாயகத்தை ஏப்பமிடத் துடிக்கும் சிங்களப் பேரினவாதம் இந்த வரலாறுகளை மறந்து வடக்குக் கிழக்கு மக்களுக்கு ஏதோ அதிகாரங்கள் கொடுப்பதுபற்றிப் பேசிக் கொள்கின்றது. பேசிக்கொள்ளட்டும். பேசிக்கொள்ளட்டும்.. அன்றுதொட்டு இன்றுவரை சிங்களப் பேரினவாதிகள் பலரால் இவ்வாறான பேச்சுக்கள் பல தடவைகள் எழுந்துள்ளன. பண்டா செல்வா ஒப்பந்தம் எனவும் டட்லி செல்வா ஒப்பந்தம் எனவும் சொல்லியே சிங்களப் பேரினவாதம் எங்களைக் கழுத்தறுத்தது. எனினும் இந்தக் கழுத்தறுப்புக்களின் விளைவாகத்தான் தமிழ்த் தேசியத்திற்கு ஒரு அசைக்கமுடியாத தலைமைத்துவம் எழுந்தது என்றால் அது மிகையானதல்ல. ஆனால் இன்னமும் சிங்களப் பேரினவாதம் வாலை ஆட்ட நினைப்பதுதான் மிக வேடிக்கையான விடயம். தமிழர் தாயகதில் இன்று சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு படிப்படியாகத் துடைத்தெறியப்பட்டு சுதந்திரக்காற்று தவழும் வேளையில் ஏன் இந்தப் பேரினவாதிகள் வடக்குக் கிழக்கிற்குத் தற்காலிகமான நிர்வாக சபையொன்றை அமைப்பதுபற்றி பேச்சை நடாத்துகின்றார்கள். வேண்டுமானால் தமிழீழம் என்ற தேசத்திற்கு ஒரு நல்ல அயல்நாடாக இருப்பது எப்படி என்ற தலைப்பில் இவர்கள் தமக்கிடையே பேசிக்கொள்ளலாமே. அதை விடுத்து இவர்கள் இவ்வாறான கற்பனோவாத மனநிலையில் நடக்கின்றார்கள் என்றால் இவர்களுக்குத் தங்கள் தேசத்தின் யதார்த்த நிலையும் புரியவில்லை, தமிழ்த் தேசியத்தின் யதார்த்த நிலையும் விளங்கவில்லை. இன்று இவர்கள் மெத்தப்படித்த பேரினவாதிகள் சிலரின் உதவியோடு அலசிக்கொள்ளும் தமிழர்களுக்கான காணி அதிகாரங்கள் பற்றிய கதைதான் கதைகளுக்கெல்லாம் கதைசொல்லும் கதை. தமிழ் மக்களின் தாயகத்தினை ஏப்பமிட்ட வரலாறு சிறீலங்காவிற்குப் புதியதல்ல. விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்த பெருமை சிறீலங்காவிற்கு 1949ம் ஆண்டு முதல் உண்டு. இன்று சந்திரிகாவோடு கதையளக்கும் ரணிலின் ஐக்கியதேசியக் கட்சியின் கிழட்டுத் தலைமைகள்தான் இந்தக் கைங்கரியத்தை நடாத்தின. சிறீலங்காவின் முதலாவது பிரதமரென வர்ணிக்கப்படும் டி.எஸ்.சேனநாயக்காதான் 1949ம் ஆண்டு தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டவர். அன்றிலிருந்து இன்றுவரை சிறீலங்காவினால் இக் குடியேற்றங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாணத்தின் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் தமிழர்களின் சொந்தப் பூமியை ஏப்பமிட்டு சிறீலங்கா பேரினவாதத்தின் அடையாளமாகக் காட்சியளிக்கின்றது. வடக்குக் கிழக்கு தமிழ் மக்களது பூர்வீக தாயகம் என்பதால் அதற்கிருக்கும் தொப்புள்கொடியான நில இணைப்பைத் துண்டிப்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் அடிப்படையான நோக்கு. கட்சி ரீதியில் இப்பேரினவாதிகள் பிளவுபட்டிருந்தாலும் தமிழர் தாயகத்தை ஏப்பமிடுவதில் பிளவுபடவில்லை. ஒரே நோக்காகத்தான் அதனைச் செயற்படுத்தினார்கள். இன்று சந்திரிகாவும் ரணிலும் அதைத்தான் செய்கின்றார்கள்.


> **வடக்குக் கிழக்கு தமிழ் மக்களது பூர்வீக தாயகம் என்பதால் அதற்கிருக்கும் தொப்புள் கொடியான நில இணைப்பைத் துண்டிப்பதுதான் சிங்களப் பேரினவாதத்தின் அடிப்படையான நோக்கு**

அவர்களுக்கிடையில் கட்சி ரீதியான வேறுபாடுகள் இருந்தாலும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதில் ஒரே நோக்காக செயற்பட்டுவருகிறார்கள் என்பது கடந்த வாரம் அவர்கள் மேற்கொண்ட முடிவுகள் மூலம் தெரியப்படுகின்றதல்லவா?

வடக்குக் கிழக்கு இணைந்திருந்தால்தானே தமிழர்களின் தாயகக் கோரிக்கை பலமாக இருக்கும் எனக் கருதிய சிங்களப் பேரினவாதியான ஜே.ஆர். இத் தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதற்கு ஆடாத ஆட்டமெல்லாம் ஆடினாலும் அந்தக் கிழநரியின் எண்ணம் பலித்ததா? இன்று எமது தலைமைத்துவம் தமிழர் தாயகக் கோட்பாட்டில் எள்ளளவு விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லாமல் போராடும் வகையில் அது வளர்ந்துள்ளது. இவ்வாறான யதார்த்த நிலையில் சிங்கள தேசம் தனது பழைய தந்திரோபாயங்களையே மீண்டும் மீண்டும் புதுப்புது வடிவங்களில் அரங்கேற்ற நினைப்பது மேலும் வினைவிதைக்கும் அவர்களது எண்ணத்தினைத்தான் தெளிவுபடுத்துகின்றது.


இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகம்!

அன்று யாழ் நகரில்
நேற்று வன்னி மண்ணில்
இன்று பாரிஸ் மாநகரில் வெற்றி நடைபோடும்
உங்கள் சுரேஷின்
யாழ் தையலகம்



நாளைய நாகரிகத்தை இன்றே அறிமுகப்படுத்தும் தையற் கலையில் தேர்ச்சி பெற்றவர்களின் சேவையில் 3ம் ஆண்டில் பாதம் பதிக்கின்றது. நிறுவனத்தின் வளர்ச்சியில் உறுதுணையாயிருந்த நண்பர்கள், வாடிக்கையாளர்களை நன்றியுடன் பற்றிக்கொள்கின்றது ‘யாழ் தையலகம்’

யாழ் தையலகம் 39, Bld de la Chapelle , 75010 Paris Tel: 01403-44606 Mobil: 0620546566
(M.G.R வீடியோ உள்வாயில்) Mo: La Chapelle ou Gare du Nord

# இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி

18 வயது முதல் 21 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆலோசனை தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கின் நிறைவுவிழா கடந்த வெள்ளியன்று புதுடெல்லியில் நடைபெற்றது. அக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசியபோதே மேற்படி ஆலோசனை தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு ஒழுக்கத்தையும், தேசப் பற்றுணர்வையும் வளர்ப்பதற்காக மூன்று தொடக்கம் ஆறுமாத காலம் வரையான பயிற்சியை அளிக்கலாம். இது சமூகத்திற்கும் அவர்களது குடும்பத்திற்கும் நன்மை அளிக்கும் என நம்புகிறேன் என மேலும் தனது பேச்சின் போது அவர் குறிப்பிட்டார்.

## அலுவலகத்தில் நித்திரைகொண்டு போராட்டம்

சேலம் மாநகர ஆட்சி முறை கேடுகளை விசாரிக்க உயர் நிலைக் குழு அமைக்குமாறு கோரி அ.தி.மு.க., த.மா.கா உட்பட்ட எதிர்க்கட்சிகள் 22 பேர் மாநகர ஆட்சி அலுவலகத்தில் தமது கடமைகளை மேற்கொள்ளாது உள்ளிருப்பு போராட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர். வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போராட்டம் மறுநாள் சனிக்கிழமை வரை தொடர்ந்ததால் அலுவலகத்திலேயே நித்திரை கொண்டு போராட்டத்தை நடாத்தியுள்ளனர். இதனையடுத்து சனிக்கிழமை இரவு பொலிசார் இவர்களைக் கைதுசெய்து கொண்டுசென்றனர்.

## நிபந்தனையற்ற பேச்சுக்கு வருமாறு மாலிக் அழைப்பு

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு வருமாறு இந்திய மத்திய அரசுக்கு ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இயக்கத்தின் தலைவர் யாசின் மாலிக் அழைப்பொன்றை விடுத்துள்ளார்.

விடுதலைக்காகப் போராடும் அமைப்புக்களுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடாத்தும் மத்திய அரசு, எங்களுடன் பேசுவதற்கு மட்டும் நிபந்தனை விதிக்கலாமா எனவும் இவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## பீகாரில் படகு விபத்தில் 30 பேர் பலி

பீகார் மாநிலத்தில் உள்ள கம்லா ஆற்றில் படகொன்று கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.


50 பேர் பயணம் செய்த இப் படகில் இருந்த 20 பேர் உயிர்தப்பியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கறுப்புக் கொடி காட்டியவர்கள் கைது

ஈரோட்டில் நடைபெற்ற ம.தி.மு.க மாநாட்டிற்கு வருகை தந்த மத்திய உட்துறை அமைச்சர் அத்வானிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக்கொடி காட்டிய தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சித் தலைவர் இளங்கோவன் உட்பட 700 பேர் வரையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் கறுப்புக்கொடியுடன் இவர்கள் கூடிய வேளை பொலிசார் இவர்களைக் கைதுசெய்தனர்.

## இணையத்தில் சென்னை

சென்னை மாநகரின் அனைத்து வீதிகளையும், முகவரிகளையும் இலகுவாக அறிந்து கொள்வதற்கு புதிய இணையத்தளம் ஒன்று விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது. www.navigateindia.com என்ற தளத்தினூடாக இவற்றினை அறிந்துகொள்ளலாம்.




## இராணுவ தளவாடங்கள் வழங்க ரஷ்யா முடிவு

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஐந்து நாள் பயணமாக ரஷ்யா சென்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் சேர்ஜிவ் மற்றும் துணை அமைச்சர் ஆகியோருடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். இப் பேச்சு வார்த்தைகளின் முடிவில் இந்தியாவிற்கு இராணுவ தளவாடங்களை வழங்குவதற்கு ரஷ்யா முன்வந்துள்ளது.

இதனையடுத்து ரஷ்ய அதிபர் விளாடிமீர்புட்டீனை சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பற்றிக் கலந்துரையாடினார். இச் சந்திப்பின்போது ரஷ்யாவின் தொழில் நுட்பம் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை பாகிஸ்தானுக்கு வழங்கக் கூடாது என இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது. இதே வேளை சீனாவிற்கு மிக் —29 ரக விமான இயந்திரங்கள் விற்கப்பட்டதற்கு இந்தியா சார்பில் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

## 13 மாலுமிகளுடன் மாயமான கப்பல்

துபாயில் இருந்து இந்தியா நோக்கி வந்துகொண்டிருந்த இந்தியக் கப்பல் ஒன்று 13 மாலுமிகளுடன் காணாமல் போயுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான இக் கப்பல் கடந்த மாதம் 19ம் திகதி துபாயில் இருந்து இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்த இக் கப்பலுடனான தொடர்புகள் கடந்த 21ம் திகதியுடன் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக் கப்பலைத் தேடும் பணியில் கடலோரக் காவல் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.



# 31ம் நாள் நினைவு வணக்கமும் நன்றி நவிலலும்

## அமரர் துரையப்பா திருநாவுக்கரசு

(நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்)



அன்பின் அப்பாவே! எம் ஆருயிரே !!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
முப்பத்தொரு நாட்கள் நகர்ந்துவிட்டன.
எங்களைச் சீராட்டிப் பாராட்டி
அன்புடனும் பாசமுடனும் அறிவுரைகள்
பலகூறி வளர்த்து வந்தீர்.
திரைகடல் ஓடித் திரவியம் தேடப்புறப்பட்டேன் – நான்
வீட்டில் உங்களுடன் பேசி வாழ்ந்த நாட்களோ சில – ஆனால்
வெளிநாட்டில் நான் நண்பர்கள் சூழ வாழ்ந்த நாட்களோ–பல
உங்கள் நரை திரை வருமுன் – என்
திருநிறை மணவாழ்வைக் காணக்காத்திருந்தீர்கள்
உங்கள் இறுதி ஆசையை நான் நிறைவேற்ற முன்
உங்கள் இறுதிப் பயணநாளும் வந்துவிட்டதே!
வையகம் நீங்கி வானகம் சென்றுவிட்டீர்கள் – இனி
என்று காண்பேன் என் அப்பாவை நான்...?

அன்னாரது பிரிவின்போது எம்முடன் துயர் பகிர்ந்த அனைத்து உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் நன்றி கூறிக்கொள்வதுடன், அன்னாரது 31ம் நாளையொட்டி 08.07.2000 சனியன்று Kirchgemeinde - Halls Romanshorn Str -06, 8580 Amriswil எனும் இடத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

குடும்பத்தினர் சார்பில்
து.தி. ஜெயராமன் (மூத்தமகன்) - சுவிஸ்
தொலைபேசி இல: 079 686 57 03

வையகத்தில்: 11.01.1932

வானகத்தில்: 06.06.2000

Pub. Sw.

# ஐ.நா பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க ஆதரவு தாருங்கள்

## - வாஜ்பாய் வேண்டுகோள்

இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவரும் பிரதமர் வாஜ்பாய் லிஸ்பொனில் நடந்த இந்தியா ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு. வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார சக்தி. எனவே ஐநா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர இடம் கேட்பது இயற்கையானது. இந்தியாவின் இந்தக் கோரிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆதரவு தரவேண்டும். புதிய பல முனைகொண்ட உலக அமைப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சீர் திருத்தம் முக்கியமானது ஆகும்.

எங்களுக்குள் (பாகிஸ்தானுடன்) வேறுபாடுகள் உள்ளன. அவற்றை நாங்கள் இருதரப்புப் பேச்சு மூலம் தீர்த்துக்கொள்வோம். இதில் 3வது நாடு தலையிடுவதற்கு இடம் இல்லை.

தீவிரவாதம், இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் பெரும் மிரட்டல் விடுத்துக்கொண்டு இருக்கிறது. இதைச் சமாளிக்க நாம் இருவரும் இணைந்து பணியாற்ற வேண்டியது அவசியம் ஆகும். தீவிர வாதத்தை புனிதப் போர் என்று கூறிக்கொள்கிறார்கள். அதை நாம் ஒட்டு மொத்தமாக நிராகரிக்க வேண்டும். நாகரிகமான நாடுகள் இதை ஏற்க முடியாது.

ஐ.நா. சபை 1945ல் தொடங்கப்பட்டதில் இருந்து அமைதி, பொருளாதார வளர்ச்சி நாடுகள் இடையே ஒத்துழைப்பு ஆகியவைகள்தான் அதன் நோக்கமாக இருந்து வருகிறது. தற்போது உலகம் மாறி இருக்கிறது. இந்த மாற்றங்கள் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எதிரொலிக்கவில்லை. இந்த மாற்றங்களில் எங்களது அணு ஆயுதத்திறனையும் பார்க்க வேண்டும். இந்தப் புதிய உண்மைகள் பாதுகாப்புச் சபையில் எதிரொலிக்கவேண்டும்.

உலகின் ஸ்திரத்தன்மைக்கும், அமைதிக்கும் தீவிரவாதம் பெரிய ஆபத்தாக உள்ளது. எல்லையைத் தாண்டும் தீவிர வாதத்தால் இந்தியா கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பாதிக்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான மக்களை இந்தியா இழந்துவிட்டது. இந்தக்கொடுமையை எதிர்த்து ஜனநாயகத்தில் கிடைக்கும் ஆயுதத்தால் போராடி வருகிறோம்.

கார்கில் சண்டையின் போதும், இந்திய விமானம் கடத்தப்பட்டபோதும், ஐரோப்பிய யூனியன் காட்டிய ஆதரவு பாராட்டத்தக்கது. அதுபோல் இந்திய உற்பத்திப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நல்ல வர்த்தக வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும். நம் இரு தரப்பில் உள்ள வர்த்தக பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வெளிப்படையான அணுகுமுறைகள் தேவை.

தற்போது சர்வதேச வர்த்தக நிலவரம் கவலை தரக்கூடியதாக உள்ளது. உலக வர்த்தக அமைப்பின் பல்வேறு ஒப்பந்தங்கள் சம அளவில் நிறைவேற்றப்படவில்லை. வளரும் நாடுகளின் வர்த்தக பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் வளர்ந்த நாடுகளுக்கு ஆர்வம் இல்லை. உலக வர்த்தக அமைப்பின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு இந்தியாவில் முதலீடு செய்ய அழைப்பு

ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்களை இந்தியாவில் முதலீடு செய்வதற்கு வருமாறு மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் முரசொலிமாறன் போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பொனில் நடைபெற்ற இந்திய வர்த்தக மாநாட்டில் கலந்துகொண்டு பேசியபோது தெரிவித்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற இம் மாநாட்டில் அவர் பேசுகையில், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளை நேரடியாகக் கொண்டுவரலாம். முதலீடு பற்றி ஒவ்வொரு 30 நாட்களிலும் அவர்களது வங்கிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். இல்லாதுவிட்டால் வெளிநாட்டு நேரடி வளர்ச்சி வாரியம் மூலமும் விண்ணப்பிக்கலாம். இதற்கான பதில்கள் ஒருமாத காலத்தில் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சென்னையில் குழந்தைகள் திரைப்பட விழா

சென்னையில் குழந்தைகள் திரைப்படவிழா ஜூலை 10 முதல் 15ஆம் திகதிவரை நடைபெற உள்ளது. தமிழக அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்காக முடிவு மேற்கொள்ளப்பட்டது. செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, கல்வித்துறை, மத்திய அரசின் இந்திய குழந்தைகள் திரைப்படக் கழகம் மற்றும் தமிழக திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழக செய்தி மற்றும் விளம்பர அமைச்சர் முல்லைவேந்தன் அடுத்த மாதம் 10ந் திகதியன்று கலைவாணர் அரங்கத்தில் இத் திரைப்படவிழாவைத் தொடக்கி வைக்கிறார்.

முதல் நாள் நிகழ்ச்சியில் சந்தோஷ் சிவன் இயக்கிய மல்லி திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

சென்னை வாழ் சிறுவர் சிறுமியர்க்குத் தரம் மற்றும் பொருள் செறிந்த திரைப்படங்கள் மூலம் ஆரோக்கியமான பொழுது போக்கு மற்றும் அறிவூட்டும் வாய்ப்பை வழங்கும் நோக்கத்தில் இத்திரைப்பட விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் மரணம்

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வைச் சேர்ந்த அறந்தாங்கி சட்டப் பேரவை உறுப்பினர் சி. அன்பரசன் (58) வியாழக்கிழமை புதுக்கோட்டையில் காலமானர். அவர் நெஞ்சுவலி காரணமாக தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மனைவி, மகன், மகள் உள்ளனர். எம்.ஜி.ஆர். காலத்தில் புதுக்கோட்டை தொகுதியில் அதி.மு.க. சார்பில் பேரவைக்குப் போட்டியிட்டவர்.

முதல் முறையாகக் கடந்த பெப்ரவரியில் நடந்த இடைத் தேர்தலில் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறந்த பேச்சாளர். எம்.ஏ. தமிழ் இலக்கியம் படித்தவர். எம்.ஜி. ஆர் அதி.மு.க. மாவட்டச் செயலாளராகவும் அவர் இருந்தார். பேரவையில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வின் ஒரே உறுப்பினராக அன்பரசன் இருந்தார்.

# தனக்குத் தானே இறுதிச்சடங்கு செய்து தற்கொலை செய்துகொண்ட விவசாயி

விவசாயி ஒருவர் தனக்குத் தானே இறுதிச் சடங்குகளைச் செய்துவிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று கர்நாடக மாநிலம் மண்டியா மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, 65 வயதான விவசாயி ஒருவர் தனது இரு மனைவிகளையும் இழந்த பின்னர் மன விரக்தியுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்நிலையில் தனது மகன் ஒருவரும் மனநிலை பாதிப்படைந்த நிலையில் அவர் தற்கொலை செய்து கொள்வதற்கான முடிவுக்கு வந்துள்ளார்.

சம்பவ தினத்தன்று இறந்தவர்களுக்குச் செய்கின்ற கிரிகைகளைத் தனது படத்தினை வைத்துச் செய்துவிட்டு விறகுகளை அடுக்கி, மண்ணெண்ணையைத் தனக்கு ஊற்றிவிட்டு விறகின் மேல் ஏறிப்படுத்து தனக்குத் தானே தீ மூட்டித் தற்கொலை செய்து இறந்துள்ளார். சம்பவத்தினை அறிந்து உறவினர்கள் வந்து பார்த்தபோது சிதைக்கு அருகில் அவரது படத்திற்கு மாலை போடப்பட்டு அதில் சந்தனம், குங்குமத்தினால் பொட்டும் வைக்கப்பட்டிருந்துள்ளது. இதனையடுத்து சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற பொலிசார், இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வருடந்தோறும் நோய்களினால் பல இலட்சம் மக்கள் மரணம்

இந்தியாவில் வருடந்தோறும் நோய்களினால் மரணம் அடைபவர்களின் எண்ணிக்கை பல இலட்சங்களைத் தாண்டி உள்ளன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டில் தொற்று நோய்களுக்கு உட்பட்டு சுமார் ஒரு கோடியே முப்பது இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர் என செஞ்சிலுவைச் சங்க அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளன.

சர்வதேச கூட்டமைப்பும் இஸ்லாமிய நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்பான கிரஸண்ட் சொசட்டியும் தெற்காசிய ஆரோக்கிய நிலைமை குறித்து ஆய்வு செய்தன.

அந்த ஆய்வின் அடிப்படையிலான ஒன்றைக் கடந்த புதன் கிழமை, உலக பேரபாயங்கள் அறிக்கை வெளியிட்டது.

இந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தியாவில் 1999-ம் ஆண்டில் இயற்கை சீற்றங்களால் 70 ஆயிரம் முதல் 1 இலட்சம் வரையிலான மக்கள் பலியாகி உள்ளனர்.

ஆனால் தொற்று நோய்களால் மற்றும் 1 கோடியே 30 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் காசநோய், மலேரியா போன்றவற்றால் ஆயிரக்கணக்கானவர்கள் பலியாகின்றனர்.

இந்தப் பிரச்சினைகளை முற்றிலும் தடுக்கப்பட வேண்டுமானால் பொதுமக்கள் ஆரோக்கிய நடவடிக்கையாக தொற்றுநோய் தடுப்பிற்கு பெருமளவில் முதலீடு செய்யப்படவேண்டியது அவசியம்.

ஆனால் இந்தியாவில் இது தொடர்பான பொறுப்புகளை அரசுகள் தட்டிக்கழித்து வருகின்றன. இதுவே பேரபாய நோய்கள் பரவுவதற்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றன. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் மக்களின் ஆரோக்கியம் பராமரிக்கப் படவேண்டும் என்பது அவசியமான நடவடிக்கையாகும்.

பெருகி வரும் நகரமயமாக்கல், காலநிலை மாறுதல், சுற்றுப்புற சூழல் மோசமாகுதல் ஆகியவை நோய்களைப் பரப்புவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன என அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# காஷ்மீர் சுயாட்சி தீர்மானம் விரைவில் முடிவு

## - வாஜ்பாய்

காஷ்மீருக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்று அம் மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீது மத்திய அரசு விரைவில் தீர்மானம் எடுக்கும் என பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். ஐந்து நாள் போர்த்துக்கல், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு பயணத்தை மேற்கொண்டு திரும்பியவேளை விமானத்தில் வைத்து நிருபர்களுக்கு வழங்கிய பேட்டியில் இதனைக்குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தங்கள் மாநிலத்துக்கு அதிக அதிகாரம் தேவை என்று காஷ்மீர் பேரவையில் சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்த நடவடிக்கையும் அதை நிறைவேற்றிய செயலும் இந்திய அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட விசயம்தான். இதைப் பற்றிய தகவல்களைப் பத்திரிகைகளில்தான் படித்தேன். அந்த விவரங்கள் போதுமானவை அல்ல.

தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அமைச்சரவை விரைவில் கூடி, இத் தீர்மானம் குறித்து விரிவாக ஆய்வு செய்யும். அதன் பிறகு இதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குப் பிறகுதான் இதை நாடாளுமன்றத்திலும் விவாதிப்பதா இல்லையா என்று முடிவு எடுக்கப்படும். இத் தீர்மானம் மீது விவாதம் மட்டும்தான் நடைபெறும் என்று முதல்வர் பாரூக் அப்துல்லா என்னிடம் கூறியிருந்தார்.

வாக்குப்பதிவு நடந்து, தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. 'காஷ்மீர் பிரச்சினை பற்றி சர்வதேச அரங்கில் தவறாகப் பேசிவரும் பாகிஸ்தானுக்கு இத் தீர்மானம் பயன்படாது. இத்தகைய தீர்மானங்களால் நம் நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து வந்துவிடாது. 'இதேபோன்ற கோரிக்கை பஞ்சாபிலும் எழுப்பப்படுவது குறித்து கவலைப்படுகிறீர்கள். எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்த்து வெற்றி பெறும் அளவுக்கு நம் நாடு வலிமை மிக்கது எனத் தெரிவித்தார்.

# தொடருந்து மோதல் ஓட்டுநர்கள் பலி

பஞ்சாப்பில் நடந்த தொடருந்து விபத்தொன்றில் இரு ஓட்டுநர்கள் பலியாகியுள்ளனர். அமிதசரஸ் துரித தொடருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்த தொடருந்து மீது வேகமாக வந்த துரிதகதி தொடருந்து மோதியதில் அதனைச் செலுத்தி வந்தவரும் அவருக்குத் துணையாக வந்த இன்னொரு ஓட்டுநரும் உயிரிழந்தனர். இவ் விபத்து ஏற்பட்டதற்கான காரணங்களை பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர்.


சிவாசினி வாகன சேவை

**Chivashini Transport**

வாகனத் தேவைகளுக்கு

24 மணி சேவை




தொடர்புகட்கு:சிவாஜினி வீடியோ

06 14 61 69 84 / 01 42 09 23 59

01 49 37 26 03 / 01 42 05 44 04

Pub. Fi




# ஓசாமா பின்லாடெனுடன் தொடர்பு ஒருவர் பிரான்சில் கைது!

*(29.06.2000)*

சவுதி கோடீஸ்வரரும், பல தாக்குதல்களுக்குக் காரணமானவர் என சந்தேகிக்கப்பட்டு தற்போது ஆப்கானிஸ்தானில் வசிக்கும் ஓசாமா பின் லாடெனுடன் தொடர்பு கொண்டவர் என்கின்ற சந்தேகத்தில் ஒருவரை பிரெஞ்சுப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

வட ஆபிரிக்க பூர்வீகத்தையும் பிரெஞ்சு பிரஜா உரிமையையும் கொண்ட 34 வயதுடைய நபர் ஒருவர் கனடாவில் இயங்கும் இஸ்லாமிய அமைப்பு ஒன்றுடன் தொடர்பு கொண்டவர் என்றும் அமெரிக்க கட்டடங்கள் மீது குண்டுத்தாக்குதல்களை நடாத்த அவர் சதித்திட்டம் தீட்டினார் என்றும் பொலிசார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இந்நபர் பிலிப்பினின் மணிலா விமான நிலையத்தில் வைத்து கடந்த டிசம்பர் மாதம் 16ம் திகதி கைது செய்யப்பட்டார். வெடி குண்டு தயாரிக்கும் பொருட்களை இவர் வைத்திருந்தார் என்ற குற்றத்தின் பேரில் 6 மாதங்கள் அங்கு சிறைத்தண்டனை அனுபவித்தவர், பிரான்சுக்கு சனியன்று நாடுகடத்தப்பட்டார். பாரிஸ் விமான நிலையத்தில் மேற்படி நபரை பொலிசார் கைது செய்தனர். தற்போது அமெரிக்காவில் சிறையில் இருக்கும் மற்றொரு சந்தேக நபரான ரெசாமுக்கும் இவருக்கும் தொடர்பு உள்ளதாக பொலிசார் நம்புகின்றனர். ரெசாமின் வழக்கு விசாரணை ஜூலை மாதம் இடம்பெறவுள்ளது. பாரிசில் கைது செய்யப்பட்டவரின் மேலுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் சுமார் பத்து வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனை அவருக்கு வழங்கப்படலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## போர்த்துக்கல் சிறையில் சந்தேக நபர் தற்கொலை

*(30.06.2000)*

பிரான்சில் மூன்று இளம் பெண்களைக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த ஒருவர் போர்த்துக்கலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டது அறிந்ததே. தலைநகர் லிஸ்பனில் சிறையொன்றில் அவர் வைக்கப் பட்டிருந்தார். அங்கிருந்து அவர் நாடுகடத்தப்படவேண்டும் என பிரான்ஸ் போர்த்துக்கல் அரசைக் கோரியிருந்தது. இதற்கிடையே அவர் கடந்த வியாழனன்று சிறைக்கூடத்துக்குள் தற்கொலை செய்துகொண்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஒரு இளம் பெண்ணின் கொலையில், சிட் அகமத் ரெசாலாவுக்கு தொடர்பு இருப்பது பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பிரான்சின் இரவு இரயில்கள் இரண்டில் இடம்பெற்ற கொலைகளுக்கும் அவருக்கும் தொடர்பு இருப்பதாக பொலிசார் சந்தேகித்தனர். கடுமையாக இவர் தேடப்பட்ட நிலையில் போர்த்துக்கல் தலைநரில் கைதானார். தான் அடைத்து வைக்கப் பட்டிருந்த சிறைக்குள் இதற்கு முன்பும் தற்கொலை செய்து கொள்ள இவர் முயன்றுள்ளார். இம்முறை படுக்கைக்குத் தீ மூட்டியுள்ளதாயும் அதனால் ஏற்பட்ட புகையினால் மூச்சுத் திணறி அவர் மரணமானதாயும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிடார் வகுப்புகள்
குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
(International Method)
கிடார் கற்பிக்கப்படும்.
சனி, ஞாயிறு, புதன், வியாழன்
ஆசிரியர் S.S. தில்லைச்சிவம்
56, Rue Riquet, 75019 Paris (M°: Riquet)
Tel: 01 46 37 56 69

## பாகிஸ்தானுக்கான தொடர் உதவிகளால் சீனாவுக்கு சிக்கல்கள்

*(03.07.2000)*

உலக வர்த்தக அமைப்பிற்குள் நுளையக் காத்திருக்கும் சீனா, பாகிஸ்தானுக்கு தொடர்ந்து செய்துவரும் ஆயுத தயாரிப்பு உதவிகள் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. பாகிஸ்தான் அணு ஆயுத முனையினைத் தாங்கிச் செல்லக்கூடிய நீண்ட தூர ஏவுகணைகளைத் தயாரிப்பதில் முழுமுயற்சியுடன் ஈடுபட்டு வருகின்றது. அதற்கு சீனா பின்னணியில் நின்று உதவிவருவதாய்ச் சொல்லப்படுகின்றது.

பாகிஸ்தான் அண்மையில் அமைத்துள்ள புதிய ஏவுகணை தயாரிப்பு தொழிற்சாலையில் சீன ஆய்வாளர்கள் செயலாற்றுவதாயும் ஏவுகணை வடிவமைப்பும் அரைவாசிக்கு மேல் சீனாவினுடையதே என்றும் சொல்லப்படுகின்றது. பாகிஸ்தானின் ஆயுத ஏற்றுமதி நாடுகளின் வரிசையில் சீனாவே முதன்மையானதாக தற்போது உள்ளது. அடிக்கடி சீனாவில் இருந்து ஏவுகணைத் தயாரிப்புக்கான தகடுகள் மற்றும் வழிகாட்டும் செயற்பாட்டுக் கருவிகள் போன்றவை பாகிஸ்தானுக்கு அனுப்பிவைக்கப்படுவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கடந்த சனியன்று லியாரி என்னும் நகரில் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் தனது அரசு விமானப் படையை நவீன மயப்படுத்தும் வகையில் சீனத் தயாரிப்பு F-17 யுத்த விமானங்களை வாங்கவுள்ளதாகவும் கூறியுள்ளார். ஏற்கனவே பாகிஸ்தான் விமானப் படையில் குறிப்பிடத்தக்க அளவு சீன விமானங்களே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

SIKARAM
சிகரம்
(இலங்கை) கொழும்பு வவுனியா — திருகோணமலை — மட்டக்களப்பு — மன்னார் — கனடா — சகல ஐரோப்பிய நாடுகள் — சிங்கப்பூர் தாய்லாந்து — ஹொங்கொங் — அவுஸ்திரேலியா — இந்தியாவின் அனைத்துப் பாகங்களுக்கும் 1 மணித்தியாலத்தில் கொடுப்பதற்கான புதிய சேவை ஒன்று எமது பணமாற்றுச் சேவையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
Singapore Conduct N°:
0065 - 96171175
Tel & Fax:
0065 7430644
பட்டுப்புடவைகள்,
ஆண், பெண்களிற்கான சகல புடவை வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பதப்படுத்திய மீன் வகைகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
சிகரம்
மேலும் விபரங்களிற்கு
Schoenegg Str-15
8004.Z.H
எங்களிற்கு வேறு கிளை ஸ்தாபனங்கள் கிடையாது.
மேலும் விபரங்களிற்கு:
T.P: 01 2912862
01 2913951
Rest: 01 2422718
H.P: 079-3008759
079-6225077
Fax: 01 2913534
உரிமையாளர்- சேகர்



# ரஷ்யா ஏவுகணை தொழில்நுட்பங்கள் வடகொரியாவுக்கு விற்பனை

(02.07.2000)

ரஷ்யா தனது நவீன ஏவுகணை தொழில் நுட்பங்களை வடகொரியாவுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோல் அணு ஆயுத தொழில் நுட்பங்களை ஈரானுக்கு விற்க அந்நாடு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

ஏவுகணைப் பாகங்களைத் தயாரிக்கும் ரஷ்ய உஸ்பெகிஸ் தான் நிறுவனங்களின் அதிகாரிகள் வடகொரியா அரச அதிகாரிகளுடன் விற்பனை பற்றிய பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர். ஏவுகணைத் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் லேசர் வழிகாட்டிக் கருவிகள், அலுமினியப் பாகங்கள் போன்றவற்றையே வடகொரியா ரஷ்யாவிடம் கோரியுள்ளதாயும் ஜேர்மனுக்கு ஸ்கட் ஏவுகணைகளைக் கொரியா மூலம் விற்பனை செய்யும் நடவடிக்கைகளையும் ரஷ்யா மேற்கொண்டுள்ளது. அதேவேளை ரஷ்யா, ஈரானுக்கு அணுஆயுத தயாரிப்பில் பயன்படுத்தப்படும் ட்ரிட்டியம் வாயுவை ஏற்றுமதி செய்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் வடகொரியாவுக்கான ஆயுத விற்பனையானது வடக்கு - தெற்கு கொரியாக்களிற்கிடையே ஏற்பட்டுள்ள சமாதான உறவுகளுக்குப் பின்னடைவுகளை ஏற்படுத்தாது என்று கொரிய பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# லைபீரியாவில் ஐ.நா. படையினர் விடுதலை

(30.06.2000)

சியோரா லியோனில் கடந்த ஜூன் மாதம் புரட்சிப் படைகளால் கைதுசெய்யப்பட்ட ஐ.நா படையினரின் ஒரு தொகுதியினரை அவர்கள் லைபீரியா நாட்டில் வைத்து விடுவித்துள்ளனர். லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில் அரசு விடுத்த அறிக்கையொன்றில் மேற்படி விடுதலை பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் சமாதானப் படையின் உறுப்பினர்கள் பல நூறு பேர்கள் புரட்சிப்படையினரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் சியோரா லியோனின் பல பகுதிகளிலும் வைத்து கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும் பகுதியினர் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய படைப்பிரிவைச் சேர்ந்த 21 உறுப்பினர்களை இப்போது அவர்கள் விடுவித்துள்ளனர். எந்தவித நிபந்தனைகளோ அல்லது கோரிக்கைகளோ இவ் விடுதலைக்காக முன் வைக்கப்படவில்லை என்று லைபீரிய அரசு தெரிவித்துள்ளது. இப்போது தலைநகரில் தங்கியுள்ள அவர்கள் விரைவில் ஐ.நா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று அரச அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் – இந்தியா கூட்டு படை நடவடிக்கை

(03.07.2000)

இஸ்ரேலும், இந்தியாவும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெதிரான செயற்பாடுகளை ஒன்றிணைந்து மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன. பயங்கரவாத செயற்பாடுகளைச் சந்திப்பதில் கூட்டு அமைப்பு ஒன்றினை அமைப்பது குறித்தும் இரு நாடுகளும் ஆராய்ந்துள்ளன.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் இஸ்ரேலுக்கு நான்குநாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட்லேவியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இரு அமைச்சர்களும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சந்தித்துப்பேசுவதென்று முடிவெடுத்தனர். கடந்த மாதம் இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி இஸ்ரேலிய படைகள் விலகிய வட பகுதி எல்லைப்பகுதிக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவில் இந்திய வர்த்தக கண்காட்சி இடம்பெற்றது. அதன் பின் இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகம் 50 விகிதத்தால் அதிகரித்துள்ளது. இதற்கிடையே இந்திய அமைச்சர் தனது விஜயத்தில் இராணுவ ரீதியான கூட்டமைப்பு தளவாட விற்பனை போன்றவை குறித்தும் பேச்சுக்கள் நடத்தினார். காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாதுகாப்பு வலையத்தின் இராணுவ தளவாடங்களை மேலும் நவீன மயப்படுத்தும் வகையில் தளவாடங்களை இஸ்ரேலிடம் இருந்து இந்தியா வாங்கவுள்ளதாயும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா அதிகாரிகள் பாக்தாத்தில் சுட்டுக்கொலை

(29.06.2000)

ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தில் அமைந்துள்ள ஐ.நாவின் உதவி நிறுவனத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இரண்டு ஐ.நா அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் கடந்த புதனன்று இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர் ஐநாவின் விவசாய மற்றும் உணவுத்துறை அலுவலகத்தின் உள்ளே செல்ல முயன்றபோது அங்கிருந்த ஊழியர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார். அதன்போது இரண்டு அதிகாரிகள் கொல்லப்பட ஏழு பேர் காயமடைந்தனர். அலுவலகத்தின் உள்ளே புகுந்தவர் அங்கிருந்த நாற்பதுக்கு மேற்பட்டோர்களை பணயக் கைதிகளாக வைத்து சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் அவர்களை விடுதலை செய்வதாக அறிவித்தார். ஐ.நா ஈராக்கின் மேல் விதித்துள்ள தடைகளை நீக்கி, உணவு விநியோகத்தை அதிகரிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விதித்திருந்தார். இதற்கிடையே அப்பகுதியைச் சுற்றிவளைத்த ஈராக்கிய படையினர் பணயக்கைதிகளை விடுவித்து துப்பாக்கி நபரை கைது செய்தனர். இச் சம்பவத்தில் ஒரு ஈராக்கிய பிரஜையும் ஒரு சோமாலிய பிரஜையையும் கொல்லப்பட்டனர்.

# யூகோஸ்லாவியா ஈராக் ஒப்பந்தங்களில் கைச்சாத்து

(03.07.2000)

யூகோஸ்லாவியாவும், ஈராக்கும் தமக்கிடையே பொருளாதார, தொழில் நுட்பக் கூட்டுறவுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளன. சர்வதேச ரீதியில் இரு நாடுகளும் பொருளாதார தடைகளால் சிக்கல்களை அனுபவித்துவருகின்றன. இந்நிலையில் இவ் ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க பலன்களை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈராக்கிய வர்த்தக அமைச்சர் மொகமத் மெஹ்தி சலாஹ் யூகோஸ்லாவியாவுக்குக் கடந்த வாரம் விஜயமொன்றினை மேற்கொண்டார். அவ்விஜயத்தின் போது அதிபர் மிலோசோவிச் மற்றும் உயர் அரச பிரதிநிதிகள் போன்றோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். யூகோஸ்லாவிய வர்த்தக அமைச்சர் பொரிசாவுக் கோவிச்சும் ஈராக்கிய வர்த்தக அமைச்சரும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது, யூகோஸ்லாவியாவிடமிருந்து கோதுமை இறக்குமதி செய்வதை ஈராக்விரும்புகின்றது என்றும் யூகோஸ்லாவியா ஈராக்கிய மசகு எண்ணெயை வாங்க விரும்புவதாகவும் குறிப்பிட்டனர். ஆனால் மேற்கண்ட வர்த்தக ஒப்பந்தங்கள் எதனையும் ஐ.நாவின் பொருளாதாரத் தடை குழு குழப்பமாம் என்றும் மேற்கண்ட அமைச்சர்கள் தெரிவித்தனர்.

# செச்சினிய நகரங்களில் குண்டுத் தாக்குதல்கள் 40 பேர் பலி

(03.07.2000)

செச்சினியாவின் பல நகரங்களில் கடந்த ஞாயிறன்று ஒரே வேளையில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களால் 40 வரையானோர் கொல்லப்பட்டு 74 பேர் காயமடைந்து பலர் காணாமலும் போயுள்ளனர் என்று ரஷ்ய செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

ரஷ்ய அரச கட்டுப்பாட்டிலுள்ள 5 நகரங்களில் மேற்படி குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இவைகளில் சில தற்கொலைத் தாக்குதல்கள் என்றும் சொல்லப்படுகின்றது. தலைநகர் குரொஸ்னிக்கு அண்மையில் அமைந்திருந்த இராணுவ கட்டடம் ஒன்றினை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட தற்கொலைத்தாக்குதல் ஒன்றில் மாத்திரம் 25 பேர் கொல்லப்பட்டு, ஏராளமானோர் காயமடைந்தனர். செச்சினிய போராளிகள் அண்மைக்காலமாக ரஷ்ய இராணுவம், மற்றும் பொலிசார் மீது தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். சைபீரியாவிலிருந்து செச்சினியாவில் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்காகக் கொண்டு வரப்பட்ட பொலிஸ் அணியினரே கடந்த ஞாயிறன்று நடந்த தாக்குதலில் பலத்த இழப்புக்களைச் சந்தித்தவர்களாவர்.

செச்சினியாவில் குடேர்ம்ஸ், யூரூஸ் மார்த்தான், நோவோர் குரெஸ்னி, அர்குன், உயாகல் மலைப்பகுதி போன்ற பகுதிகளிலேயே செச்சினிய போராளிகள் தங்களது தாக்குதல்களை அதிகரித்துள்ளனர். இப்பகுதிகளில் பின்னர் ரஷ்ய உலங்கு வானூர்திகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 15 பேர் வரை படுகாயமடைந்துள்ளதாகச் செச்சினியச் செய்திகள் தெரிவிக்கின்றன.


புஸ்பவனம் குப்புசாமி குழுவினர் வழங்கும்

**எழுச்சி விழா**

Concordia, Hoge Zand 42, 2512 EM Den Haag
(Tram 2,6,10-Bus: 25 இன் `Brouwersgracht' தரிப்பிடத்திற்கு அருகில்)

**08.07.2000 சனி மாலை - 5 மணி**

எழுச்சித் தமிழிசை மன்னன் தமிழிசைப் பாணன் கலைமாமணி
திரு. புஸ்பவனம் குப்புசாமி
திருமதி. அனிதா குப்புசாமி
குழுவினர் கலந்து கொள்ளும் எழுச்சி இசை நிகழ்ச்சி
மற்றும் சிறப்புரையும் இடம்பெறும்.

எழுச்சி கொண்ட மக்களாய் அனைவரும் வருக! வருக!
உங்கள் பங்களிப்புக்களை அள்ளித் தருக!! தருக!!

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் – நெதர்லாந்து
0224127181, 0703461963, 0621852914




* மளிகைப் பொருட்கள்
* உடன் மரக்கறிகள்
* உடன் மீன் வகைகள்
* மற்றும் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

**Sri Murugan**
Wiesen Str-10, 4900 Langenthal, Switzerland
உரிமையாளர்: மாணிக்கம் இளமுருகன்
Tel: 062/922 17 98-Fax: 062/922 78 33

**Palm Beach**
RESTAURANT
10%OFF ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road, Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

**ARCHIE'S**
Audios - Videos - CD's
Whole Salers & Retailers
205 Edgware Road, Colindale, London NW9 6LY
T.P: 0181-205 3652

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு
**KANNA Euro Enterprises**
198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate, N6 5BB, London.
T. Phone- 0181-3483356

**ஈழமுரசு**
Eelamurasu Weekly

பிரித்தானியாவிற்கான சந்தாக் கட்டணத்தினை (வருடம் ஒன்றிற்கு £60, 6 மாதங்களுக்கு £32) செலுத்துவதன் மூலம் ஈழமுரசு உங்கள் வாசல் தேடி வருவதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**பிரித்தானிய வணிகம்**

பிரித்தானியா நாட்டிற்கான விளம்பரங்களை ஒரே பக்கத்தில் பிரித்தானியப் பதிப்பில் 'பிரித்தானிய வணிகம்' என்ற பகுதியில் இடம் பெறுவதற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்துடன் விளம்பரப்படுத்த இப்பகுதி உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றது.

உங்கள் விளம்பரம் தொடர்பான தேவைகளுக்கு நாடுங்கள்
EELAMURASU (அஞ்சல் வழி)
5, Saxony Parade, Hayes, UB3 2TQ
Fax/Tel: 0181-56 16 877

சிறிய வரி விளம்பரங்களுக்கு £5 மட்டுமே!

ஜெயந்தன் Tel: 0956908145
ஹரி Tel: 07887874177
பாஸ்கரன் Tel: 0181-7698302

**ASIAN FUNERAL DIRECTORS**
24 மணிநேரச் சேவை





அமரத்துவம் அடைந்தவர்களது இல்லங்களுக்கான பிரத்தியேக விஜயங்கள், அமரர்களைக் குளிப்பாட்டுதல் - ஆடை அணிவித்தல் - அஞ்சலிக்கு வைத்தல், வார இறுதி ஈமக்கிரியைகளுக்கான ஒழுங்குகள், மலர் வளையங்களுக்கான ஒழுங்குகள், மதச் சடங்குகளுக்கான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் அமரர்களிக் பேழைகளைச் சர்வதேச ரீதியில் காவிச்செல்லும் பணி.
LONDON 0800 026 2335
MIDLANDS 0800 026 2334
F·O·S
Part of the SCI Group of Funeral Directors
Member of the Funeral Ombudsman Scheme and the Funeral Standards Council
Pub.Lon

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கலகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்
**ஈழநிலா**
தொடர்புகட்கு:
இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69

**SHASME Super Store**
இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள் வீடியோ, ஓடியோ, CD, சஞ்சிகைகள், பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல் உணவுப்பொருட்கள் Gnanam Phone Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை
211, Lady Pool Road, Balsall Heath, Birmingham B 12, 8 LG
Tel No: 0121-4465896


# உணவுப் பற்றாக்குறையைப் போக்க உதவுங்கள்

உங்களுக்கு 'ரீடோர்' என அழைக்கப்படும் தமிழீழ மேம்பாட்டு நிறுவனத்தைப்பற்றித் தெரிந்திருக்கும். அதுமட்டுமல்ல, எமது தாயகத்தில் அது செய்துவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும் உங்களுக்குப் புரியும். எமது தாயகத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் செயற் திட்டங்கள், பலமான ஆய்வுகளுக்குப் பின்னரே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்தச் செயற்திட்டங்களிற்குத் தேவையான நிதியுதவியும் தமிழீழத்தின் குடிமக்களின் பங்களிப்பினால் வருவதே! தற்போது எமது தாயகத்தில் எமது சகோதர சகோதரிகளின் வாழ்வினை மேம்படுத்துவதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செயற் திட்டங்களுக்கு உதவி செய்வது தமிழீழக் குடிமக்களின் தார்மீகக் கடமையாகும்.

தற்போது சிறீலங்கா அரசினால் எமது தாயகத்திற்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் பலத்த இன்னல்களை எம் மக்களுக்குத் தோற்றுவிப்பதை நீங்கள் அறிந்துதான் இருப்பீர்கள். இந்தத் தடையால் எமது செயற் திட்டங்களும் சில சிக்கல்களை எதிர்நோக்கியதால் நாம் அவற்றை வெற்றிகொள்வதற்காக உள்ளூர் மூல வளங்களையே மாற்றீடாகக் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது. எமது தொழில் நுட்பத்தை நாம் சுயமாகவே மேம்படுத்துவதற்கு விரிவான உதவிகள் தற்பொழுது தேவைப்படுகின்றன. குறிப்பாக எமது நிறுவனத்தினால் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பின்னர் எமது தாயகத்தின் விளைநிலத்தில் பயன்பாடு செய்யக்கூடியதாக மிகப் பொருத்தமான உரவகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அற்புதமான உரமே 'பயிரமுது' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பயிரமுது எமது விளைநிலத்தில் பயிரிடக்கூடிய பலதரப்பட்ட பயிரினங்களுக்கும் அற்புதமாக பலனளிக்கிறது. பயிரமுதானது சிறீலங்கா அரசின் உணவுத் தடையாலும், உணவுப் பற்றாக்குறையாலும் வாடும் எம் தேசத்திற்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். ஆனால் பயிரமுதை நாம் போதிய அளவில் தயாரிப்பதற்கு நிதிஉதவி தேவைப்படுகிறது. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கணிப்பீட்டின்படி இதற்காக 5 மில்லியன் ரூபா பணம் தேவைப்படுகின்றது.

இந்த நிதியைத் திரட்டிக்கொள்வதற்காக தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், உங்கள் ஆதரவோடு நல்வாய்ப்பு சீட்டிழுப்பினைச் செய்ய முடிவு செய்துள்ளது. எமது தேசத்தில் பசுமைப் புரட்சி ஒன்று தோன்றிட உங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. நீங்கள் வழங்கும் பங்களிப்பு எமது தாய்நிலத்தில் தலைவிரித்தாடும் உணவுப் பற்றாக்குறையை நீக்கிவிடும் என்பதும் எமது எதிர்பார்ப்பு. நீங்கள் உடனடியாகச் செய்யவேண்டியது இதோ!

தயவுடன் நீங்கள் வாங்கக்கூடிய அல்லது உங்களால் விற்கக்கூடிய நல்வாய்ப்புச் சீட்டுக்களின் தொகையை தமிழீழ பொண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

விற்கப்பட்ட சீட்டுக்களின் அடிக் குறிப்புக்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பின்வரும் முகவரிக்கு 14.08.2000 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள். இது தொடர்பாக நீங்கள் அவசர தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

TEEDOR (UK), 202 Long Lane, London SE1 4QB,

தொலைபேசி இலக்கம்: 020 7403 4554

உங்கள் காசோலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்ற பெயரில் வரையுங்கள். வெற்றி பெற்றவர்கள் பற்றிய விபரம் நிறுவனத்தால் அறிவிக்கப்படும். இதற்காக நிறுவனத்தின் தகவல் இணையப் பக்கத்தையும் நீங்கள் பார்வையிடலாம். http//www.teedor.org

அதிர்ஷ்டலாபச் சீட்டு
பயிரமுது பசளை உற்பத்தி நிதிக்காக
Name:........................................
Address:........................................
........................................
........................................
Tel:........................................
£1.00
TEEDOR-UK

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
அதிர்ஷ்டலாபச் சீட்டு
"பயிரமுது" பசளை உற்பத்தி நிதிக்காக

| | |
|---|---|
| 1st Prize | New Pentium III computer |
| 2nd Prize | Disneyland ticket for two people (including travelling from Waterloo, London to Disneyland) |
| 3rd Prize | Hi-Fi set |
| 4th Prize | Mountain Bike |
| 5th Prize | Wall clock - 6 prizes |

உற்பத்தியைப் பெருக்குவோம்
பட்டினிச் சாவிலிருந்து மக்களைக் காப்போம்
28 August 2000 - Monday
£1.00
TEEDOR-UK, 202 Long lane, London SE1 4QB Tel. 020 7403 4554



ஈழமுரசு

Eelamurasu Weekly

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# உலக நாடுகள் உணரும் காலம் எப்போது?


இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போகின்றோம் என அடிக்கடி கூறியபடி பேச்சுவார்த்தை மேசையில் 'குந்திய' சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ரணிலின் ஐக்கியதேசியக்கட்சியும் தமது நாடகத்தின் ஒரு அத்தியாயத்தினைக் கடந்த 30ம் திகதியுடன் முடித்துவிட்டு எதிர்வரும் 7ம் திகதி அதற்கொரு உப காட்சியையும் அரங்கேற்றப்போவதாக அறிவித்துள்ளன. தற்பொழுது அதிகாரப்பகிர்வு அலகு, நீதி பரிபாலனம்[!?] ஆகிய இரு விடயங்களில் தாம் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் இவ்விரு பேரினவாதத் தரப்புக்களும் சூசகமாகத் தெரிவித்துள்ளன.

சிறீலங்காவின் ஒற்றையாட்சியின் கீழ் பிராந்தியங்களின் ஒன்றியமாக சிங்கள அரசு இருக்கும். தேர்தல் நீதிபரிபாலனம், பொதுச்சேவை ஆகிய விடயங்களுக்கு சுயேட்சை [?] ஆணைக்குழுக்களை நியமிக்கவும் இரு தரப்பும் இணக்கம் கண்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இருபேரினவாதத் தரப்புக்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டே தமது குள்ளத்தனமான, கேடுகெட்ட அரசியல் சிந்தனையை அரங்கேற்றியுள்ளன.

இந்த விடயத்தைப் பற்றித் தமிழ்த் தேசியமும் பெரிதளவாக அலட்டிக்கொள்ளாவிட்டாலும் சிறீலங்காவையும் தற்போது அதன் தலைவரான சந்திரிகாவையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் சக்திகளாக நம்பும் சர்வதேச சக்திகளுக்கு இவர்களின் சுயரூபத்தை மீண்டும் ஒருமுறை தோலுரித்துக்காட்டவேண்டியது அவசியமாகிறது.

தமிழ்த் தேசியத்தின் தன்னாட்சி உரிமை, தேசியத் தகைமை போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை உதறித்தள்ளிவிட்டுத் தனது அப்பட்டமான பேரினவாத மனோபாவத்தை இருதரப்பினரும் தற்பொழுது வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக தமிழ்த் தேசியத்தின் பாரம்பரிய நிலங்களைக்கூட சிங்களவர்களின் கைகளில் அவை இருக்கவேண்டும் என்ற குரூரத்தனத்துடன் இரு தரப்பினரும் இணக்கத்திற்கு வந்துள்ளனர் அவர்கள் வெளிப்படையான பார்வைக்கு கொளுக்கட்டை, மோதகம் போல இருந்தாலும் அதன் உள்ளூரப் பொதிந்துள்ளவையெல்லாம் அப்பட்டமான பேரினவாத 'உள்ளுடன்'தான்.

காட்டு வளப்பகுதிகள், ஆற்று நிலங்கள், பூங்காக்கள், கடற்பரப்புக்கள், மலைப்பிரதேசங்கள் ஆகியவை சிங்களவர்கள் வசமே இருக்க வேண்டும் என்ற இணக்கத்திற்கு பொதுஜன ஐக்கியமுன்னணியும் ஐக்கிய தேசியக்கட்சியும் வந்திருக்கின்றன. தமிழர் தாயகத்திற்கு கடற்பிரதேசம் முக்கியமான ஒரு வளம் ஆகையால் அதனைக் கண்வைத்தே சிங்களம் தனது 'சேட்டையை' விட்டிருக்கின்றது. இவ்விரு பேரினவாதத் தரப்புக்களும் தமது 'வழிகாட்டிகள் காட்டிக்கொடுத்தபடி' தமிழ்த் தேசியத்தின் பொருளாதாரத்தை முடக்குவது, தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்துவது, தமிழ் மக்களது பாரம்பரிய வாழ்விடங்களைச் சிதைப்பது ஆகிய விடயங்களில் ஏட்டிக்குப் போட்டியாக முனைப்பாகச் செயற்பட முனைகின்றார்கள். இதற்காக தமிழர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கும்பல்களின் உதவியினையும் இருதரப்புமே பெற்றுக்கொள்வது தமிழ் மக்களுக்குத் தெரியாத விடயமல்ல. ஒருபுறம் இராணுவ இயந்திரத்தை ஏவியபடி, மறுபுறம் சர்வதேசத்திற்கு போக்குக்காட்ட இவ்வாறான பேச்சுவார்த்தை நாடகங்களை இவர்கள் நடாத்தினாலும் இருதரப்பினராலும் இணக்கம் காணப்படும் இவ்வாறான விடயங்களே அவர்களின் உள்ளூர நோக்கத்தினை அம்பலப்படுத்துவதால் இதனை சர்வதேசம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதே தமிழ்த்தேசியத்தின் அவாவாகும்.




நன்றி: தினக்குரல்

# பாலசிங்கத்தின் அழைப்பு!

பார்வை

சிறீலங்காவினால் சோடிக்கப்பட்டு பறக்கவிடப்பட்ட பட்டம் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு.பாலசிங்கம் அவர்களினால் தரையிறக்கப்பட்டுள்ளது. சந்திரிகாவின் தீர்வுப்பொதியும், முழு சிங்களக் கட்சிகளும் - தமிழ் கூலிக் குழுக்களும் இணைந்து நடாத்திய சந்திப்பு நாடகங்களும் சிங்கள பேரினவாத நலன்களைப் பாதுகாக்கவேயென திரு.பாலசிங்கம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓயாதஅலைகளின் நெருக்குவாரம், பொருளாதார சுமைகளை அடைப்பதற்காக உலகின் கடனைப் பெறவேண்டிய தேவை, தேர்தல் போன்ற லாபங்களுக்காக சந்திரிகா அரசும், ஊடகங்களும் பெரும் பரப்புரை நாடகமொன்றை ஆடின. சந்திப்புக்கள், விவாதங்கள் நடத்தப்பட்டன. இடைக்கால நிர்வாக சபை பற்றிக் கூட்டணி சம்பந்தர் போன்றோர் விளக்கம் கொடுத்தனர். ஆனால் இவை அனைத்தும் பொய் என்பதை புலிகளின் ஆலோசகர் அழுத்தியுரைத்துள்ளார். திம்புவில் 1985ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளைக் கருத்தில் எடுக்காது காலத்திற்கு காலம் கொண்டு வரப்படும் தீர்வுப் பொதிகளைப் புலிகள் பரிசீலிக்க மாட்டார்கள் என பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா இன்னமும் பாலசிங்கத்தின் அறிவிப்புக்குப் பதிலளிக்கவில்லை. அமைச்சர்கள் குழப்பமான பல்வேறு பதில்களை வழங்கியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க மெதுவாக நாடகத்திலிருந்து கழன்றுவிடப் பார்க்கின்றார். ஊடகங்கள் புலிகளின் பதிலைப் புலிகளின் நிராகரிப்பு என தலைப்பிட்டு பிரச்சினையிலிருந்து கழன்றுவிட முயல்கின்றனர்.

உண்மையில் பாலசிங்கம், சிங்கள அரசுக்கும் தமிழீழத்திற்கும் இடையேயான சிக்கலை விரிவான ஆய்வுக்குக் கொண்டு செல்லவே முயன்றுள்ளார். திம்புக் கோட்பாடுகள் என்ற அடிப்படை நிலைப்பாடு ஊடாக புலிகள் சிங்கள அரசுக்கும் தமிழீழத்திற்கும் இடையேயுள்ள உறவை வரைவு செய்துள்ளனர். ஆனால் சந்திரிகா இவ் உண்மையை தந்திரோபாயமாக பின்தள்ளிவிட்டு வெறும் சோடனைகள் கொண்டதொரு தோற்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு எம்மை நிர்ப்பந்திக்கின்றார்.

சந்திரிகாவின் மௌனம் இக் கெட்டிக்காரத்தனமான புறந்தள்ளலின் வெளிப்பாடேயாகும். 1985 முதல் நாம் கூட்டாக முன்வைத்துவரும் வேண்டுகோளை பகிரங்கமாக விவாதித்து கருத்துக் கூறினால் அது சந்திரிகாவின் முகத் தோற்றத்தைக் கிழித்துவிடும். தமிழர்களின் தாயகத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என பகிரங்கமாகக் கூறின் அதுவே தமிழீழத்தின் முழு விடுதலைக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையாகிவிடும். சந்திரிகாவின் இக் கெட்டிக்காரத்தனத்தை பாலசிங்கம் இன்று சவாலுக்கு அழைத்துள்ளார். உலக அரங்குமுன் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமைச் சார்ந்த தீர்வை விவாதிக்குமாறு சிங்களப் பேரினவாதத்தை அவர் நிர்ப்பந்தித்துள்ளார்.

★ ★ ★

## அடைப்புக்குறிக்குள் அதர்மம்

புலிகள் பேச்சுக்களை மறுப்பவர்கள் என்பதே இந்தியாவில் புலிகள் - தமிழர் பரப்புரையில் முன்நிற்போரின் ஓலமாகும். இதனை டில்லியில் வைத்து நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்கெம் மறுத்தார். புலிகள் பேச்சுக்களில் ஆர்வம் காட்டுகின்றனர் எனவும் புலிகளுக்கு இணக்கத் தீர்வு பற்றிய விருப்பம் உண்டு என அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். மேலும் நோர்வேக்கும் புலிகளுக்கும் இடையேயுள்ள உயர்மட்டத் தொடர்பை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியச் செய்தியாளர்கள் சிலரின் அதர்மமான பத்திரிகா தர்மம் இதனை கண்டுகொள்ளவில்லை. புலிகள் பற்றிய இவ் அபிப்பிராயத்தை செவ்வி வடிவில் பிரசுரித்த செய்தியாளர் கூட நீண்ட காலமாக ஈழத்தமிழர்கள் விடயத்தில் நியாயமாக நடப்பவரில்லை. தன்னால் தொகுக்கப்பட்ட செவ்விக்கு அவர் எழுதிய தலைப்பு புலிகளை கலைத்து பின்தொடரல் [(S)talking tigers] என்பதாகும். புலிகளை எதிர்க் கோணத்தில் காட்டியே பழக்கப்பட்டவர்களின் மனோநிலையே இத் தலைப்பாகும். வைகோவின் பெரு வெற்றிகரமான மாநாட்டால் துவண்டு போனவர்கள் இப்படி எழுதியே தம்மை தேற்றிக் கொள்வதாக தெரிகின்றது.

★ ★ ★

## பிக்குக்களின் பயணம்

தாய்லாந்துக்கும் பிற பௌத்த நாடுகளுக்கும் சிங்களப் பிக்குக்கள் பயணம் செய்கின்றனர். அவர்கள் பௌத்தத்தைப் பரப்பச் செல்லவில்லை. மாறாக தமது அரசின் போரிற்கு உதவிடுமாறு கேட்டு தூது செல்கின்றனர். புலிகளின் நடமாட்டம் அங்கெல்லாம் காணப்படுவதாகவும் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு புலிகளை விரட்ட வேண்டும் எனவும் பௌத்த பிக்குமார் அங்கு கேட்கவுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

தமது இறந்த உடல்களின் மீதுதான் சிறீலங்காவில் மாகாண சுயாட்சி கூட இடம்பெறலாம் என அறிக்கைவிடும் பிக்குக்கள், நோர்வே தூதுவரை சந்தித்து தமது நாட்டுப் பிரச்சினையில் எவரும் தலையிட வேண்டாம் எனக் கேட்டது கொழும்பில் சிரிப்பை வரவழைத்துள்ளது. ஆனையிறவு புலிகளினால் மீட்கப்பட்டபோது இந்தியத் தூதராலயம் முன் நின்றவர்கள் இப்போது இஸ்ரேலின் கிபீர், பாக்கிஸ்தானின் பல்குழல் ஏவுகணைகள் என்பனவற்றைப் பற்றிய செய்தி கேள்விப்பட்டவுடன் வெளிநாட்டு உதவியே தேவையில்லையென அறிவிப்பது வேடிக்கையானது. ஆனால், பலம் பெற்று வரும் சிங்கள உருமய எனும் பாசிச கட்சியின் தலைமையாகப் பிக்குக்கள் உருவாகியுள்ள நிலையில் சிங்களம் தன் இறுதிப் பொறியில் வீழ்வதைக் காணக்கூடியதாக வுள்ளது.

★ ★ ★

## உலக வங்கியின் பரிசீலனை

உலக வங்கி உதவியுடன் சிங்கள அரசு நடாத்தும் கல்விப் புனரமைப்புப் பணிகள் உண்மையில் சிங்கள இனவாதத்தைக் கக்கும் பணிகளாகவே இடம்பெறுகின்றது. சிங்கள பண்பாடு மற்றும் வரலாற்றை தமிழர்களுக்கு போதிக்கும் தவறான தகவல்கள் எழுதப்பட்ட தமிழ்ப் பாடப்புத்தகங்கள் இதனை நிரூபித்தன. அதனை தமிழாசிரியர்கள் சுட்டிக்காட்டியபோது சிங்கள அரசு மௌனமாகவிருந்தது. பின்னர் புத்தகங்கள் அச்சிடப்பட்டுவிட்டதால் பின்னர் அவை பற்றி ஆராயலாம் எனக் கூறப்பட்டது. ஆனால் சிங்கள நூலில் சில தவறுகள் ஏற்பட்டபோது உடனடியாகத் தலையிட்ட சந்திரிகா, திருத்துமாறு அரசு ஆணையைப் பிறப்பித்தார்.

இப்போது அடுத்த ஆண்டுக்கான புத்தகம் தயாரிக்கப்படுகின்றது. தமிழர்களின் வரலாறுகள் திரிக்கப்பட்டுள்ளதை தமிழாசிரியர்கள் சுட்டிக்காட்டிய போது சிங்கள அரசு ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. 1999ம் ஆண்டு நூலிலும் பார்க்க மிக மோசமான பிழைகள் 2000 ஆண்டிற்கான நூலில் இடம்பெற்றுள்ளதை ·ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர்.

ஈற்றில் இத் திட்டத்திற்கு நிதி உதவும் உலக வங்கியிடம் ஆசிரியர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். தமிழர்களின் வரலாற்றை திரிக்கும் பிழைகள் 2001ம் ஆண்டிற்கான நூலில் உள்ளதை உலக வங்கி பரிசீலிப்பதாக கூறுகின்றது. கொழும்பில் வடக்குகிழக்கு இடைக்கால சபைக்கு ஆட்சிக்காலம் 5 வருடம் என வாயைப் பிழந்து கனவுகாணும் கூட்டணி வாயே திறக்காது சந்திரிகாவிடம் நல்ல பெயர் வாங்கியுள்ளது.

- ராஜா

## யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் நிலை குறித்து கலந்துரையாடல்

*(03.07.00)*

யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நிலை குறித்து மாணவர்களின் பெற்றோர்கள் அவசர கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர். நேற்று முன்தினம் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்ட பல்கலைக்கழக மாணவர் பெற்றோர் சங்கத் தலைவரின் தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. இதில், யாழ். குடாவில் தங்கள் பிள்ளைகள் வன்னிக்கு வர விரும்பியபோதும் இராணுவத்தினர் மறுக்கின்றனர். இழுத்தடிப்புச் செய்கின்றார்கள். யுத்த சூழ்நிலையை அடுத்து தங்களின் பிள்ளைகள் சாப்பாடு கூட இன்றி இங்கு கல்வி கற்க முடியாது. எனவே தமது பிள்ளைகள் வன்னிக்கு வர வழி செய்யுங்கள், என இந்தக் கலந்துரையாடலின் மூலம் பெற்றோர்கள் குரல் எழுப்பியுள்ளனர். இக்கலந்துரையாடலின் முடிவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஊடாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கும், யாழ். அரச அதிபருக்கும் மகஜர்கள் அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## அடுத்துக் கொல்லப்படுவது யாரோ? அலறும் அமைச்சர்

இன்று கொழும்பு நகரில் எத்தனை தற்கொலைக் குண்டுதாரிகள் உள்ளனர் என்பது தெரியாதுள்ளது. இதனால் அடுத்து யார் கொல்லப்படுவார்கள் என்பது தெரியாத நிலையே தற்போதைய உண்மையான நிலவரமாகும். இவ்வாறு சிறீலங்காவின் வனவள சுற்றாடல்துறை அமைச்சர் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஈழக்கோரிக்கைப் போராட்டத்தின் மூலம் கேட்கப்படும் தனிநாட்டைக் கொடுப்பது யார்? அல்லது அவ்வாறான தனிநாடு உருவாகாமல் தடுப்பது யார் என்ற கேள்விகளே தற்பொழுது தலைதூக்கியுள்ளன. ஆனால் புலிகள் தமது போராட்டத்தை முன்னெடுக்க எதனையும் செய்யத் தயங்கமாட்டார்கள்.

அண்மையில் ராஜகிரியப் பகுதியில் அவர்கள் நடாத்திய தாக்குதல் முழுமையான வெற்றியைப் பெற்றிருந்தால் இன்று இந்தப் பாராளுமன்றத்தில் உள்ளோரில் எத்தனை பேர் உயிர் தப்பி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது எனவும் அமைச்சர் தனது உரையின் போது தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றத்தை நீடிக்க கிளம்பும் எதிர்ப்பு

சிறீலங்கா பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் விரைவில் முடிவடையவுள்ளதால் தேர்தலை நடத்தாமல் பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு அரசு முயன்றுவருகின்றபோதிலும் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குமிடையே இது தொடர்பான கருத்துக்கள் மாறுபட்டிருப்பதால் அரசு பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தல் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் வடக்குக் கிழக்கில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் தேர்தலை எவ்வாறு நடாத்துவது என்பதில் அரசிற்குப் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் கொழும்பு அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை தேர்தல் நடக்குமானால் தாம் அதில் கலந்துகொள்ளப்போவதாக தமிழ் குழுக்கள் அறிவித்துள்ளனர்.

## மன்னாரில் அதிகரிக்கும் தற்கொலை மரணங்கள்

மன்னார் பெருநிலப்பரப்புப் பகுதியில் அண்மைக் காலமாகத் தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருவதாக புள்ளிவிபரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. வறுமை, வேலையில்லாப் பிரச்சினை ஆகியவை காரணமாகவே அதிகமான தற்கொலை மரணச் சம்பவங்கள் சம்பவிப்பதாகத் தெரியவருகிறது. சிறீலங்கா இராணுவத்தின் கெடுபிடிகள் அதிகமாக இருக்கும் பகுதிகளிலேயே தற்கொலை மரணங்களும் அதிகமாக நிகழ்கின்றன.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகள், மற்றும் மேடை நிகழ்ச்சிகள் அனைத்திலும் இசைமழையில் நனைந்திட ஐரோப்பா புகழ்

ஈழநிலா

தொடர்புகட்கு: இயக்குநர் எஸ்.எஸ். தில்லைச்சிவம்
Tel: 01 40 37 56 69


# யாழ். குடா

## புலிகளின் பரம்பலும் – இறுகும் எல்லைகளும்

ஓயாத அலைகளின் வீச்சு சற்று ஓய்ந்துள்ள இவ்வேளை சிறீலங்கா புலிகளின் பலம் பலவீனம் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளது. இதற்கிடையே யாழ். குடாவில் தேர்தல் நடத்துவது பற்றியும் சிறீலங்கா கட்சிகள் பேச முற்பட்டுள்ளன. சிறீலங்காவின் படைத்தளபதிகள் போர் ஓய்வு பற்றித் தங்களது கணிப்பீடுகளை முன்வைக்கும் போது தங்களது மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலும் கீழ் நிலை இராணுவத்தின் மனோ பலம் உயரும் விதமாகவும் தான் கூறுகின்றனர். தங்களது புதிய ஆயுதக் கொள்வனவுகள் தான் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தியுள்ளன என்றும் பல்குழல் சுடுகலன்களின் பாவிப்பினால் விடுதலைப் புலிகள் பாரிய இழப்புக்களை அடைந்துள்ளனர் என்றும் யாழ். குடாவில் இராணுவத்தைத் தாக்க அவர்களுக்கு இப்போது ஆட்பலம் போதாது என்றும் கூறுகின்றனர். ஆனையிறவு படைத்தளம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததன் பின் சிறீலங்காவின் உயர்தர அமைச்சர்கள் பல குழுக்களாக உலக நாடுகளிடம் ஆயுத உதவி கோரிச் சென்றனர். அதேவேளை பல ஆயுத விற்பனையாளர்கள் சிறீலங்காவின் தலைநகரை வந்தடைந்தனர். பல நூறு பில்லியன் செலவில் ஆயுத தளவாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவற்றுள் சிறீலங்காவுக்கு பிரதானமாக தேவைப்பட்டது பல்குழல் சுடுகலன்களே. இதனை பகிரங்கமாகவே பாதுகாப்புத் தலைவர்கள் கூறினர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றி வைக்க பல நாடுகள் தயாராக இருந்தன. செக்குடியரசு பாவிக்காத நிலையில் இருந்த பல பல்குழல் சுடுகலன்களை இலவசமாகவே வழங்கியது. இதனை முக்கியமான விடயமாகக் கூறமுடியாது. வெறும் சுடுகலன்களை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. அதற்கான எறிகணைகளை இலவசமாக வழங்க செக்குடியரசு தயாராக இருக்கவில்லை. எப்படியும் அவற்றை வழங்க சிறீலங்கா தன்னிடம் வந்தாகவேண்டும் என்கின்ற நிலையில் பெரும் வர்த்தகத்துக்காகப் போடப்பட்ட வலைதான் இலவச தளவாட விநியோகம். சிறீலங்காவிற்குப் பல்குழல் சுடுகலன்கள் போய்ச்சேர்ந்ததன் விளைவு கண்டறியாதவன் எதனையோ கண்டால்... ஏதேதோ செய்வானாம் என்கின்ற நிலைதான், தென்மராட்சியின் எல்லாப்பக்கங்களும் எறிகணைகள் கணக்கின்றி சீறிப்பாய்ந்தன. சாவகச்சேரியை விடுதலைப் புலிகள் கைப்பற்றினால் அங்கு எல்லாப் பகுதிகளிலும் அவர்கள் நிற்பார்கள் என்று சிறீலங்கா எண்ணியதன் விளைவுதான் இந்த தாறுமாறான தாக்குதல்கள். அப்பாவிப் பொதுமக்கள் பெருவாரியாகக் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். வீடுவாசல்கள் தரைமட்டமாகின. எம் மக்களின் அழிவினைத் தடுத்து நிறுத்தவேண்டிய கடமை விடுதலைப் புலிகளுக்குண்டு. அதனால் சண்டையை திசை திருப்பி மக்களை மீட்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். தென்மராட்சியில் மக்கள் மீட்பு நடவடிக்கைகளால் யுத்தம் மந்த நிலையை அடைந்ததுடன் சிறீலங்கா தான் புலிகளைத் தடுத்து நிறுத்திவிட்டதாகக் கூறத் தொடங்கியது.

யாழ். குடாவில் தாக்குதல்களுக்காக புலிகளின் விசேட படையணிகள் பல திசைகளாலும் நகர்ந்து பாதுகாப்பான நிலைகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. அதேவேளை பல ஆயிரம் போராளிகள் இராணுவம் பின்வாங்கிய பகுதிகளுக்குள் மாத்திரமல்ல, இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளுள்ளும் நிலையெடுத்துள்ளனர். வாகனங்கள் நகர்த்தப்பட்டுள்ளன. கூறப்போனால் பலாலிப்படைத்தளப் பகுதிகளிலும் புலிகளின் அணிகள் நுளைந்துள்ளன. பலாலித்தளம், என்பது முன்னர் வசாவிளான், மயிலிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி என பின்னர் காங்கேசன் தளம் கீரிமலை, தெல்லிப்பளை என பிரிவு படுத்தப்பட்டது. ஆனாலும் பலாலித் தளத்தின் மையப்பகுதிகளுள் மட்டும்தான் இராணுவம் செறிவாக நிலைகொண்டுள்ளது, தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதி

***விடுதலைப்பு புலிகளின் அடுத்தகட்ட யுத்த முன்னெடுப்பு எங்கு இடம்பெறப் போகின்றது என்பதில் திணறிப்போயுள்ள சிறீலங்கா மணலாற்றில் ஒரு இராணுவ நகர்வை மேற்கொள்ள முனைந்து மூக்கறுபட்டுப்போய் நிற்கின்றது.***




மற்றும் காங்கேசன்துறையின் சில பகுதிகள் என புலிகளின் நடமாட்டப்பகுதிகள் பலாலித்தளத்துள்ளும் விரிவடைந்துள்ளன. யாழ். குடாவில் இராணுவம் இப்போது வெளியுலகம் கூறும் வகையில் செயற்படுவதில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவில் நிர்வாகம் முற்றுமுழுதாக செயலற்றுப்போயுள்ளது. அங்கு இப்போது இடம்பெறுவது மந்தப் போக்கிலான இராணுவ நிர்வாகம் என்கிறார் யாழ்.குடாவின் பத்திரிகையாளர் ஒருவர். யாழ். நகரப்பகுதியில் சில பிரதான வீதிகள் மையப்பகுதி போன்ற பிரதேசங்களிலேயே இராணுவம் அதிகளவில் நிலைகொண்டுள்ளன. அதிலும் இரவாகியதும் அனேகமான பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் காவற்கடமைகளும் நிறுத்தப்பட்டுவிடுகின்றன. இராணுவம் பின்வாங்கி பிரதான முகாம்களுக்குச் சென்றுவிடுகின்றன. இப்போது சிறீலங்கா இராணுவம் யாழ்.குடாவில் 3 பிரதான பகுதிகளில் நிலைகொண்டுள்ளன. தென்மராட்சியில் கொடிகாமத்தை உள்ளடக்கிய பகுதி இது நீண்டு வடமராட்சியில் நாகர்கோவில்வரை செல்கின்றது. மற்றையது வடமராட்சியில் சில பகுதிகள். மூன்றாவதாக யாழ். குடாவின் மையப்பகுதி இவை தவிர காரைநகர் கடற்படைத்தளம் மற்றும் சில தீவகமுகாம் என்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய படைநிலைகளை மாத்திரம் சிறீலங்கா வைத்துக்கொண்டுள்ளது. இவைகளில் செயற்படும் நிலையில் இராணுவம் யாழ்.குடாவிலும் தென்மராட்சியிலும் மாத்திரமே உள்ளன. காரைநகர் கடற்படைத் தளம் பற்றிய பேச்சுக்களையே நீண்டநாட்களாகக் காணவில்லை. அப் பகுதிக்கடலிலும் நீண்டகாலமாக அமைதியாகவே காணப்படுகின்றன. யாழ். குடாவில் விடுதலைப்புலிகள் தாராளமாக விரிந்து பரம்பியுள்ளனர். அதேவேளை சிறீலங்கா இராணுவம் நடவடிக்கைகளை முடக்கிக்கொண்டு வருகின்றது. எல்லைகள் தரையில் விடுதலைப் புலிகளுக்கு குறுகிவருகின்றன.

அதேபோல்தான் கடல் நிலைமையும் கடற்புலிகளின் பலமும் பல மடங்கு விரிவடைந்துள்ளன. புதிய ஆயுத தளவாடங்கள் பொருத்தப்பட்ட பாரிய கலங்கள் கடற்புலிகளின் பாவனைக்கு வந்துள்ளன. அனுபவம் மிக்க தளபதிகளின் வழிகாட்டலில் புதிய பல தளபதிகள் உருவாகி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். வடகடலில் சிறீலங்கா கடற்படைக்குப் பலத்த அச்சத்தை ஏற்படுத்திவரும் கடற்புலிகள் யாழ்.குடாவில் சிறீலங்காப் படையினரின் விநியோக வழிகளைத் தடை செய்யும் நகர்வுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

விடுதலைப்பு புலிகளின் அடுத்தகட்ட யுத்த முன்னெடுப்பு எங்கு இடம்பெறப்போகின்றது என்பதில் திணறிப்போயுள்ள சிறீலங்கா மணலாற்றில் ஒரு இராணுவ நகர்வை மேற்கொள்ள முனைந்து மூக்கறுபட்டுப்போய் நிற்கின்றது. உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட தணிக்கையொன்று திங்களன்று மீண்டும் அமுலுக்கு வந்ததானது இழப்புச் செய்திகளை மறைக்கும் அரசின் முயற்சி என்று நம்பப்படுகின்றது. மணலாற்றில் இராணுவ நடவடிக்கை தோல்வியடைந்த நிலையில் தாம் பெருமளவிலான புலிகளை அழித்துள்ளோம் என சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு சிறீலங்கா கூறியுள்ளது. கடந்தவாரம் கடற்படைக்குப் பேரிழப்பு சிறீலங்காவிற்குச் சொந்தமான விநியோகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதுடன் கடல் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஓயாத அலைகள் இன்னும் முடிந்துவிட்டதாக புலிகளால் அறிவிக்கப்படவில்லை. தினமும் வானொலியில் தொடர்வதாகத்தான் அறிவித்தல்கள் வருகின்றன. ஆகவே சிறீலங்கா இராணுவம் அடுத்த கட்ட தோல்விக்காக நிச்சயம் காத்திருக்கலாம். அப்போது பலம் பலவீனம் பற்றிய கணிப்புக்களுக்கும் அர்த்தங்கள் தோன்றலாம்.

# தேர்தலா? பாராளுமன்ற நீடிப்பா?

## சந்திரிகாவின் தலையிடி

(மட்டக்களப்பிலிருந்து எஸ். ஜெயானந்தமூர்த்தி)

சிறீலங்கா நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னும் 51 நாட்களே எஞ்சியுள்ளன. அதாவது ஓகஸ்ட் 24ம் திகதியுடன் இந்த மன்றின் ஆயுள் முடிவடைந்து தேர்தல் நடாத்தப்பட்டு புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். ஆனால் இன்றைய நெருக்கடியான நிலையில் அரசாங்கத்தினால் ஒரு நீதியான, நேர்மையான தேர்தலை நடத்த முடியுமா என்பதே இன்று எழுந்துள்ள முக்கிய கேள்வியாகும்.

வடக்கு கிழக்கில் முக்கிய நகரப் பகுதிகள் தவிர, வன்னி பெருநிலப்பரப்பு மற்றும் ஏனைய 70 சதவீதமான பகுதிகள் தற்பொழுது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த நிலையில் விடுதலைப் புலிகளைப் பகைத்துக் கொண்டு எவ்வாறு ஒரு தேர்தலை நடாத்த முடியும்? அவ்வாறானால் தேர்தலை நடத்தாது நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை அடுத்த ஒரு தடவைக்குக் கூட்ட வேண்டும்.



இது இலேசுப் பட்ட காரியமல்ல. இலங்கை அரசியல் யாப்பின்படி, நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை தேர்தல் நடத்தாது கூட்டுவதானால் தற்போதுள்ள நாடாளுமன்றத்தில் ஆயுள் நீடிப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுதல் வேண்டும். பின்னர் அது அனைத்து மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மக்களின் விருப்பம் கிடைக்க வேண்டும். இல்லாது போனால் ஆயுட்காலத்தை நீடிக்க முடியாது. தேர்தல் நடத்தியே ஆக வேண்டும். இதுதான் இன்றைய சந்திரிகா அரசுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினையாகும். இன்றைய அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்க வேண்டுமானால் இன்னும் 16 சார்பு வோட்டுக்கள் தேவை. ஆனால் தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அதிருப்தியாளர்கள் என்ற பட்டியலில் 6 பேர் உள்ளனர். இவர்கள் அரசுக்கு ஆதரவு வழங்குவார்கள். அப்படியானால் மேலும் பத்துப் பேரை அரசு மடக்கிப் பிடிக்க வேண்டும்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இன்னும் பத்துக்கும் மேற்பட்டோர் அரசின் பக்கம் மாறுவார்களானால் இது சாத்தியப்படும். இல்லாது போனால் அம்போதான். தற்போதைய சட்டத்தின்படி ஒரு கட்சியில் இருந்து மற்றொரு கட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மாறினால் அவர்களின் கதிரை பறிபோய்விடும். எனவேதான் ஏற்கனவே கட்சிமாறிய ஆறு உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டு அதிருப்தியாளர்கள் என தம்மைக் கூறிக்கொண்டு வலம் வருகின்றனர்.

இன்னும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் பல அதிருப்தியாளர்கள் உள்ளனர். அவர்களை அரசாங்கம் மடக்கிப் பிடிப்பதற்காகவே அவசர அவசரமாக கட்சி விட்டு கட்சி தாவும் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து நிறைவேற்ற அரசு முயலுகின்றது. இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுமானால் எந்தக் கட்சியில் இருப்பவர்களும் எக் கட்சிக்கும் தாவமுடியும். அவர்களின் எம்.பி. பதவி பறிபோக மாட்டாது. இச்சட்ட மூலத்தையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் கடுமையான பிரயத்தனம் செய்ய வேண்டிவரும். அரசாங்கத்தின் இத்திட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி குறுக்கே நிற்பதுபோல், கட்சி விட்டு கட்சி தாவும் சட்டமூலத்திற்கு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆனால் தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த வரை அரசாங்கம் சில ஆசை வார்த்தைகளைக் காட்டி சில சலுகைகளை வழங்கினால் எந்த வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் பின்னால் போய்விடுவார்கள். இது தெரிந்துதான் தமிழ் கட்சிகளைப் பற்றி அரசாங்கம் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.

தமிழ் கட்சிகளும் இன்றைய நிலையில் பொதுத்தேர்தல் நடாத்தப்படுவதை விரும்பவில்லை. அதனால் நாடாளுமன்ற ஆயுட்காலத்தை நீடிப்பதை உள்ளூர விரும்புகின்றன. தேர்தல் நடாத்தப்படுமானால் வடக்கு கிழக்கில் இக்கட்சிகள் எந்த முகத்துடன் சென்று மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்பது என சிந்திக்கத் தொடங்கி விட்டன. இதனால் ஆயுட்காலம் நீடிக்கப்படுமானால் தமது பதவியையும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என இக்கட்சிகளின் அடிமனதில் ஆசை ஏற்பட்டுள்ளன. இதற்கிடையில் அரசும்- ஐக்கிய தேசியக் கட்சியும் அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக, கடந்த சில மாதங்களாக சந்தித்துப் பேசி சில இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

அதில் ஒன்றுதான் இடைக்கால நிர்வாக சபை. இந்த இடைக்கால நிர்வாகசபை எந்தவித அதிகாரமுமற்ற ஒரு பம்மாத்து நாடகம். இதை விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இக்கூற்று எவ்வளவு உண்மை என்பதை கடந்த வெள்ளிக் கிழமை லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு, புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் வழங்கியுள்ள செவ்வி தெளிவாக உணர்த்தி உள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளுக்கு ஈடு கொடுக்கக்கூடியவையாக இல்லை. பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன்களைப் பாதுகாப்பவையாகவே அவை உள்ளன.

**ஐக்கிய தேசிய கட்சிக்குள் பல அதிருப்தியாளர்கள் உள்ளனர். அவர்களை அரசாங்கம் மடக்கிப் பிடிப்பதற்காகவே அவசர அவசரமாக கட்சி விட்டு கட்சி தாவும் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து நிறைவேற்ற அரசு முயலுகின்றது.**

திம்பு பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட அடிப்படை கோரிக்கைகளும் இத் தீர்வுத் திட்டத்தில் அலட்சியம் செய்யப்பட்டுள்ளன. தமிழர் தாயகப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்கான அத்திவாரத்தை இடுவதற்கு ஆதரவான எதுவும் இத்திட்டத்தில் இல்லை. சுயநிர்ணய உரிமை, தாயகப் கோட்பாடு போன்ற தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளை அலட்சியம் செய்யும் எந்தவொரு திட்டத்தையோ, யோசனையையோ விடுதலைப் புலிகள் ஆராயவோ அல்லது அது பற்றி அபிப்பிராயம் கூறவோ மாட்டார்கள்.

**தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தருவதற்கு விடுதலைப் புலிகளைத் தவிர வேறெந்த சக்தியாலும் ஒன்றும் ஆகப்போவதில்லை.**

ஜனாதிபதி சந்திரிகா அவரது அணியில் உள்ள அதிகார ஆசை பிடித்த தமிழ்க் கூலிப்படைகளுக்கு இடைக்கால நிர்வாக சபை என்ற பேரில் சில உக்கிய எலும்புகளை வீசி எறிய விரும்பி இருக்கலாம். ஆனால் எமது மக்களின் சொல்லொணாத் துன்ப துயரங்களின் பேரில் கொடிய அரசு ஒன்றிடமிருந்து அதிகாரங்களையும், சலுகைகளையும் பெற விரும்புவோர் அவர்களது துரோகத் தனத்தை வரலாறு மன்னிக்க மாட்டாது என்று தெளிவாகக் கூறி உள்ளார். இதைவிட புலிகளின் அபிப்பிராயம் எதுவும் தேவையில்லை. இது தவிர தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட சில தமிழ்க் கட்சிகளும் இடைக்கால நிர்வாகசபை அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இது அக் கட்சிகளின் அடி மனதில் இருந்து எழுந்த உணர்வுகளா?' அல்லது வழக்கம் போல் புலிகளை எதிர்த்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக நாசூக்குக்காக விடும் அறிக்கையா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். இந்த நிலையில் அரசாங்கம் எவ்வாறு பொதுத்தேர்தலை நடாத்தப்போகின்றது. தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் எதிர்வரும் 2006-ம் ஆண்டு வரை உள்ளது.

பொதுத்தேர்தல் நடாத்தி ஒரு வேளை ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுவிட்டால் ஜனாதிபதி ஒரு கட்சியிலும், நாடாளுமன்றம் ஒரு கட்சியாகவும் இருந்து எவ்வாறு நிர்வாகம் நடத்த முடியும். எனவே தமது அரசாங்கமே மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு ஏற்றமாதிரியே தேர்தலையும் நடாத்த அரசு முனையும். இந்த நிலையில் ஒரு சுதந்திரமான தேர்தலாகவும் இது அமையப்போவதில்லை.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் புலிகளினால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை மீண்டும் தமதாக்கி விட வேண்டும் என அரசாங்கம் திட்டமிட்டது. ஆனால் அதுவும் சாத்தியப்படும் நிலையில் இல்லை. யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட ஆயுதக் கப்பலும் அந்தா இந்தா என்று போய்ச் சேருவதற்கிடையில் தாக்கி அழிக்கப்பட்டு விட்டது. அது கடலில் சங்கமமாகி விட்டது. கப்பல் அமிழ்ந்ததுபோல் அரசின் எண்ணங்களும் அமுங்கிப்போய் விட்டன. என்னதான் நடந்தாலும் நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலம் நீடிக்கப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. பொதுத்தேர்தலை உரிய காலத்தில் நடாத்த வேண்டும் என்பதில் அது குரங்குப் பிடியாய் உள்ளது. இன்றைய நெருக்கடி நிலை, போரினால் அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவு, படையினரின் இழப்பு என்பனவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சாரம் செய்து தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என எதிர்பார்க்கின்றது.

தென் பகுதியிலும் அரசுக்கு சில எதிர்ப்பலைகள் தோன்றி உள்ளன. புதிதாக பல கட்சிகள் முளைத்துள்ளன. இக் கட்சிகளின் வருகையும் அரசுக்கு சில பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளன. ஆனால் எந்தவொரு பேரினவாதக் கட்சிதான் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர் பிரச்சினைக்கு அக் கட்சிகளால் எந்தவொரு தீர்வையும் பெற்றுத்தரப்போவதில்லை. ஆட்சியைக் கைப்பற்றி, கதிரையைப் பிடிக்கும் வரைதான் எல்லாக் கட்சிகளும் இனப் பிரச்சினை தொடர்பாக தீர்வுகளை முன்வைக்கும். ஆட்சிக்கு வந்தால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகவே அமைந்து விடும் என்பதில் சந்தேகம் இல்லை. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத்தருவதற்கு விடுதலைப் புலிகளைத் தவிர வேறெந்த சக்தியாலும் ஒன்றும் ஆகப்போவதில்லை. இந்த உண்மை பேரினவாதக் கட்சித் தலைவர்களுக்குத் தெரியாமலில்லை. ஆனால் அரசியல் மேடையில் அவர்கள் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாடகம் ஆட வேண்டி உள்ளது.



• தமது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவும், கட்சியை வளர்த்துக் கொள்ளவும் சிறிலங்காவில் ஆட்சியாளர்கள் தமது வசதிப்படி எப்படியெல்லாம் சட்ட திட்டங்களை மாற்றிக் கொள்ளுகின்றனர். இதுதான் பன்னெடுங்காலமாக இலங்கையில் நடந்து வந்தது. தற்பொழுதும் நடக்கின்றது. இலங்கையில் உள்ளதுபோன்ற ஒரு சாக்கடை அரசியல் வேறெந்த நாட்டிலும் இருக்கும் என நான் நினைக்க வில்லை. வெள்ளைக்காரர்களின் 'ஜென்ரில் மென்' அரசியலை இவர்கள் கற்றுக்கொள்வது அவசியம்.

# போர் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டு

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும் அரசியல் ஆலோசகருமான திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழ் கார்டியன் ஆங்கில இதழுக்கு கடந்த வாரம் செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார். அச் செவ்வியின் விபரங்கள் கீழே வருகின்றன.**



*கேள்வி:— யாழ்ப்பாணத்தில் சண்டை ஓய்ந்துபோய் இருக்கிறது. சிங்கள ஆயுதப் படைகள் நவீனரக ஆயுதங்களைப் பாவிப்பதன் விளைவாகவே விடுதலைப் புலிகளின் தாக்குதற் சமர் நிறுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?*

**பதில்:-** விடுதலைப் புலிகளின் தாக்குதற் சமர் இராணுவத்தால் நிறுத்தப்படவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில், தாம் கைப்பற்றிய பிரதேசங்களை எமது விடுதலைப் போராளிகள் பலப்படுத்தி, நிலைப்படுத்தி வருகிறார்கள். சாவகச்சேரிப் பகுதியில் போர் நிகழ்ந்த இடங்களில் சிக்குண்டு தவிக்கும் எமது மக்களை பாதுகாப்பான இடங்களிற்கு அப்புறப்படுத்தும் நோக்கிலேயே எமது போர் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள இராணுவம் இப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தியது மட்டுமன்றி, கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியும், விமானக் குண்டுவீச்சுக்களை நிகழ்த்தியும் பெரும் தொகையானோரை கொன்றொழித்தும் படுகாயப்படுத்தியும் உள்ளது. மனவுறுதி தளர்ந்த நிலையில் இருக்கும் இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் ஒரு பொழுதும் ஓய்ந்துவிடப்போவதில்லை. எமது போரின் இலட்சியம் நிறைவெய்தும் வரை அலைகள் ஓயாது. அதாவது, யாழ்ப்பாணக் குடாநாடு முழுமையாக அந்நிய இராணுவ ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறும் வரை ஓயாத அலைகள் ஓய்ந்துவிடாது.

*கேள்வி:— பல குழல் ஏவுகணை செலுத்திகள் போன்ற நவீனரக ஆயுதங்கள் பாவிக்கப்படுவதால் விடுதலைப் புலிகள் தரப்பில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளனவா?*

**பதில்:-** இந்த ஆயுதம் பெருமளவில் கண்மூடித்தனமாக பாவிக்கப்படுவதால்தான் பொதுசனங்கள் மத்தியில் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இதனால் தான் சாவகச்சேரிப் பகுதியில் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வகையான ஆயுதங்கள் எம்மிடமும் இருக்கின்றன. இதனை நாம் சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் பாவிப்பதும் உண்டு. எமது போராளிகள் இந்த ஆயுதத்தின் பாவனைபற்றியும் அதன் தாக்கம் பற்றியும் நன்கு அறிவார்கள். ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆயுதங்கள் அல்ல. போரிடுபவர்களின் மனோதிடமும், உறுதியும், இலட்சியப் பற்றுமே ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இந்தப் போரியல் பண்புகள் தாராளமாக இருக்கிறது. அதனால் போரில் அவர்களுக்கே வெற்றி நிச்சயம் என்று உறுதியாகச் சொல்லலாம்.

> தமிழர் தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாடும் வெகுவிரைவில் எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும்!

*கேள்வி:— வடகிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக சபையை நிறுவுவதென அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணைந்து முடிவெடுத்திருக்கின்றன. ஆயுதங்களை கீழே போட்டு, வன்முறையைக் கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கினால் விடுதலைப் புலிகளும் இதில் பங்கு கொள்ளலாம் என அரசு நிபந்தனையை விதித்திருக்கிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?*

**பதில்:-** இந்த அரசாங்கம் ஒரு கற்பனாவாதத்தில் மூழ்கி இருப்பதுபோலவே எனக்குத் தோன்றுகிறது. தமிழர் தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாடும் வெகுவிரைவில் எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எமது கட்டுப் பாட்டின் கீழுள்ள பகுதிகளில் நாம் ஒரு சுயாட்சிமுறையை அமைத்துள்ளோம். அங்கு ஒரு நிரந்தரமான நிர்வாகத்தை நடாத்திவருகின்றோம். நிலைமை அப்படி இருக்கும்பொழுது, ஒரு இடைக்கால நிர்வாகத்தில், ஒரு சில ஆசனங்களுக்கு போட்டியிடுவதற்காக எமது மக்களின் ஒரேயொரு பாதுகாப்புச் சாதனமான ஆயுதங்களைப் போட்டுவிட்டு, போராட்டத்தைக் கைவிடுவதற்கு நாம் என்ன வடிகட்டிய முட்டாள்களா? அப்படித்தான் அரசாங்கம் ஒரு தற்காலிக நிர்வாகசபையை உருவாக்கினால் கூட இன்றைய போர்ச்சூழலில் அது இயங்குவது சாத்தியமில்லை. இந்திய இராணுவ பலத்தின் நிழலின் கீழ் கட்டி எழுப்பப்பட்ட வடகிழக்கு மாகாண நிர்வாகம் கூட செயற்பட முடியவில்லையே!

வடகிழக்கின் யதார்த்தமான கள நிலவரங்களை உதாசீனம் செய்துவிட்டு சந்திரிகா அரசு மிகவும் கேலிக் கூத்தான திட்டங்களை முன்வைக்கிறது. தனது கூட்டணி அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் தமிழ்க் கூலிப் படைகளின் அதிகாரப் பசியை தீர்க்க சந்திரிகா அம்மையார் இடைக்கால நிர்வாகம் என்ற பெயரின் சில அழுகிப் போன எலும்புத் துண்டுகளை வீசலாம். அற்ப அதிகாரங்களுக்காகவும், சலுகைகளுக்காகவும் எமது மக்களின் பேரவலத்திலும் பெரும் துன்பத்திலும் குளிர்காய்ந்தபடி ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு அடிவருடிகளாக தொண்டு புரிபவர்களின் துரோகத்தை வரலாறு ஒருபொழுதும் மன்னிக்கப்போவதில்லை.

*கேள்வி:— இவ்வாரம் கொழும்பில் அரசியல் நகர்வுகள் அதி*

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி

தென்மராட்சியில் இருந்து வன்னிக்கு வந்துள்ள ஒரு பகுதி மக்களுக்கு தாம் அடிப்படை வாழ்வுக்குத் தேவையான பொருட்களை வழங்கியுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வன்னிக்கிளை தெரிவித்துள்ளது. சவர்க்காரம், சலவைத்தூள், வாளி, புடவை, துவாய் அடங்கிய சுகாதாரப் பொதி மற்றும் பாய், படுக்கைவிரிப்பு அடங்கிய படுக்கைப் பொதி, கோப்பை, குவளை ஆகிய பிளாஸ்ரிக் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. 419 குடும்பங்களைச் சேர்ந்த 1341 பேருக்கு சுகாதாரப் பொதிகளும், 194 பேருக்கு படுக்கைப் பொதி, பிளாஸ்ரிக் பொருட்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன. 12 கூரை விரிப்புக்கள் 108 மறைப்புத் துணிகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் அமைதிபுரம், துணுக்காய் விஸ்வமடு, ஆனந்தபுரம் பகுதிகளில் உள்ளோருக்கு இவை வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னி வதிவிட அலுவலக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீசாலையில் எறிகணைத் தாக்குதலுக்கு குடும்பஸ்தர் பலி

மீசாலையில் சிறீலங்காப் படையினர் தொடர்ந்து மேற்கொண்டு வரும் பொதுமக்கள் மீதான தாக்குதலில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 19ம் திகதி இடம் பெற்ற எறிகணைத் தாக்குதல் காரணமாக செல்லப்பு கிருஸ்ணசாமி என்ற குடும்பஸ்தர் பலியாகியுள்ளார். மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு அருகில் வசித்து வந்த இவர், மாலை வேளையில் அயலில் உள்ள தமது வயலுக்கு சென்ற போது திடீரென அருகில் வீழ்ந்து எறிகணை வெடித்ததால் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் குடிநீர், ஆகாரமின்றி ஒரு வயோதிபர் மரணமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட வயோதிபர்கள் யாருடைய உதவியும் இன்றி வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் சாப்பாட்டுக்கு பெரும் துன்பமடைவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

# லெப்.கேணல் ராஜன் வீரச்சாவு

கடந்த 26ம் திகதி வன்னிப் பகுதியொன்றில் சிறீலங்காப் படையினருடன் எதிர்பாராது ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் இராஜசிங்கம் அல்லது ராஜன் (வலோரியான் காணிக்கைநேசன் - பெரியமடு மன்னார்) என்ற போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இதேவேளை வெற்றிச்செல்வன் (இராமு வெற்றிச் செல்வன் - வவுனியா) என்பவரும் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

# வீரச்சாவைத் தழுவிய கடற் கரும்புலிகளின் விபரங்கள்

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த ஞாயிறன்று நடாத்தப் பட்ட தற்கொடைத் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஆறு கடற்கரும்புலிகளின் முழுமையான பெயர் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கடற் கரும்புலி லெப்.கேணல் ஞானேஸ்வரன் அல்லது ஞானக்குமார் (அழகுப்போடி விநாயகமூர்த்தி- மட்டக்களப்பு), கடற் கரும்புலி மேஜர் நல்லப்பன் (வேலுப்பிள்ளை இராசன் - யாழ்ப்பாணம்), கடற் கரும்புலி மேஜர் சூரன் (இராசதுரை ரவீந்திரன் - மன்னார்), கடற் கரும்புலி மேஜர் சந்தனா (குணசிங்கம் கவிதா - யாழ்ப்பாணம்), கடற் கரும்புலி கப்டன் இளமதி (கனகநாயகம்பிள்ளை ஜெயச்சித்திரா - யாழ்ப்பாணம்), கடற் கரும்புலி கப்டன் பாமினி (பரராஜசிங்கம் விஜயலட்சுமி யாழ்ப்பாணம்) ஆகியோரே வீரச்சாவடைந்தவர்களாவர்.

இதேவேளை நாகர்கோவில் பகுதியில் கடந்த 26ம் திகதி இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் சேரமதி (மெய்யப்பன் ஜெயலக்சுமி - உடையார்கட்டு) என்ற போராளி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

# டுள்ளது; யாழ். மீட்புச் சமர் தொடரும்

கரித்திருப்பது போலத் தெரிகிறது. அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணைந்து அரச அமைப்பு சீர்திருத்தங்களின் இறுதி நகலை தயாரித்து முடித்துள்ளன. அதே சமயம் நோர்வேயின் சமாதானத் தூதரான திரு.எரிக் சுல்கைம் அரச தலைவர்களைச் சந்தித்திருக்கிறார். ஆனால் புலிகள் தரப்பிலோ மௌனம் சாதிக்கப்படுகிறது. அதிகாரப் பரவலாக்கப் பொதி சம்மந்தமாக உங்களது நிலைமை என்ன? அந்தப் பொதி உங்களுக்கு கையளிக்கப்பட்டால் அதனை நீங்கள் பரிசீலனை செய்வீர்களா?

**பதில்:-** அரசாங்கத்தின் இந்த அதிகாரப் பரவலாக்கப் பொதி 1995 ம் ஆண்டு வெளியிடப்பட்டதும் முதன் முதலாக அதனை நிராகரித்தவர்கள் விடுதலைப் புலிகளே. அந்தப் பொதியில் பல குறைபாடுகள் இருந்ததாலும், அது எமது மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யத் தவறிய காரணத்தினாலும் நாம் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தோம். அதன்பின்னர் 1996ம் ஆண்டிலும் பின்னர் 1997ம் ஆண்டிலும் இந்தப் பொதி புதிய வடிவில் வெளியிடப்பட்டது. ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட யோசனைகள் மாற்றம் செய்யப்பட்டு அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டதாகவே இறுதித் திட்டம் அமைந்தது. இதனையடுத்து கடந்த பல மாதங்களாக மக்கள் கூட்டணி அரசாங்கமும் எதிர்க்கட்சியுமாக இணைந்து இந்த அரச அமைப்புப் பொதியில் பல சீர்திருத்தங்களை கொண்டுவந்துள்ளன. இதன் மூலம், மூல நகல் திட்டத்திலிருந்த இரத்தமும் சதையும் உறுஞ்சி எடுக்கப்பட்டு இறுதி நகலாக ஒரு எலும்புக் கூடுதான் எஞ்சியிருக்கிறது.

இந்தப் பொதியை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதில் எவ்விதமான உருப்படியான அதிகாரப் பரவலாக்கமும் இருக்கவில்லை தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு இது ஒரு அடித்தளமாகவும் அமையப்போவதில்லை. திம்புக் கோட்பாடுகளாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழரின் தேசிய அபிலாசைகளையோ, அடிப்படைக் கோரிக்கைகளையோ இந்தப் பொதி தொடக்கூடவில்லை. தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமை, தேசியத் தகைமை போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை உதாசீனம் செய்யும் எந்தப் பொதியையும், தீர்வுத்திட்டத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசீலிக்கத் தயாராக இல்லை.

அரசாங்கத்தின் இந்தப் புதிய அரச அமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை தீர்க்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்படவில்லை. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நலன்களைப் பேணும் நோக்கில் தான் இந்தப் புதிய அரசமைப்புத் திட்டம் கொண்டு வரப்படுகிறது. சிறீலங்காவில் எத்தனையோ அரசமைப்புத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் இவையொன்றும் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையவில்லை. அரசியல் கட்டமைப்பை புரட்சிகரமாக மாற்றியமைக்கும் வகையில் சீரமைப்புக்கள் செய்யப்படாதவரை புதிய அரசமைப்புத் திட்டங்களில் பயனுமில்லை, அர்த்தமுமில்லை.

*கேள்வி:– கூடிய விரைவில் போர் நிறுத்தமும் சமாதானப் பேச்சுகளும் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டா ?*

**பதில்:-** யாழ்ப்பாணக் குடாநாட்டை ஆக்கிரமித்து நிற்கும், சிங்களப் படைகள் வாபஸ்பெறப்பட்டால் போர் நிறுத்தம் பேச்சுவார்த்தைக்கான சாத்தியம் உண்டு. ஆனால் அதே வேளை யாழ்ப்பாணம் மீதான இராணுவ ஆக்கிரமிப்பை அரசாங்கம் தொடர்ந்து நீடிக்க விரும்பினால் போர்ச் சூழ்நிலை தொடரும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல பகுதிகளை விடுதலைப் புலிகள் ஏற்கனவே மீட்டெடுத்துள்ளனர். எமது இறுதி இலட்சியத்தை நாம் அடையும் வரை யாழ். மீட்புச் சமர் தொடரும்.

*கேள்வி:– தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வானது இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றின் கீழ் அமையவேண்டுமென உலக வல்லரசான அமெரிக்காவும், பிரதேச வல்லரசான இந்தியாவும் வலியுறுத்தியுள்ளன. தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்காக நடாத்தப்படும் உங்களது விடுதலைப் போராட்டத்திற்கு இந்தக் கூற்றுக்கள் பாதகமாக அமையுமென நீங்கள் கருதுகிறீர்களா?*

**பதில்:-** சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அமெரிக்காவும் இந்தியாவும் இத்தகைய அறிக்கைகளை வெளியிட்டிருக்கலாம். இந் நாடுகளது பூகோள-அரசியல் நலன்களையும் அச்சங்களையும் நாம் புரிவோம். அரசியல் சுதந்திரம் கோரி தமிழர் நிகழ்த்தும் போராட்டத்திற்கு பாதகம் விளைவிக்கும் நோக்கில் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டதாக நாம் நினைக்கவில்லை. பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வுகாண இரு தரப்பினரும் முயற்சியெடுக்க ஊக்கமளிப்பதற்காகவே இந்தக் கருத்து வலியுறுத்தப் பட்டிருக்கலாம். தமிழரின் பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாணும் விடயத்தை நிர்ணயிக்கும் சக்தி, அமெரிக்க வல்லரசிடமோ அன்றி இந்தியப் பிராந்திய வல்லரசிடமோ, அல்லது சிறீலங்கா அரசிடமோ இருக்கவில்லை. எமது தேசத்தின் அரசியல் அந்தஸ்தையும் தலைவிதியையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது எமது மக்கள்தான், தமிழீழ மக்கள்தான்.

*கேள்வி:– இந்திய அரசானது சிறீலங்காவிற்கு 100 மில்லியன் டொலர் பெறுமதியான கடன்வசதி வழங்கியிருக்கின்றது. அதுபற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?*

**பதில்:-** ஒரு மனிதாபிமான உதவியாக இந்தக் கடன் வசதி வழங்கப்பட்டபோதும், அது சிறீலங்காவின் நிதி வளத்தை மேம்பாடு செய்யும் என்றே நாம் கருதுகிறோம். அத்துடன் மறைமுகமான வழியில் சிறீலங்காவின் போர் முயற்சிக்கும் அது உதவக்கூடும். இந்தக் கடனுதவியானது எந்தவித மனிதாபிமான நோக்கத்தையும் பேணப்போவதில்லை. மாறாக இது சிறீலங்கா அரசின் இராணுவ முயற்சிக்கு ஊக்கமளித்து எமது மக்களின் துன்பப் பழுவை மேலும் அதிகரிக்கலாம். இதையிட்டு எமது மக்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். வடக்கில், மருந்தும் உணவும் தடைசெய்யப்பட்ட நிலையில் எமது மக்கள் பலர் செத்து மடிகிறார்கள். அவர்களுக்குத்தான் அவசரமான மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. ஆனாலும் எமது மக்களின் இந்தப் பெரும் அவலம் இந்தியாவின் ஆன்மீகத்தையோ அல்லது இந்தியாவின் மனச்சாட்சியையோ தொட்டதாகத் தெரியவில்லை.

> *தமிழ் மக்களின் தன்னாட்சியுரிமை, தேசியத் தகைமை போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை உதாசீனம் செய்யும் எந்தப் பொதியையும், தீர்வுத்திட்டத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம் பரிசீலிக்கத் தயாராக இல்லை.*

## கணவருடைய எலும்புக்கூட்டை மனைவி அடையாளம் காட்டினார் !

*கிளிநொச்சியில் கடந்த வாரம் கண்டெடுக்கப்பட்ட நான்கு எலும்புக் கூடுகளில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. 97ம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி தமது வீட்டைப் பார்ப்பதற்காகச் சென்ற தனது கணவரான கந்தசாமி முத்துலிங்கம் (45) என்பவரது எலும்புக்கூடே இது என்று அவருடைய மனைவியான வசந்தாதேவி அடையாளம் காட்டியுள்ளார். கிளிநொச்சி மூன்றாம் வாய்க்கால் பன்னங்கண்டியைச் சேர்ந்த தனது கணவர் காணாமல் போன வேளையில் அணிந்திருந்த நீல நிறக் காற்சட்டையை வைத்தே அவர் அடையாளம் காட்டியுள்ளார். இதுவரையில் கண்டெடுக்கப்பட்டுள்ள 51 எலும்புக்கூடுகளில் பத்து எலும்புக் கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.*

## மணலாற்றில் 16 போராளிகள் வீரச்சாவு

மணலாற்றில் கடந்த முதலாம் திகதி சனியன்று இடம்பெற்ற மோதலில் 15 போராளிகளும் ஒரு எல்லைப்படை வீரரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். அவர்களது பெயர் விபரங்கள் புலிகளின் குரல் வானொலியில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேஜர் தமிழ்ச்செல்வி (செல்லத்தம்பி பௌன்ஸ்ரவதி - மட்டு), மேஜர் தர்சினி (பிள்ளையான் சகுந்தலா - மட்டு), கப்டன் பரிமளா (செல்வராஜா இன்பமலர் - மட்டு), லெப். காவிகா (குமாரசாமி தேவகி - மட்டு), லெப். நகுலேஸ் (இளையதம்பி தர்சினி - மட்டு), லெப். தேனிசை அல்லது இலக்கி (கிருபைராஜா சுஜாதா - மட்டு), லெப்.சந்திரா (கதிரமலை தியாகராணி - மட்டு), லெப்.வர்ணப்பிரியா (கணபதிப்பிள்ளை சுஜாதா - மட்டு), 2ம் லெப். சிந்துஜா (அற்புதராஜா சாரதாதேவி - மட்டு), 2ம் லெப்.மிருணாளினி (கறுப்பையா குகனேஸ்வரி - மட்டு), கப்டன் ரமணிதரன் (விநாயகமூர்த்தி செந்தூர்நாதன் -மட்டு), லெப். உதயதாரன் (பொன்னுத்துரை கந்தப்போடி - முட்டு), லேப்.மதுரகரன் (பொன்னையா சித்திரவேல் - மட்டு), 2ம் லெப். உயிர்மணி (கணபதிப்பிள்ளை சண்டேஸ்வரன் - மட்டு), வீரவேங்கை சீராளசிங்கம்(தங்கராசா அருமைநாயகம் - மட்டு), எல்லைப்படை வீரவேங்கை சுபோ (நடனசபேசன் புவனராசா - புதுக்குடியிருப்பு) ஆகிய போராளிகளே மணலாற்றுச் சமரில் வீரச்சாவை தழுவிக்கொண்டவராவர்.

இதேவேளை கடந்த 26ம் திகதி மன்னார் பூவரசங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது 2ம் லெப். புகழ்வேந்தன் (இராமகுமார் தவச்செல்வன், கிளிநொச்சி) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்.

## வன்னியில் ஓயாத அலைகள் போர் எழுச்சி

ஓயாத அலைகள் 3 வெற்றியின் எழுச்சி நிகழ்வும், போர் எழுச்சி நிகழ்வும் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் இடம் பெற்று வருகின்றன. வரலாற்று வெற்றியான ஆனையிறவு படைத்தளம் வெற்றிகொள்ளப்பட்டதன் எழுச்சி நிகழ்வுகள் வன்னயில் புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, தர்மபுரம், மல்லாவி, துணுக்காய், அக்கராயன், பூநகரி, முழங்காவில் உட்பட பல பிரதேசங்களில் மக்களால் போர் எழுச்சிக் குழுக்களினுடாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இவ் எழுச்சி நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு வருகின்றனர்.

## மாலை வேண்டாம் பணம் கொடுங்கள்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தனது 55வது பிறந்தநாளான கடந்த 29ம் திகதி, அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அவ் அறிக்கையில், தனது பிறந்தநாளுக்கு வாழ்த்துத் தெரிவித்து மலர் கொத்துக்களோ, மலர்மாலைகளோ அனுப்பவேண்டாம். அதனைப் பணமாக போரிடும் இராணுவத்தினருக்கு வழங்குவதற்கு முன்வருமாறும் கோரியுள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள படையினரின் வெற்றிக்கு பிரார்த்தனை செய்யுமாறும் அவ் அறிக்கையின் வாயிலாக கோரியுள்ளார்.

## 8வது அகவையில் நுழையும் தமிழீழ வானொலி

புலிகளின் குரல் வானொலியின் சகோதர ஒலிபரப்பான தமிழீழ வானொலி தனது 7 ஆண்டு காலப் பணியை இன்றுடன் நிறைவு செய்து 8வது ஆண்டில் நுழைகின்றது. 1993 ஜூலை 1ம் திகதி ஆரம்பமாகிய இவ் வானொலி, தமிழீழ மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய கருத்துக்களை கட்டி வளர்ப்பதையும் செய்திகள் வழங்குவதையும் செய்து வருகிறது. 8வது அகவையில் நுழைந்திருக்கும் தமிழீழ வானொலிக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சுபாஜினி துரைராசா ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## கவிதை முற்றம்

### ஓய்வும் பயனும்!



ஓய்வாக இருக்கையில் தம்பி – நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோடமைதி சேரும்! –நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு – நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் – இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

கதைகளும் எழுதிப் பழகு – பூங்
காவினில் உலவி வருவாய்!
புதைந்திடும் அறிவு வளரும் – மனம்
புதுக்கிடும் வாழ்வு பெறுவாய்!

அறிவியல் ஆய்வு செய்வாய் – நீ
அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு – உளச்
செழுமையும் வலியும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் – உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் – வருந்
தீமையும் பொய்யும் களைவாய்!

*பாவலரேறு பெருஞ்சித்திரனார்*
*நன்றி: தமிழ்ச்சிட்டு*

## வினா-விடை முற்றம்


*கடந்தவார விடை:*

1. சீனா
2. சிறுத்தை
3. 1870 ல் பிரித்தானியாவில்
4. வியாழன்
5. லூனா - 1
6. 1910ல்

### வினா-விடை முற்றம்


1. உலகில் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள விமான நிலையம் எது?
2. சனத்தொகை கூடிய நாடு எது?
3. மிகப் பெரிய சமுத்திரம் எது?
4. உலக மெய்வல்லுநர் போட்டிகளில் இதுவரை அதிக தங்கப்பதக்கம் பெற்றவர் யார்?
5. 'சுதந்திர மனிதர்' என அழைக்கப்படுபவர் யார்?
6. அதிக காலம் உயிர்வாழும் உயிரினம் எது?

*– விடைகள் அடுத்தவாரம்.*



## முல்லாவின் கதை படியுங்கள்

### சந்தோசம் இல்லையே!



ஒரு மரத்தடியில் சோகமே உருவாக ஒருவர் உட்கார்ந்திருந்தார். அந்த வழியே சென்ற நஸ்ருதீன் அவரைப் பார்த்து அருகே சென்றார்.

'ஐயா, தாங்கள் ஏன் இப்படிச் சோகமாக இருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

'நான் பணக்காரன். இதோ பாருங்கள், இந்தப் பை நிறையப் பொற்காசுகள் இருக்கின்றன!' என்று தம்மிடமிருந்த பையைக் காட்டிவிட்டு, மேலும் தொடர்ந்து பேசினார்: 'எனக்கு வீடு, வயல் எல்லாம் இருக்கின்றன. ஆனால் சந்தோசமே இல்லை. ஒரு நிமிஷம் கூடச் சந்தோசமாக இருந்ததில்லை. எங்கேயாவது கொஞ்ச நேரம் சந்தோசமாக இருக்கும் வாய்ப்புக் கிடைக்காதா என்று வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்தேன்.'

சோகமானவர் இவ்வளவு செய்திகளையும் சோகக் குரலிலேயே சொல்லி முடித்தார். கேட்டுக்கொண்டிருந்த நஸ்ருதீன் திடீரென்று அவர் கையில் வைத்துக்கொண்டிருந்த பணப்பையைப் பறித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்.

'ஐயோ! என் பணப் பை' என்று அலறியபடி, சோகமானவர் நஸ்ருதீன் பின்னே ஓடினார்.

நஸ்ருதீன் தம்மைப் பிடிக்க வருபவரிடம் சிக்காமல் ஓடி இரண்டு மூன்று வீதிகள் சுற்றித் திரிந்து படுவேகமாக முதலில் சோகமானவர் இருந்த மரத்திடம் வந்தார். பணப் பையை அந்த மரத்தடியில் போட்டுவிட்டு மற்றொரு மரத்தின் பின்னே மறைந்து நின்றார்.


பணப் பையைப் பறிகொடுத்தவர் சில நிமிடங்களில் அந்தப் பகுதிக்கு மூச்சிரைக்க ஓடி வந்தார். தம் பையைப் பறித்துச் சென்ற மனிதர் இருக்கிறாரா என்று பார்த்தார். நஸ்ருதீன் அவர் கண்ணில் படவில்லை. ஏற்கனவே சோகமாக இருந்தவர் மேலும் சோகமாகத் தாம் முதலில் உட்கார்ந்திருந்த மரத்தடிக்குச் சென்று உட்கார்ந்தார்.

அங்கே, அவருடைய பணப்பை இருந்தது. கண்கள் பிரகாசிக்க, முகம் மலர, 'என் பணப்பை! என் பணப்பை!' என்று உவகையோடு கூறிக்கொண்டே அந்தப் பணப் பையை மார்போடு அணைத்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினார்.

'சந்தோசமே இல்லை' என்று சங்கடப்பட்டவருக்குச் சந்தோசம் கொடுத்துவிட்ட திருப்தியோடு, நஸ்ருதீன் அங்கிருந்து சென்றார்.

## அறிந்துகொள்ளுங்கள்

### மின் மினிப்பூச்சி



இருள் சூழ்ந்திருக்கும் போது சில பூச்சிகள் மினுக் மினுக்கென்று ஒளி வீசுவதைப் பார்த்திருக்கலாம். இவை மின்மினிப் பூச்சிகள் எனப்படும். வயிற்றில் அமைந்துள்ள விசேட உறுப்புகளால் வெப்பம் இல்லாமல் ஒளியை மட்டும் இவை வெளியிடும். ஏடிபி என்ற என்சைம் மக்னீசியத்துடன் சேர்ந்து லூஸிஃபெரின் என்ற இரசாயனப் பொருள் ஒக்சிகரணமாகும் போது ஒளியுண்டாகிறது.

இந்த ஒளியைப் பூச்சியால் கட்டுப்படுத்த முடியும். வெவ்வெறு விதமான ஒளியை உண்டாக்கும் பலவகைப் பூச்சிகள் உள்ளன. இணையைக் கவர்வதற்காகவே இவ்வாறு ஒளி விடுகிறது. பெரும்பாலானவை கரும்பழுப்பு அல்லது கருப்பு நிறம். தொண்டைப் பகுதி பிரகாசமான நிறத்தில் இருக்கும். 4 முதல் 10 மி.மீ வரை இதன் நீளம் இருக்கும். பறவைகள் இப் பூச்சிகளைத் தின்பது இல்லை.

சிலவகைப் பூச்சிகளின் முட்டை, புழு, கூட்டுப்புழு கூட ஒளி விடுவதாக இருக்கும். கூட்டுப்புழுக்கள் நத்தை, மண்புழுக்களை உண்டு வளர்கின்றன. வளர்ந்த பூச்சிகள் உண்பதேயில்லை. வெப்பப் பகுதிகளிலேயே காணப்படும் இவை இரவில் தான் சஞ்சரிக்கும். பகல் நேரங்களில் செடிகளில் தங்கி ஓய்வெடுக்கும். சில வகைப் பூச்சிகளில் பெண்ணுக்கு இறக்கை கிடையாது.

## கண்டுபிடியுங்கள்


இந்த நான்கு ஆங்கில வார்த்தைகளில், ஒன்றே ஒன்று மட்டும் முற்றிலும் வித்தியாசப் பட்டுள்ளது.

**UAE**
**USA**
**UK**
**UNI**


அது எது? எப்படி அது வித்தியாசப் பட்டுள்ளது?

முயன்றுபாருங்கள்!
முடியாவிட்டால்
விடை அடுத்தவாரம்.

கடந்தவார விடை:
9 துண்டுகள்.



## நாற்று




# கரை அருகில்

காற்று சற்று உரத்து அவனைத் தடவி விலகிச் சென்றது. மீண்டும் தடவி, விலகி... உடல் சில்லிட்டுக் குற்றியது. இருள்; சூனியத்தில் எதையோ தேடினான். கடல் அசையாது செத்துக் கிடந்தது. வழமையாக மிதக்கும் உடல்களைப்போல்.

காதில் செருகி இருந்த குறை பீடியை எடுத்துப் பற்ற வைத்தான். குளிருக்குச் சுகமாக இருந்தது. வாய் கசகசத்தது; காறாப்பித் துப்பினான்.

'நாளைக்கு வீட்ட போவேணும், வந்து அஞ்சாறு நாளாச்சு, அங்க அவளும் பிள்ளையளும் திண்டிச்சுதுகளோ குடிச்சுதுகளோ' நினைவு எழுந்து நெஞ்சை அழுத்தியது; ஒரு பேய் போல, மனிதனை கொல்கிறமாதிரி...

கடலை உற்றுப் பார்த்தான்; தொலைவு வரை எதுவும் இல்லை. மூன்று நாட்களாகத் தொழிலில்லை. காற்று சுழற்றி அடிக்கிறது. கடலடி. படகுக்காரர் ஒருவரும் கடலில் இறங்கவில்லை. இந்த இலட்சணத்தில் என்னத்தை ஏற்றி இறக்கிறது.

இன்றுதான், கடல் அமைதியானது. இரண்டு பட்டி மாடுகள், முப்பது நாற்பது வரும். ஒருமாதிரி விழுத்தி, கட்டி ஏற்றி அனுப்பும்வரை போதும் போதும் என்றாகிவிட்டது. இனி மறு கரையில இருந்து வாறதை இறக்கவேண்டும்.

வீட்டில இருந்து புறப்படேக்கை அவள் வாசல் வரை வந்தாள். கடைக்குட்டி இடுப்பில் இருந்தான்; நிர்வாணமாக.

'அவன் எப்பவும் வடிவுதான்; எப்படி இருந்தாலும்' இயலாமைக்கு மனம் நியாயம் கற்பித்தது.

ஊரில வசதிதான், எல்லாத்தையும் விட்டுட்டு ஓடி வரும்வரைக்கும் நிம்மதியான வாழ்வு; இப்ப கையில காசுக்கு வழியில்லை, கடற்கரையில சேறோடும், சகதியோடும், ஆட்டோடும், மாட்டோடும் போராட்டம். வாழவேண்டும் வேறு வழியில்லை.

காற்றில வாடை, மூக்கைத் துளைத்து நெஞ்சுக்குள் இறங்கியது. துர்வாடை; ஆடோ, மாடோ செத்திருக்கலாம்; கரையில் எங்கயாவது, இல்லை எனில் சற்றுத் தள்ளி உள்ள தீவில்... ஒருவேளை மனிதராகக்கூட இருக்கலாம்.

கடற்கரை மண் இலகுவானது; தோண்டுவதற்கும் புதைப்பதற்கும், அவனே நிறையத்தடவைகள் அதனைச் செய்திருக்கின்றான். கையில்லாமல், காலில்லாமல், தலையில்லாமல், மனிதர்கள்... அடிக்கடி அக்கடலில் மானுடம் செத்து மிதந்தது.

மனிதர்கள் அழிய அழிய மீண்டும் பயணித்தார்கள். தேவை; வாழ்வதற்கான தேவை. அவன் இந்தக் கடற்கரையில் காத்திருப்பதுபோல, அதுவும் ஓர் தேவை.

நினைவுகளுக்குள் ஆழ்ந்து போனான். கடலில் திடீரென இருள் கிழித்து ஒளிக்கோடுகள்; நெருப்புத் தணல்களின் சரமாரியான பாய்ச்சல்.

நெஞ்சு திகைத்து உள்ளம் நடுங்கியது. தாமதித்த வெடியோசைகள் காதில் மோதின.

'மாதாவே, நாசமறுவாங்கள் தொடங்கீட்டாங்கள், இண்டைக்கு ஆரோ எந்தச் சனமோ, தாயே காப்பாத்தம்மா, காப்பாத்தம்மா' நெஞ்சம் வருந்தி வேண்டியது. ஏக்கத்தோடு அத்திசை பார்த்தான்.

ஓய்ந்தது; அந்தக் கார் இருள். 'யாருக்கு? என்ன நடந்தது...?' மனம் குடைந்தது.

கண்ணைச் சுருக்கி நன்றாக உற்றுப்பார்த்தான். இருள் திரை; எதுவும் தெரியவில்லை. நீண்டநேரம் மன அமைதியற்று கடலைப் பார்த்தபடி இருந்தான்.

மனம் சோர்ந்து போனது, கையை மடித்து தலைக்கணைவைத்து மண்ணில்



சாய்ந்தான். அவனைச் சுற்றி இருள். ஒன்றிரண்டு வெள்ளிகள் மட்டும் மின்னின.

கண்கூசியபோது எழுந்தான். வெய்யில் முகத்தில் விழுந்தது. பதறி எழுந்து கடலைப் பார்த்தான். சற்றுத் தொலைவில் மனித உடல் ஒன்று; அலை அற்ற கடல் அது அசையாது கிடந்தது.

சற்றுக் கரையில் என்றால் யாராவது ஒருவன் இறங்கி இழுத்து வந்திருப்பான். ஆனால் இது சிறிது தள்ளிக் கிடந்தது.

கரையில் சனம் கூடியது. உடல் அசையவில்லை; கும்பல் அசைந்தது. ஒருவருக்கும் இறங்கத் துணிவு வரவில்லை. வழியில் 'அவங்கள் வந்திட்டா...' சிறிது நேரத்தில் இரண்டு உடல்கள் மிதக்க வேண்டியிருக்கும்.

அவனுக்கு வியர்த்தது. இதயம் வெந்து தவித்தது. சக மனிதனொருவன் சடலமாக கடலில்; அநாதரவாக வெறும் பார்வையாளனாக எப்படி இருப்பது?

இறங்கினான்; கால் நனைந்தது. சேறு இழுத்தது. அவன் உணரவில்லை. நடந்தான். கரை சலசலத்தது; அவனுக்குக் கேட்கவில்லை.

சடலமாகக் கிடப்பது ஒருவனோ ஒருத்தியோ, ஆனால் மானிடம். நேற்று வரைக்கும் இரத்தமும், சதையும், உணர்வுமாய் உலாவிய மனிதன். உறவுகள், பந்தங்கள், பிணைப்புகள், நெருக்கடிகள், அதற்குள் தவிப்பவர்களின் பிரதிநிதிகளில் ஒராள்.

மனைவிக்கோ கணவனுக்கோ ஏதாவதொரு வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு இங்கு சடலமாக....

இவனது அல்லது இவளது வரவை எதிர்பார்த்தபடி யாரோ ஒருவர், பலராகக் கூட இருக்கலாம் காத்திருப்பார்கள். வீட்டை விட்டுப் புறப்படேக்கை கண்டாயத்தில் நின்ற அவனது மனைவி மாதிரி, ஆடை அற்று நிர்வாணமாக தாயின் இடுப்பில் நின்று கையசைத்த அவனது குழந்தைமாதிரி.

நெஞ்சு நனைந்தது; நீந்தினான். களைத்து விடக்கூடாது என்ற நிதானத்துடன் கைகளும் கால்களும் அசைந்தன.

இலக்கு தொலைவில், இந்நேரத்தில் எல்லாம் மிகவும் முக்கியமானது நிதானம்தான். சஞ்சலம் அல்லது அவசரம் எல்லாவற்றையுமே பாழாக்கலாம்.

நெருங்கி விட்டான்; தற்போது சிலமுடிவுகளுக்கு வந்திருந்தான். அரை நிர்வாணமாக ஓர் ஆணின் சடலம் தலைகுப்புறக் கிடந்தது.

தலைமயிரும் எஞ்சிய ஆடையும் அடையாளம் சொல்லியது.

உயிர்ப்பறவை பரந்த வெறும் கூடு, உணர்வில்லை; அசைவில்லை. அலையின் புறத்தாக்கத்துக்கு அசையும் சடம். சாவு ஒரு மனிதனை சவமாக்கி, சடலமாக்கி சுற்றி இருப்பவர்களை வருத்தி நோகடித்து....

சடலத்திற்கும் அவனுக்கும் இடைவெளி இன்னும் சில எட்டுகள்தான். இடைவெளி நன்றாக குறுகிவிட்டது. உன்னி வலித்தான் என்றால் பத்துப் பதினைந்து வினாடியில் அதைத் தொட்டுவிடலாம்.

அவர்களுக்குள் வேறு பாடுகூட பெரிதா ஒன்றுமில்லைப்போல் அவனுக்கிருந்தது. அவன் மனிதன். அது சடலம். அவன் உணர்வுமயமானவன் அது சடலம். மற்றும்படி ஒன்றுமில்லை.

இவனுக்காக படலைவரை வந்து வழியனுப்பினவள் காத்துக் கொண்டிருப்பதைப் போலத்தான் அந்த மனிதனுக்காகவும் ஒருத்தி காத்திருப்பாள். பிள்ளைகளின் தொகை ஒரு வேளை மாறுபடலாம்; காத்திருப்பு ஒன்றுதான்.

இவனுக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. மனைவியைப் பார்க்க, பிள்ளைகளைப் பார்க்க; அவனுக்கு முடிந்தது. இவன் போகாவிடில் வீட்டில எப்படி அடுப்பெரியாதோ, அதை மாதிரித்தான் அவனது வீட்டில் இன்றைக்கு எரியாது. இனி எத்தனைநாளுக்கு எரியுதோ...

நினைவுகளைக் கலைத்து உன்னி வலித்து நிதானித்து நிமிர்ந்தான். தூரத்துக் காற்றில் உதைப்புச் சத்தம்; நெஞ்சு திகைத்தது. கையும் காலும் இயங்கமறந்து உதறியது. சடலம் மெதுவாக அவனை நோக்கி அசைந்தது.

தூரத்தில் புள்ளியாக ஹெலி.

அந்த நாசமறுத்த இயந்திரத்திடமிருந்து தப்புவது இயலாத காரியம். கடல், மறைவற்ற வெளி. எதிர்ப்பின் இருப்பை இலகுவாக உணர்ந்துகொள்ளும் வசதி.

சிலவேளைகளில் அவன் தண்ணீரில் தொடுவதுமாதிரிக் கூட வருவான். சடலத்தை அவர்கள் கண்டுவிடுவார்கள்; ஆனால் அது சடலம்தான் என்பதை உறுதிப்படுத்த இரண்டு மூன்று சுழற்ச்சி அவனுக்குத் தேவைப்படும் அதற்குள் சடலம் சல்லடையாகிவிடும்.

அவன் தப்ப முயற்சிக்கலாம். மூச்சை அடக்கி சுழியோடி முயன்று பார்க்கலாம். ஆனால் அது உறுதியாகச் சொல்லமுடியாது. இப்படியான சந்தர்ப்பங்களில் எவரும் தப்பி வந்ததாகவும் அவனுக்கு நினைவில்லை.

எப்படியோ சாவு அருகில் வந்துவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் இரண்டு உடல்கள் மிதக்கும்; சனம் கரையில கூடிநிற்கும். இன்னொருவன் அவற்றை இழுத்துச் செல்லவருவான்.

அந்த மூன்றாவது மனிதனுக்கு உதவவேண்டும்போல் அவனுக்கிருந்தது. கயிற்றின் ஒரு நுனியைச் சடலத்தின் கழுத்தில் போட்டான். மறுமுனையை பல்லால் இறுகப்பற்றினான். வேகமாக நீந்தினான். தன்னால் இயலக்கூடியளவு வேகமாக சக்தி எல்லாம் ஒன்றிணைத்து மிக வேகமாக.....

மாலை. இரு சடலங்கள் அலையற்ற கடலில் அசைவற்று... கரையில் கும்பலாக சனம்.

அவன் கரையில் நின்று வெறித்துப் பார்த்தான். மனிதர்கள் அநாதரவான சடலங்களாக, அழுகி சிதைந்து..., சகமனிதனொருவன் வெறும் பார்வையாளனாக... எப்படி...

நீர் கால் நனைத்தது. சேறு இழுத்து நிறுத்தியது. வீட்டில் காத்திருக்கும் மனைவியும் பிள்ளைகளும் நினைவுக்கு வந்துவிட்டுச் சென்றார்கள். தொடர்ந்து நடந்தான்.

அவன் வெற்றியடையலாம்; வெல்லத்தான் வேண்டும். இல்லாவிட்டால்...

அந்திக் கருக்கலில் இன்னொரு மனிதன் இறங்குவான்.

— வசந்தன் —




# அமெரிக்க இராணுவத்தில் இந்தியப் பெண்

இந்தியப் பெண்கள் அமெரிக்காவில் உயர்ந்த பதவிகளில் இருப்பது மட்டுமே இதுவரை புகழ் பெற்ற விடயமாக பேசப் பட்டுவந்துள்ளது. ஆனால் சமீபத்தில் டெல்லியைச் சேர்ந்த பெனிகா பாலி என்னும் பெண் அமெரிக்க இராணுவத்தில் இணைந் ததன் காரணமாக அமெரிக்க இராணுவத்துறையிலும் இந்தியப் பெண்ணின் காலடி பட்டுவிட்டது என்ற பெருமைக்கு பாரதப் பெண்கள் ஆளாகியுள்ளனர். இந்தப் பெனிகா பாலி என்ற பெண் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் அமெரிக்காவில் புகழ் பெற்ற வெஸ்ட் பொயிண்ட் இராணுவ அகாடமியில் பயிற்சியை முடித்துவிட்டு கடந்த மே மாத இறுதியில் 8வது எயார் போர்ன் பிரிவில் சேர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தி யாவில் பிறந்த பெண் எதற்கு அமெரிக்காவில் இராணுவத்தில் சேர வேண்டும் எனப் பலரும் நினைக்கலாம். அதற்கான விளக் கம் இதோ. பெனிகா பாலி சிறுவயதிலேயே அமெரிக்காவில் குடி புகுந்துவிட்டார். அவர்தான் சிறுவயது முதலே இராணுவத்தில் தான் பணியாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைத் தன் இத யத்தில் ஆழமாகப் பதித்துவைத்ததாகவும் அது தனது அமெ ரிக்காவில் குடிபுகுந்த காரணத்தால் அங்குள்ள இராணுவத் திலே சேரும்படியான சூழ்நிலையை உருவாக்கி விட்டதாகவும் தெரிவிக்கிறார். ஆக மொத்தம் பாரதப் பெண்களின் திறமைக்கு எதுவும் விதிவிலக்கல்ல என்பதை இந்த பெனிகா பாலி நிரு பித்துள்ளார்.

# விதவை நிலை

பெண்கள் நாட்டின் கண்கள் என்று
பெரியோர் சொன்னார்கள்
அவளே வீட்டின் விளக்கு என்றும்
அன்று சொன்னார்கள்
கணவன் என்றால் கண்கள் என்று
கற்றும் தந்தார்கள்
இந்த கணவன் இறந்தால் கைம்பெண்
ஆக்கி காட்டி மறைத்தார்கள்
பிச்சிப்பூ சூடி திலகம் தானிட்டு
சுற்றி வந்தவளை இன்று
சுமையெனவும் நினைத்தார்கள்
செல்வம் பொழியும் சிறீதேவி
என்று சிந்தை மகிழ்ந்தவரும்
இன்று செல்லாக் காசாக்கி சிதைப்படுத்தி விட்டார்கள்
சுற்றித் தினம் வந்து சுகமான கதை கேட்டவர்...
மகிழ்ந்து நின்ற தோழிகள்..
இன்று மறைந்தே போனார்கள்
சகுன தடையான சாக்கடைகள்
சொன்னபடி செய்தார்கள்
மனிதர் அவள் சிந்தை குலைத்தார்கள்
மனைவியை இழந்ததும் மறுதாரம்
அவனுக்கு உண்டு
கட்டிளம் அவளுக்கு இல்லை
சிரித்தே மகிழ்ந்தவள் நாள் தோறும்
இன்று சீரழிந்த நிலையில்
சிறைபட்டுத்தான் போனாள்
சமுதாய சிற்பிகளே! நாளைய தலைவர்களே
ஆணுக்கொருநீதி பெண்ணுக்கொரு நீதி
என்ற தடையை உடைத்திடுங்கள்
கைமை என்பது நிரந்தரமல்ல
அதுவும் ஓர் இலையுதிர்காலம்
என்று ஏற்றிடுவோம் ஓர் சபதம்.

*நன்றி: பெண் உரிமை*

# ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு – 4

தமிழர்களின் தேசிய இதழாகிய ஈழமுரசு தனது பணியில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றிய கருத்தினை அறிவதற்கும், தனது பணியினை சுய மதிப்பீடு செய்துகொள் வதற்காகவும் வருடந்தோறும் கருத்துக் கணிப்பை வாசகர் மத்தியில் நடாத்தி வருகின்றது. தொடர்ந்து ஈழமுரசின் வளர்ச்சிக்கு ஆதரவு தரும் வாசகர்கள், இவ் வருடமும் உங்கள் கருத் துக்களை வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். நீங்கள் வழங்கும் கருத்துக்கள் எதிரொலியில் பிரசுரிக்கப்படும். *(ஆர்)*

1. நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா? ஆம் ☐ இல்லை ☐ (ஆம் எனில் சந்தா இல. -----------)
2. சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?
   வாரந்தோறும் ☐ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ☐ ஒரு வாரம் மட்டும் ☐ எப்போதாவது ☐
3. ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?
   1/2 மணி நேரம் ☐ 1 மணி நேரம் ☐ 2 மணி நேரமும் ☐ அதற்கு மேலும் ☐
4. கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப் படித்து வருகின்றீர்கள்?

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதே இல்லை |
|---|---|---|---|
| சினிமா .......................... | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை .......................... | ☐ | ☐ | ☐ |
| பெண்கள் .......................... | ☐ | ☐ | ☐ |
| சிறுவர் .......................... | ☐ | ☐ | ☐ |
| சிங்களம் கூறும் சில............ | ☐ | ☐ | ☐ |
| உலகக் கண் .................. | ☐ | ☐ | ☐ |
| மாயோன் பத்தி ................ | ☐ | ☐ | ☐ |
| உலக வரலாற்றில் பதிவானவர்கள் ... | ☐ | ☐ | ☐ |
| பலதும் பத்தும் ................ | ☐ | ☐ | ☐ |
| பேம்பீ.......................... | ☐ | ☐ | ☐ |
| கலைந்த சொற்கள் ............ | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு .................. | ☐ | ☐ | ☐ |
| புகலிடம்........................ | ☐ | ☐ | ☐ |
| பார்வை ........................ | ☐ | ☐ | ☐ |
| பண்ணையார் .................. | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம்........ | ☐ | ☐ | ☐ |
| புத்திசிகாமணி பதில்கள் ....... | ☐ | ☐ | ☐ |

5. ஈழமுரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன? அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?

| | விருப்பம் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம் .................................. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| இந்தியா.................................. | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| தமிழீழச் செய்தி ...................... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| குசும்புச் செய்திகள்..................... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| உட்பக்கச் செய்தி [பொது].......... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| முன் – பின் பக்கங்கள் ............... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |


6. நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?
   செய்திகளுக்காக................................ ☐
   இராணுவ அரசியல் ஆய்வுகளுக்காக ....... ☐
   இலக்கிய விடயங்களுக்காக.................. ☐
   வேறு விடயங்களுக்காக ...................... ☐ (விபரம் குறிப்பிடவும்)..........................................................
7. நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?
   ★ தலைப்பு செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ☐
   ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப்படுத்தியில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ☐
   ★ ஈழமுரசில் நல்ல விடயங்கள் வருவதாக நண்பர்கள் உறுதி செய்ததனால் ☐
8. ஈழமுரசில் இடம்பெறும் கலைந்த சொற்கள் உங்களுக்கு திருப்தியளிக்கிறதா? ஆம் ☐ இல்லை ☐
   இல்லையென்றால் காரணம் ..........................................................................................
9. ஈழமுரசின் கீழ்காணும் அம்சங்களில் உங்கள் கருத்தைக் குறிப்பிடுங்கள்

| | மிகச் சிறந்தது | நன்று | மோசம் |
|---|---|---|---|
| ஒட்டுமொத்த உள்ளடக்கம் ................................ | ☐ | ☐ | ☐ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும்............. | ☐ | ☐ | ☐ |
| கட்டுரைகளின் மொழி நடையும் உள்ளடக்கமும்.... | ☐ | ☐ | ☐ |
| இதழின் வடிவமைப்பு........................................ | ☐ | ☐ | ☐ |
| முன்பின்பக்க வடிவமைப்பு ................................ | ☐ | ☐ | ☐ |
| இதழின் ஆவணப்பயன்பாடு ................................ | ☐ | ☐ | ☐ |

10. உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளைக் கேட்கும் வாய்ப்புண்டா?
    ஆம் ☐ இல்லை ☐
11. ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா?
    ஆம் ☐ இல்லை ☐
    விரும்பினால் – எந்த மாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடவும் ..........................................................
    ..........................................................................................
12. ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள் *(தேவைப்படின் மேலதிக பக்கம் இணைக்கவும்)*
    ..........................................................................................

பெயர்: ..........................................................................................
வயது: 25க்கு கீழ் ☐ 25 – 35 வரை ☐ 35க்கு மேல் ☐
ஆண் ☐ பெண் ☐
முகவரி:..........................................................................................
..........................................................................................
.................................................... நாடு ....................................................
தொலைபேசி இலக்கம்:..........................................................................
தொலைநகல் இலக்கம்:..........................................................................

**ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்**




## Sunday 30 - 07 -2000 9.00 am - 9.00 pm
## Norman Park, Hayes Lane, Brombley, Kent

புதிய நூற்றாண்டின் புதுப்பொலிவுடன்
ஐந்தாவது மாபெரும் தமிழர் விளையாட்டு விழா
விதம் விதமாக, தரமான சுவைமிகு தமிழ் உணவுவகைகள்......
33க்கு மேற்பட்ட தமிழீழ பழைய மாணவர் சங்கங்கள் கலந்து கொள்ளும்
துடுப்பெடுத்தாட்ட, கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டிகள்.....
சிறுவர்களுக்கான (Tethered Balloon) பறப்புகள்,
Sam The Snake, Jungle Terrain, Huge Bouncy Castle.. ....
தமிழீழ வாழ்க்கை வரலாறுகளைச் சித்தரிக்கும் கண்காட்சிகள் ........
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பரிசு -
Brand new BMW 316 i SE Compact Car with many extras......
அனைத்தும் பாரிய அளவில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
மண்ணின் நினைவுகளையும், உணர்வுகளையும் பகிர்ந்திட திரண்டு வாரீர் !

**விசேட பாதுகாப்பு ஒழுங்குகள்**

நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களின் நலன் கருதியும், நிகழ்வு சிறப்பாக நிறைவேறும் பொருட்டும் பொதுமக்களும், வாகனங்களும் காவல்த்துறையினரால் சோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்பதை அறியத்தருகிறோம். அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### The 5th Tamil Sports Festival

An unforgettable way to see out the
most memorable festival of the Millennium.
More than 33 Past Pupils Associations of Tamil Eelam will be taking part in the Cricket, Volley Ball & Net Ball events.
For the Kids, there will be a Balloon ascent
which will rise to a height of 50 foot
(it will take 2-3 people on each ascent)
+ in addition there will be the usual fairground attractions.
Raffles (prize)
a Brand New BMW 316i SE compact car with many extras.
Village shops selling a variety of items.
Excellent food stall, the standard of which you are all well aware of, selling Eelam food and Delicacies.
A feast of Fire Works will end the day.
Bring your family & friends (Tamils or non Tamils)...
Let us all enjoy together!!


**Admission £3 per person for each entry (Under 10s free of charge)**
**Plenty of Car Parking Facilities - £3 per car for each entry**


**In view of previous experience the organisers reserve the right of entry to persons who they suspect will cause disruption.**

விபரங்களுக்கு (For Information):
**United Tamils Organisation**
**020-7403 4554, 0956-314 370, 0956-329 660**




தாயக உணர்வுடன் தமிழ்ப்பண்பாடு
மணங்கமழ கடலலையெனத் திரண்டு வருக!
தருக உங்கள் பங்களிப்பை !!
ஒன்று கூடி ஒருவராய் மகிழ்வோம் !!!



விரைவில் ஆரம்பமாகின்றது

# கண்ணா ரெலி ஏஜென்சி

## Kanna Tele Agency

ஏ-வன் (A1) ரான்ஸ்வேல்ட் (Transworld)

ஈழம் (Eelam) முண்டபோன் (Mundophone)

ஞானம் (Gnanam) தமிழன் (Thamizhan)

போன்ற தொலைபேசி அட்டைகளை அதிகூடிய கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் உங்கள் திருமணம், பிறந்தநாள் போன்ற வைபவங்களை VHSல் இருந்து Video CDக்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**Ostermaersch 37, 44145 Dortmund.**

Tel : 02941 273848 Fax : 02941 273847 Mobile : 0173 5372239




Pub. Ger.

# வாரம் ஒரு விடயம்

## மரபணுக்களின் ஆய்வு வெற்றி

கடந்த 26ம் திகதி உலகில் வெளிவந்த அனைத்துச் செய்திகளையும் விட ஒரு செய்தி அனைவரது கவனத்தையும் ஈர்த்துக் கொண்டது. ஆம்! அச்செய்தி மனித மரபணுக்களின் செயற்பாடுகளைப் பற்றிக் கண்டறிவதற்காக உலக விஞ்ஞானிகள் நடாத்திய சோதனைகளின் வெற்றிச் செய்தியே அது. அது பற்றிச் சுருக்கமாக இப் பத்தியில் இவ்வாரம் பார்ப்போம்.

இந்த உலகப் பந்தின் கடந்தகாலப் பதிவுகள் மிகவும் சுவாரசியமானவையும், ஆச்சரியமானவையுமாகும். சுமார் 650 கோடி வருடங்களுக்கு முன்னர் நாம் இப்போது வசிக்கும் இந்த பூமி உருவாகவே இல்லை. பூமிக்குப் பதிலாக தூசுகளும் பெயர் தெரியாத வாயுக்களுமே இந்த இடத்தில் மிதந்துகொண்டிருந்தன. இவை இறுக இறுக மெல்ல மெல்ல இந்தப் பூமிப்பந்தும் உருவானது. ஆனால் பூமி அப்போது கற்பனை செய்து பார்க்க முடியாத அளவு கடுமையான வெப்ப நிலையிலும் இருந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட பல மாற்றங்களின் காரணமாகவே பூமிக்கு வளி மண்டலம் ஒன்று உருவானது. அதன்பின்னர் மழை வந்தது, கடல் தோன்றியது, கண்டங்கள் தோன்றின. இவ்வாறாக அடுக்கிக்கொண்டே போகலாம். எனினும் இந்தப் பூமியில் அப்போது ஒரு புல் பூண்டுகூடக் கிடையாது. ஏன் பிராணவாயு கூட இல்லை. அதன்பின்னர் பல இலட்சம் ஆண்டுகளாக இந்தப் பூமியில் நடந்த மாற்றங்களே பிராண வாயுவை உண்டாக்கின. அதன் பின்னர் கடலில் பாசி உருவானது, இதையடுத்து நிலத்தில் புழு பூச்சிகள் தோன்றின, தாவரங்கள் முளைத்தன, கடலில் மீன் தோன்றியது, சின்னச் சின்னப் பிராணிகள் வந்தன, குரங்கு தோன்றியது, கடைசியில் குரங்குகள் பரிணாமம் பெற்று ஓரளவு மனிதனின் சாயல்கொண்ட Ramapithecus என்ற நமது முன்னோர்கள் தோன்றினார்கள். இது நடந்தது சுமார் ஒன்றரைக்கோடி வருடங்களிற்கு முன்னர். பிறகு ஒரு கோடி வருடங்கள் கழித்து ஹோமோ எரக்டஸ் (Homoerectus) என்ற பெயரில் மனிதன் அடுத்த பரிணாம வளர்ச்சியை அடைந்தான். விலங்குகளைப் போல நான்கு கால்களால் நடக்காமல் இரு கால்களால் நிமிர்ந்து நின்றவனும் இவன்தான். இவன் தோன்றி சுமார் 50 இலட்சம் ஆண்டுகளுக்குப் பிறகு தற்கால மனிதனைப் போன்ற முழு உடலமைப்புக் கொண்ட மனிதன் தோன்றினான். உணவுக்காக விலங்குகளை மட்டுமே வேட்டையாடிவந்த இவன்தான், ஹோமோ சபியன்ஸ் (Homo Sapiens). இந்த மனிதன்தான் முதல் முதலில் நிலத்தில் விவசாயம் செய்ய ஆரம்பித்தவன். இவனது காலம் எமக்கு ஓரளவான அண்மைக் காலம்தான். அதாவது சுமார் 10,000 ஆண்டுகள். தனது பயணத்தை பாசியில் இருந்து ஆரம்பித்த மனிதகுலம், இன்று எவ்வளவோ விஞ்ஞான சாதனைகளையும், அதிசயங்களையும் நிகழ்த்தும் ஒரு குலமாக மாறிவிட்டது. இதேவேளை மாறுபாடாகச் சென்று மனித குலத்தை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட மனித குல உறுப்பினர்களும் இருக்கின்றார்கள் என்பதை மறுக்கமுடியாது.

அந்தவகையில் கடந்த 27ம் திகதி மனித குலம் பெற்ற ஒரு வெற்றிச் செய்திதான் மனித மரபணுக்களின் செயற்பாட்டினைக் கண்டறிந்த முயற்சி. எமது மனித உடலின் வளர்ச்சியில் மரபு அணுக்களுக்குத்தான் பெரும் பங்கு உண்டு. தோற்றம் உட்பட அனைத்தையும் தீர்மானிப்பவை இந்த மரபு அணுக்கள்தான். அப்பா அம்மாவின் சாயல்கள் பிள்ளைகளுக்கு வருவது அல்லது அவர்களின் பரம்பரையில் உள்ளவர்களின் சாயல்கள், குணாதிசயங்கள் வருவது இந்த மரபு அணுக்களின் வேலைதான். எமது உடலிலுள்ள கலங்களுக்குள் மறைந்திருந்து இந்த மரபணுக்கள் தமது வித்தைகளைப் புரிகின்றன. ஆயினும் இந்த மரபு அணுக்களில் மாறுபாடுகள் ஏற்பட்டால் மனிதனுக்குப் பாதகமான விடயங்களும் எழுந்துவிடுகின்றன. புற்றுநோய், இதயநோய்கள் உட்பட பல நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் எழுவது அப்போதுதான்.

இப்போது பெற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான வெற்றி இந்த வாய்ப்புக்களை அகற்றிவிடக்கூடிய வழியைத் தோற்றுவித்துள்ளதாகவே கருதப்படுகிறது. இந்த வெற்றி ஆய்வுக்காக உலக விஞ்ஞானிகள் பலர் சேர்ந்து கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து உழைத்துள்ளனர். இவ்வாறான உழைப்பின்போது அவர்கள் 300 கோடி டி.என்.ஏ. மூலக்கூறுப் பிரிவுகளைக் கண்டுபிடித்துள்ளனர். டி.என்.ஏ. என்றால் என்ன? அதற்கும் சிறு விளக்கம் தரவேண்டும்.

எமது உடலில் உள்ள ஒவ்வொரு கலங்களுக்குள்ளும் இரு மூலக்கூறுகள் உள்ளன. ஒன்று டி.என்.ஏ. இரண்டாவது ஆர். என். ஏ. உலக விஞ்ஞானிகள் பலர் சேர்ந்து குழுவாக இயங்கி 10 ஆண்டுகள் இராப்பகலாக உழைத்துக் கண்டுபிடித்த 300 கோடி உப டி.என்.ஏ. மூலக்கூற்றுப் பிரிவுகளால் மனிதனுக்கு உருவாகும் நோய்களைத் தீர்க்கக் கூடிய வழிவகைகளையும் கண்டுபிடித்துள்ளனர். நோய்களை உருவாக்கும் மரபு அணுக்களை மிகச் சரியாகக் கண்டுபிடிக்கும் வாய்ப்புக்களும் இந்த ஆய்வின்மூலம் கிட்டியுள்ளது. இந்த வெற்றியினால் ஒரு குழந்தை எதிர்காலத்தில் நோயாளியாக வருமென அதன் கருவிலேயே கண்டுபிடித்துவிடலாம். கருவிலேயே இந்த மாறுபாடான மரபு அணுக்களை அழித்து அக்குழந்தையை ஆரோக்கியமான ஒரு உறுப்பினராக இவ் உலகில் நடமாட இந்த விஞ்ஞானச் சாதனையினால் முடியும். விஞ்ஞானிகள் செய்த இச் சாதனையை 21ம் நூற்றாண்டின் முதல் தொழில்நுட்ப வெற்றியென இங்கிலாந்துப் பிரதமர் ரொனி பிளேயர் பாராட்டியுள்ள அதேவேளை, மனித குலத்தின் அறிவியலின் மிகப்பெரிய சாதனை இதுவென அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் தெரிவித்துள்ளார். அவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்களோ இல்லையோ இந்த மருத்துவ வெற்றிக்காக நாமும் அவ் விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பது கடமையாகும்.

# உலகம் சந்தித்த போர்கள்

## பிரெஞ்சு துருப்பினர் சிக்கி மடிந்த அசின்கோட்

ஒரு போராட்டத்தில் வாழ்வா சாவா என்ற நிலை எழும்போது அடக்கு முறைக்கு உள்ளாகும் தரப்பு மிக ஆவேசம்கொண்டு போராடும். மனிதனில் மாத்திரம் மட்டுமல்ல, விலங்குகளுக்குக்கூட இந்த நியதி பெரும்பாலும் பொருந்தும். ‘கீரியிடம் அகப்படும் பாம்புகூட’ தன்னால் முயன்றவரையில் எதிர்த்துப்போராடும். அதைப்போல ‘சிங்கத்தின் வாயில் அகப்படும் மான்கூட’ இயலுமானவரை தப்பிப்பதற்கான போராட்டத்தை மேற்கொண்டபின்னரே மடியும். இவ்வாறான நிகழ்வுகள் படைப்பியல் விதியில் பொதுவானது. விலங்குகளுக்கே இந்த நிலைமை என்றால், பகுத்தறிவினைக்கொண்ட மனிதன் எவ்வாறு தனது எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ளப் போராடுவான் என்பது சொல்லாமலே விளங்கிவிடும்.

அசின்கோட் போர்க்களத்திலும் ஆங்கிலத்துருப்புக்களுக்கு இவ்வாறான ஒரு நிலைமையே எழுந்தது. அசின்கோட் பகுதியில் பிரெஞ்சுத் துருப்பினரிடம் அகப்பட்டு மடிவதா? அல்லது வாட்டும் பசியிலும், மழையிலும் சிக்கி மடிவதா? என்ற நிலைமையே ஆங்கிலத்துருப்பினருக்கு எழுந்தது. இதனால்தான் வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் அவர்கள் ஆவேசத்துடன் குதிக்கத் தயாரானார்கள். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் அவர்களுக்குக் கிடைத்த படைத்தலைவன்தான். ஹென்றி ஆங்கிலத் தளபதிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த ஒரு தலைவன். தன்னையே நம்பிவந்த துருப்புக்கள் அசின்கோட் காட்டுப்பகுதியில் எதிரிகளிடம் சிக்கி மடிவதைத் தவிர்க்கவேண்டிய பொறுப்பும் ஹென்றிக்கு எழுந்தது. இதனால்தான் பிரெஞ்சுத் தரப்பு எதிர்பார்க்காத வியூகம் ஒன்றினை ஹென்றி தயாராக்கினார்.

ஆங்கிலத் துருப்புக்கள் நிலைகொண்ட பகுதி மிக ஒடுக்கமான காட்டுப்பகுதியாகும். இவர்கள் நிலைகொண்டிருக்கும் பகுதிக்கு சில மீற்றர்கள் அப்பால் இவர்களின் தொகையைவிட நான்கு மடங்கு அதிகமான பிரெஞ்சுத் துருப்புக்கள் பிரெஞ்சுத் தளபதிகளின் சிறப்பானவராகக் கருதப்பட்ட சார்ள்ஸ் து அல்பேட் தலைமையில் முகாமிட்டிருந்தனர். காலநிலைகூட ஆங்கிலத்துருப்புக்களுக்கு பாதகமான வகையிலேயே இருந்தது. தொடர்ந்தும் பொழிந்த கனமழையால் ஆறுகள் எல்லாம் பெருக்கெடுத்து, ஆங்கிலத் துருப்புக்கள் தப்பியோட முடியாதபடி நிலைமை. இந்த நிலையில்தான் பிரெஞ்சுத் துருப்புக்களின் முற்றுகையை உடைக்கவேண்டிய நிலை ஹென்றிக்கு எழுந்தது.

தன்னிடமிருந்த வீரர்களைக்கொண்டு ஹென்றி போர் வியூகமொன்றினைத் துரிதமாக அமைத்தார். படைக்கலம் தாங்கிய வீரர்களை நான்கு வரிசைகளாக மையப்படுத்தி நிறுத்தியதுடன், வில் வீரர்களை படை வகுப்பில் பக்க அணிகளாக இருபுறமும் நிறுத்தி படையின் மையப்பகுதிக்குத் தானே தலைமை ஏற்றார். ஹென்றியின் போர் வியூகத்தைக் கண்ட பிரெஞ்சுப் படைகளும் தமது போர் வியூகத்தை அமைக்க ஆரம்பித்தது. ஆங்கிலத் துருப்பினரைவிட எண்ணிக்கையில் நான்கு மடங்காக இருந்த இத் துருப்புக்கள் 5, 6 வீரர்களைக்கொண்ட அடுக்கு வரிசைகளாக நிறுத்தப்பட்டனர். இந்த வரிசைகளில் படைக்கலம் தாங்கிய வீரர்கள் முதல் குதிரைப் படைவீரர்கள், பீரங்கிப் படை வீரர்கள், வில்லாளர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர். பிரெஞ்சுத் தரப்பிடம் மட்டும் 600 பீரங்கிகள் இருந்தன. இந்தப் பீரங்கிகள்தான் அவர்களின் பாதுகாப்புக் கவசங்களாக விளங்கின.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்தப் போர்க்களத்தில் ஆங்கிலத் துருப்புக்கள் தோற்று மடிவது நிஜமெனவே விளங்கும். ஏற்கனவே பசியாலும், மழைக்குளிராலும் பாதிக்கப்பட்ட நிலையில் ஆங்கிலத் துருப்பினர் இருக்கின்றார்கள். போதாக்குறைக்கு பிரெஞ்சுத் துருப்பினரைவிட எண்ணிக்கையிலும் 4 மடங்கு குறைவு. இவ்வாறான நிலையில் எவ்வாறு அவர்களால் வெற்றிகொள்ள முடியும்?

ஆனால் ஹென்றியின் சிறந்த படைத் தலைமைத்துவம் இவ்வாறான நிலையை ஆங்கிலத்துருப்பினருக்கு எழ விடவில்லை. துருப்பினரிடம் அவருக்கு இருந்த மிகுந்த செல்வாக்கு அவருக்கு ஒரு பலமாக விளங்கியது. இவ்வேளை ஹென்றி தனது படைவீரர்களிடம் பேசத்தொடங்கினார். ஆங்கிலத் துருப்புக்களின் கடந்தகால வெற்றிகளை நினைவில் கொண்டும், தாயகமாகிய இங்கிலாந்து இப்போரில் வெற்றிவாகை சூடவும், ஒவ்வொரு படை வீரரும் தனது மனைவிமார்களையும், குழந்தைகளையும் நினைவிற்கொண்டு இப்போரில் ஈடுபடவேண்டுமென ஹென்றி மையத்தில் நின்று கர்ச்சித்தார். தங்களது அரசனே தங்களுக்கு மத்தியில் நின்று போராடுவது படைகளுக்கு புதிய ஊக்கத்தைக்கொடுத்தது. ஹென்றியின் வாயிலிருந்து முன்னேறும்படி கட்டளை கிடைத்ததுதான் தாமதம் ஆங்கில வில் வீரர்கள் பிரெஞ்சுத் துருப்புக்கள்மேல் மழையென அம்பைப் பொழிந்தனர்.

பிரெஞ்சுத் துருப்புக்களுக்கோ ஆங்கிலத்துருப்புக்களின் இந்த அதிரடியான ஆரம்பம் அதிர்ச்சியைக் கொடுத்தது. பிரெஞ்சுக் குதிரைப்படை வீரர்களும், படைக்கல வீரர்களும் ஆங்கிலேயர்களின் அம்புகளில் சுருண்டுவிழுந்தனர். மேலும் மேலும் சீறிவரும் அம்புகளில் இருந்து அவர்களால் தப்பிக்கமுடியவில்லை. அதனால் பிரெஞ்சுப் படைகள் ஆங்கிலத் துருப்புக்களை நோக்கி முன்னகர ஆரம்பித்தன. மிகப் பாரமான கவச உடைகள் ஒருபுறம், சேற்றில் கால்கள் புதைந்துகொள்ளும் நிலை மறுபுறமுமாக பிரெஞ்சுப் படையினர் சிக்கித் தத்தளித்தனர். ஒருவாறு படையின் மையப்பகுதிக்கு நகர்ந்தனர். இந்த நகர்வுதான் அவர்களுக்கு ஒரு வரலாற்றுத் தோல்வியைப் பெற்றுக்கொடுத்தது.

மிக ஒடுங்கி குறுகிய இடமாகியிருந்த மையப்பகுதிக்குள் இவர்கள் நகர்ந்ததால் அப்பகுதியில் குழப்பமும் நெரிசலும் மிகுந்தன. முன்னால் நகர்ந்த வீரர்கள் மாட்டுப்பட்டுக்கொண்டார்கள் என்பது தெரியாமலேயே மேலும் மேலும் பிரெஞ்சுத் துருப்பினர் நகர மிக நெரிசலான நிலை எழுந்தது. சுடுவதற்குக்கூட கைகளைத் தூக்கப் போதுமான இடமில்லாத நிலையில் பிரெஞ்சுத் துருப்பினர் சிக்கிக்கொண்டனர். பின்வரிசையில் இருந்து முன்னே என்ன நடக்கின்றது என்பது தெரியாமலேயே, பிரெஞ்சுத் துருப்பினர் முன்னேற முன்னேற, முன்வரிசையில் இருந்த பிரெஞ்சுச் சிப்பாய்கள் நெரிசலின் காரணமாகத் தடுமாறிக் கீழே விழ ஆரம்பித்தனர். இதுதான் சமயம் என எதிர்பார்த்த ஆங்கிலத் துருப்புக்கள் கைகளில் சிறு கோடாரியையும், கத்திகளையும் எடுத்துக்கொண்டு பிரெஞ்சுப் படைகளுக்குள் மின்னலெனப் பாய்ந்தனர். ஓங்கிய ஆங்கிலக்கோடாரிகளும், கத்திகளும் பிரெஞ்சுப் படையினரைக் கொன்றுகுவித்தன. இந்தவேளை பிரெஞ்சுக் குதிரைப்படை ஆங்கிலப்படைகளின் பின்பக்கமாகச் சென்று ஹென்றி மன்னனைச் சிறைப்பிடிக்க முயன்றது. ஆனால் முடியவில்லை. இந்தப் போராட்டத்தில் பிரெஞ்சுப் படைகளின் தளபதிகளான சார்ள்ஸ் டு அல்பேட் கொல்லப்பட்டார். முடிவில் அசின்கோட் போர்க்களம், பிரெஞ்சு வரலாற்றில் பிரெஞ்சுக்காரருக்குக் கிடைத்த ஒரு தோல்வியின் சான்றாகிவிட்டது.

இந்தப்போரில், தொகையில் ஆங்கிலேயர்களைவிட நான்கு மடங்காக இருந்தும் பிரெஞ்சுப் படையினர் ஏன் தோல்வியைத் தழுவிக்கொண்டனர்? பிரெஞ்சுப் படையினர் தமது போர்ப் பட்டறிவைப் பயன்படுத்தத் தவறியமையே இந்தத் தோல்வியின் அடித்தளம். பழைய போர்த்தளவாடங்களை புதிய தேவைக்கேற்றவகையில் மாற்றி அமைக்க பிரெஞ்சுத் தரப்பு தவறியமையும் அவர்கள் பெற்ற பெரும் தோல்விக்கு ஒரு காரணம். தொகையில் சிறியதாக இருந்தும் ஆங்கிலத் தரப்பு இந்தப்போரில் வெற்றிவாகை சூடியதற்கு ஹென்றியின் தந்திரோபாயமான போர் வியூகமே காரணம். ஹென்றி மன்னனுக்கு அசின்கோட்போர் வெற்றி ஒரு மாபெரும் வெற்றியாகும். இதனால்தான் மாபெரும் இலக்கிய மேதையான சேக்ஸ்பியரின் நாடகத்திலும் அசின்கோட்போர் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

அசின்கோட்போர் முற்றும்.

*(மறுமுறை இன்னொரு போர்பற்றிப் பார்க்கலாம்)*

- சி.பி.

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி நவீனச்சந்திரன் (சரஸ்வதி)

(மானிப்பாய் வைத்தியசாலையின் முன்னாள் ஆய்வுகூடப் பொறுப்பாளர்)



திருமதி மனோன்மனி நவீனச் சந்திரன் (சரஸ்வதி) அவர்கள் 28.06.2000 அன்று பாரிசில் காலமானார். அன்னார் வேலணை கிழக்கு, வேலணை ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலம் சென்ற திரு. திருமதி சுப்பையா இராசம்மாவின் அன்பு மகளும், உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த திரு.திருமதி தம்பிராசா தங்கம்மாவின் அன்பு மருமகளும், நவீனச் சந்திரனின் அன்பு மனைவியும், நிருபன் (நிரு), சஞ் சயன், நவதீபன் (கண்ணா), நாகதர்சினி (தர்சினி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனேசன் (இந்தியா) வளர்ப்புத் தாயாரும், காலம்சென்ற அமிர் தலிங்கம் (C,O அடம்பன்), திருநீல கண்டன் (கொழும்பு), தங்கரெத்தினம் (காலி), திலகவதி (இந்தியா) காலம் சென்ற செல்வவதி, காலம்சென்ற இலட்சுமி தேவி, நாகரெட்ணம் (கனடா), யோகவதி (ஆசிரியை கொக்கு வில் இந்துக்கல்லூரி), இராசலிங்கம் (AI இணுவில்), சுந்தரலிங்கம் (R.D.O வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சொர்ணமலர் (டென்மார்க்), இராஜமனோகரி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்து னியும் செல்வராசா (பிரான்ஸ்), இராஜமனோகரன் (ஜேர்மனி) ஆகியோ ரின் பாசமிகு அண்ணியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.07.2000 அன்று Pére Lachaise மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.


**தகவல்: கணவன், பிள்ளைகள்.**

**தோற்றம்: 03.10.1941** **மறைவு: 28.06.2000**

மேலதிக தொடர்புகளுக்கு:
தொலைபேசி இலக்கம்: 0148322820, 0612444325

Pub.Fr.

# மரண அறிவித்தல்



## திரு. அமிர்தநாயகம் அமிர்தராஜ் B.Com

*யாழ்/ சம்பந்தரிசியார் கல்லூரி பழைய மாணவர் –*
*ஆசிரியர் கொழும்பு/ சென் பீற்றர்ஸ் கல்லூரி முன்னாள் ஆசிரியர்)*

யாழ்ப்பாணம் -இல 15. இராசாவின் தோட்டம் ஒழுங்கையைச் சேர்ந்த திரு. அமிர்தநாயகம் அமிர்தராஜ் அவர்கள் 28.06.2000 புதன்கிழமை கனடாவில் காலமானார் என்பதனை வேதனையுடன் அறியத் தருகின் றோம்.

இவர் திரு. திருமதி. அமிர்தநாயகம் (சமாதான நீதவான்) - ரோசம்மா தம்பதிகளின் அருந்தவப் புதல்வனும், திரு. திருமதி பாலசிங்கத்தின் (Belez) அன்பு மருமகனும், அஞ்சலின் சர்மிளாவின் அன்புக் கண வரும், அமிர்தபாஷினின் அன்புத் தந்தையும், மதிமாலா (இலங்கை), சத்தியநாதன் (பிரான்ஸ்), நிக்ஷன் (வீரகேசரி கொழும்பு), மதிநாயகம் (சவுதி அரேபியா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், அஞ்சலின் பிறேமினா, ஷெறீன் தர்மினா, அன்ரன் புஸ்பராஜா பெனடிக்ட் அஞ் சலோ, பதுமநிதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமச் சடங்குகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப் படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தகவல்: சத்தியா (பாரிஸ்)
(சகோதரர்)

**தோற்றம்: 29.01.1963** **மறைவு: 28.06.2000**

தொடர்புகட்கு:
0015142701282 (கனடா மனைவி, பிள்ளைகள்)
0611841208 (பாரிஸ்)

Pub.Fr.

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 02]

மகன், இராணுவத்தில் சேரும் முடிவை, தந்தை வரவேற்றார்.

அதே சமயம், அரசியலில் சம்பந்தப்பட்ட பலர் செய்த தவறுகள் - முன்னுக்குப் பின் முரணான முடிவுகள் - ஊழல் விவகாரங்கள் - தந்தைக்கும், மகனுக்கும் அரசியல்வாதிகள் மீது நன்மதிப்பை ஏற்படுத்தவில்லை.

'தாய் நாட்டுக்காக உயிர் துறத்தல்
மரணங்களில் எல்லாம் மிக மேலானது
பிறர் கண்டு பொறாமைப்படத் தக்கது' என்பது சார்ல்ஸ்சின் கருத்து.

1905-ல், பிரான்சின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி இடம்பெற்றது. அதுவரையில், பிரெஞ்சுக் குடியரசின் மதமாக, கத்தோலிக்கக் கிறித்துவ மதம் விளங்கிவந்தது. அந்த ஆண்டில், பிரெஞ்சுக் குடியரசு மதத்தொடர்பை அறுத்துக்கொண்டது.

இனி பிரெஞ்சுக் குடியரசு வேறு, கத்தோலிக்க மதம் வேறு என்று ஆனது. அத்துடன், Loyola தோற்றுவித்த இயேசு சபையினர் இனி கல்லூரி - உயர் நிலைக் கல்லூரிகளில் போதிக்கக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்திகள் என்ரி டிகோல் குடும்பத்துக்கு வேதனை அளித்தன...



முன்பே, முடியாட்சி கவிழ்ந்து போனதால் மனதில் துயரைச் சுமந்த அந்தக் குடும்பம், இப்போது நாடு மதமற்ற குடியரசானது கண்டு மிகவும் துன்புற்றது.

மேலும், இயேசு சபை உயர் நிலைக் கல்லூரியில் பணியாற்றிய தந்தை வேலை இழந்தார். வேறு வழியின்றி, பாரிஸ் நகரில், அவரே ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை உருவாக்கி நடத்தினார்.

சார்ல்ஸ்சின் கல்வியிலும் தொல்லை சூழ்ந்தது. இதுவரை, இயேசு சபையின் மாணவராய் இருந்து வந்தவர், அதனைவிட்டு, வேறு ஒரு புதிய உயர்நிலைக் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பவில்லை. அவர் பெல்ஜியத்திற்கு இடம் மாறிய அவரது கல்லூரியிலேயே கல்வியைத் தொடர முடிவு செய்தார்.

நல்லவேளையாக, வட பிரான்சின் எல்லை அருகிலேயே, பாரிசில் இருந்து இடம் பெயர்ந்த கல்லூரி தனது பணியைத் தொடர்ந்தது.

கல்வியில் மேலும் - மேலும் சிறப்பான இடத்தைப் பெற உழைத்தார்

அத்துடன் எழுதுவதிலும், பேசுவதிலும் ஆர்வங் காட்டினார்.

## இராணுவவீரர்

19 வயதில், அவர் விரும்பிய இராணுவக் கல்லூரியில் சேரத் தேர்வு எழுதினார். ஏறத்தாழ 800 பேர் அத்தேர்வை எழுதினர். 212 பேர் வெற்றிபெற்றனர். அவர் 119வது இடத்தைப் பெற்று புகழ்மிக்க Saint-cyr இராணுவக் கல்லூரியில் ஏற்றுக்கொள்ளப்பட்டார். [இங்கிலாந்தின் Sandhurst, அமெரிக்காவின் west Point ஆகிய இராணுவப் பள்ளிகளுக்குச் சமமானது. Saint-cyr நெப்போலியன் பொனாபார்ட்டால் உருவாக்கப்பட்டு, 100 ஆண்டுகளைக் கடந்த பள்ளி. இன்றும் அப்பள்ளி இருக்கிறது. அப்பள்ளியில் சேர்ந்து, படித்து வெளிவந்த புதுவை காரைக்கால் தமிழர்கள் பல்வேறு நிலை அதிகாரிகளாகவும், ஏன் எனக்குத் தெரிந்த ஒருவர் 2 நட்சத்திர ஜெனரல் ஆகவும் பிரெஞ்சு இராணுவத்தில் பணி ஆற்றினார். ஆற்றுகின்றனர்.]

அன்றைக்கும் -இன்றைக்கும் ஒரு பெரிய வேற்றுமை

அன்று, அப் பள்ளியில் நுழையும் பேறு பெற்றவர்கள், பள்ளியில் நுழையும் முன்பு, சாதாரண இரண்டாம் வகுப்பு இராணுவ வீரனாக ஒரு ஆண்டு பணியாற்றவேண்டும் என்ற விதி இருந்தது. இப்போது, இது கட்டாயமில்லை.

சார்ல்ஸ் டிகோல் வட பகுதியில் ஒரு இராணுவ முகாமில் 2ம் வகுப்பு வீரனாக வேலையில் சேர்ந்தார். - அரவது சக வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் அவர் வருங்கால அதிகாரி என்பது தெரியும் ஆனாலும், அந்த முகாமின் அவரது அதிகாரிகள் அவரிடம் கடுமையாகவே நடந்துகொண்டனர். அவர் எல்லோரையும் போலவே நடத்தப்படவேண்டும். அவருக்கு எந்தச் சலுகையும் காட்டக்கூடாது என்பது உயர் அதிகாரிகள் கீழ் அதிகாரிகளுக்கு இட்ட கட்டளை.

அவர் அழகாக, உயரமாக, எலும்பாக இருந்தார். அவரை முகாமில் எல்லோருமே அஸ்பேர்ழ் (Asperge) என்று அழைத்தனர். [நாம் முருங்கைக்காய் என்று கூறுவதைப் போல]

முதல் நாளே, துணை அதிகாரி ஒருவர் அவரிடம் கடுமையாக நடந்துகொண்டார். அவரது பையில் இருந்தவற்றைக் கீழே கொட்டினார். அவர் தனது கட்டிலில், போர்வையை, கட்டிலில் நன்கு சுற்றியிருந்தார். இருந்தும், வேண்டும் என்றே, துணை அதிகாரி, போர்வையை இழுத்து, கீழே போட்டார். 'கட்டில் ஒழுங்காகச் செய்யப்படவில்லை' என்று கத்தினார். சார்ல்ஸ் அனைத்தையும் தாங்கிக்கொண்டார்.

இராணுவத்தில் கீழ்ப்படியத் தெரியவேண்டும்.

ஆம்! ஊம்! என்றால் முறைத்துக் கொள்ளவும் கூடாது. கோபப்படவும் கூடாது. பல நாட்களில், 25 கி.மீ. தூரம், துப்பாக்கி, உணவு, போர்வையைத் தூக்கிக்கொண்டு நடக்கவேண்டும். வேறு பல நாட்களில் முகாமிலும், அதற்கு அருகிலும் இராணுவ நடை பயில வேண்டும். துப்பாக்கியால் சுடப்பழகவும். ஓய்வு நேரங்களில், துப்பாக்கியை, செருப்பை, பெல்டைத் துடைத்து, பொலிவும் தர வேண்டும்.

பல நாட்களில் அறையை, உணவு விடுதியை, மலம், சிறுநீர் கழிக்கும் இடத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். அடிக்கடி, இரவுகளில், துப்பாக்கி தாங்கி, முகாமைக் காவல் புரிய வேண்டும்.

ஒக்டோபர் 1909-ல் இராணுவத்தில் நுழைந்த அவர், மார்ச் 1910-ல் கப்போரால் [Caporal] தகுதியையும், செப்டம்பரில் [Sergent] என்ற தகுதியையும் பெற்றார்.

அடுத்தடுத்த வாரங்களில், 19 வயது முடியும் சமயம், Saint - cyr இராணுவப் பள்ளியில் நுழைந்தார்.

[தொடரும்]

# கவிக்களம்


## எழுதுவோம் வாருங்கள்



எனது தேசமே...!
உனக்காக
உனது மீட்சிக்காக
சாவை என்
உயிரில் ஏற்றிப்போகிறேன்
இதோ.... இன்னும்....
சில வினாடிகள்
என்னுடலும் என்னுயிரும்
உருக்குலைந்து
உருத்தெரியாமல்...
என் தேசமே...!
உன்னோடு கலக்கப்போகிறது..
அது உனது விடியலை
பிரகடனப்படுத்தும்
பயமின்றி நீயும் - என்
பாசத்துக்கினிய மக்களும்
சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கும்
சுந்தரத்திருநாள்
நாளையோ... நாளை
மறுநாளோ..
அதற்கடுத்தோ...
வந்தடையும்
அவ்வினிய நன்நாளின்
புதுக்காலையும்
பூபாளமும் நிச்சயமிங்கு
புலரும்
புறப்படு என்
தேசத்துப்புயல்களே...!
புயல்களைக் கடந்து விட்டோம்
அதோ... புலர்கிறது
'புது ஈழம்'
புயலாகி எழுந்து
போர்க்கோலம் பூண்டிங்கு
புலியாகி வாருங்கள்
இனித்தூரம் எமக்கில்லை
எனச் சொல்லிப் பாடுங்கள்
இதோ விடியலின்
பாட்டொலி எம் செவிகளில்
கேட்கிறது
வாருங்கள் எழுதுவோம்
எங்கள் உயிரால்
ஒரு புது சாசனம்
எழுதுவோம் வாருங்கள்.

- புதிய நிலா -

## நிச்சயம் இது நிலைக்கும்



தேசத்திற்காகவே
தேகம் உருக்கிய
உத்தமர்களே!
நீங்கள் சென்ற
பாதைகொடியது.
ஆனால் உன்னதமானது,
உறுதியானது.
உங்கள் பாதங்கள்
தடம்பதித்த
அந்தப் புனித
மண்ணிலிருந்து – இன்று
ஆயிரம் ஆயிரம் வேங்கைகள்
துளிர்த்தெழுந்து நிமிர்ந்து நிற்கின்றனர்.
அவர்கள் நாளை
நிச்சயம் உங்கள்
கனவுகளை, நினைவுகளை
நிறைவேற்றுவர் – நீங்கள்
நிம்மதியாய் உறங்குவீர்கள்

- புதியவள்.


NÆRKØB -DKS Video

Danmark பதறேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குப்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence

புதிய முகவரி
NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

Nærkøb Travels®
Nærkøb Travels புதிய நவீன படுக்கை வசதிகள்
கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவுப் பயணச்சீட்டுகள் October கடைசிவரை
பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட்
(Disny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு
செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

Nærkøb Money Transfer
15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை
அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த
இடத்துக்கும் கொடுக்கவோ/
பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற
ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறார்கள்.

இவ்வாரம் முதல் Okotober 30th
திகதி வரை
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - 3,200 Kr
மட்டும் (Tax 165 Kr)
Copenhagen - Colombo - India
(திருவனந்தபுரத்திற்கு) -
3800 Kr + Tax 185 kr

# டென்மார்கில் நடனமாலை 2000

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் டென்மார்க் கிளையானது வருடா வருடம் நடனமாலை எனும் நிகழ்வை நடாத்தி நிதி திரட்டுவது வழமை.

அந்த வகையில் இந்த ஆண்டும் இது போன்றதொரு நிகழ்வை, 'விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களை மீள குடியமர்த்தும் திட்டத்திற்காக' டென்மார்க்கில் உள்ள சிறந்த நடன ஆசிரியர்களின் துணையுடன் *03.06.2000* சனிக்கிழமை ஈகாஸ்ற் (Ikast) நகரில் நடாத்தி சிறப்பித்திருந்தார்கள்.





நடனமாலை மாலை *5.00* மணியளவில் எமது தேசவிடியலுக்காக வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கும் உயிர்நீத்த மக்களுக்குமாக அமைதி வணக்கம் செலுத்தி ஆரம்பமாகியது. தொடர்ந்து விளக்கேற்றும் வைபவம். இதனை மாலதி தமிழ்க் கலைக்கூட ஆசிரியர் திரு.மயில்வாகனம் தில்லைநாதன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

நடனங்களில் ஆரம்பமாக வரவேற்பு நடனம். இதனை திருமதி சசிதேவி சந்திரபாலன் அவர்களின் கணேச நாட்டிய கேந்திர மாணவிகள் தந்து சிறப்பித்திருந்தார்கள். தொடர் நிகழ்வில் இவர்களால் மேலும் விடுதலைப்பாடலுக்கான நடனங்கள், குறத்திநடனம், நடன மாலையின் இறுதி நிகழ்வான விடியும் நேரம் எனும் நாட்டிய நாடகமும் வழங்கப்பட்டிருந்தது.

'தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை...' எனும் பாடலுக்கு ஈகாஸ்ற் மாலதி தமிழ்க் கலைக்கூட பரதநாட்டிய ஆசிரியை திருமதி ராஜினி குகதாசன் அவர்களின் மாணவியர்கள் வழங்கிச் சிறப்பித்துக் கொள்ள, தொடர்ந்து எழுச்சிப் பாடலுக்கான நடனம் திருமதி கௌரி வசந்தி தயாராஜன் அவர்களின் திருக்கோணேஸ்வர நிருத்திய கலாலய மாணவிகளால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டிருந்தது. இவருடைய மாணவியர்களால் தொடர் நிகழ்வில் 'சீதா இராம கல்யாணம்' எனும் நடனமும் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் வளர்ந்த நிகழ்வுகளில் 'கதம்ப நர்த்தனம்' எனும் நடன ஒழுங்கை திருமதி சுமித்திரா சுகேந்திரா அவர்களின் கலாகேந்திரா நாட்டிய மாணவிகள் வழங்கிச் சிறப்பித்துக்கொண்டார்கள்.

மேலும் இங்கே சிறப்புரை நிகழ்வை, திருமதி சாந்தா செல்வம் நடன நிகழ்வுகளின் நடுவே உறுதிபட எடுத்துக் கூறிக்கொண்டார். இவர் தனது சிறப்புரையில் பரதநாட்டியக் கலையின் தோற்றுவாய் பற்றி சில வார்த்தைகளை முன்வைத்ததோடு இந்த பரதநாட்டிய ஒழுங்கு எங்களுடைய இந்தப் போராட்ட சூழலுடன் இணைந்தபடி சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதாய் இன்னும் இன்னும் அமைய வேண்டும் என்றும், எமது மக்களின் அவலங்கள் தீர நாம் எம்மால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும். பெண்கள் தாங்களே முன்வந்து, புனர்வாழ்வுக் கழகம் இந்நாட்டில் மேற்கொள்ளும் எமது நாட்டின் புனர்வாழ்வு செயற்திட்டத்திற்கான முயற்சிகளில் முன்னின்று செயல்பட வேண்டும் என்றும், இங்கு பாடசாலையில் கல்விபயிலும் எமது மாணவ சமூகம் எமது தேசம் சார் அவலங்களையும் போராட்ட நியாயங்களையும் டெனிஸ் மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் பின்னிற்கக் கூடாது என்றும் கூறி அமர்ந்தார்.

நிகழ்வுகளின் இடையே புனர்வாழ்வுக் கழகமானது தோற்றம் பெற்ற 15 ஆண்டுகளை எட்டிய நிலையில், இதன் தோற்றுவாய் வேலைத்திட்டம் முன்னெடுத்த பணிகள் பற்றியும் சிறுவிளக்க உரையும் வழங்கப்பட்டிருந்தது.

இறுதியாக நன்றி உரை நிகழ்வுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுக்கு வந்தன. நிகழ்வுகள் யாவற்றையும் திறம்படத் தொகுத்து வழங்கியிருந்தார் திருமதி கௌரி தியாகராஜா மாலதி தமிழ்க் கலைக்கூட ஆசிரியை.

– செ. ஆனந்தன்.

## புகலிட நிகழ்வுகள்

# மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள்

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பின் எட்டாவது வருட மாவீரர் வெற்றிக்கிண்ணப் போட்டிகளில் கழகங்களுக்கிடையில் கடந்த 25ம் திகதி ஞாயிறன்று டோட்முன்ட் மெண்டஸ் பிளட்ஸ் விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இப்போட்டிகளில் ஜேர்மனி முழுவதிலுமிருந்து பதினெட்டு தமிழர் விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன. மாவீரர் சுடர் ஏற்றி போட்டிகளை தமிழ் மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் திரு. இராஜசுந்தரம் ஆரம்பித்து வைத்தார்.

**உதைபந்தாட்டப் போட்டியின் முடிவுகள் வருமாறு:**

**1வது யூட்சன் கிங்ஸ்டார் தமிழர் விளையாட்டுக் கழகம்**

**2வது முன்சன் கிளட்பாக் தமிழர் விளையாட்டுக் கழகம்**

**3வது பெர்லின் தமிழர் விளையாட்டுக் கழகம்**

சிறந்த கோல் காப்பாளராக சிவலிங்கம் கஜேந்திரன் (யூட்சன் கிங்ஸ்டார் தமிழர் விளையாட்டுக் கழகம்), கூடுதல் கோல் அடித்தவராக ஜெயரட்ணம் சிவகுமார் (முன்சன்கிளட்பாக்), சிறந்த விளையாட்டு வீரராக மகாலிங்கம் சசிகாந்தன் (யூட்சன்) ஆகியோர் தெரிவாகினர்.

மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் சிறந்த ஒழுக்க நெறிக் கழகமாக சுட்காட் ஐக்கிய தமிழர் விளையாட்டுக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்டது. வெற்றி பெற்றோருக்கு மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் கடற்புலி மேஜர் சிறியின் பெற்றோரான திரு.திருமதி. கணேசபிள்ளை அவர்கள் வழங்கினார்கள். முதலாமிடத்தைப் பெற்ற கழகத்திற்கு மாவீரர் ஞாபகார்த்த சுழற்கிண்ணம் வழங்கப்பட்டது.

- வீ. ஆர். வரதராஜா.


கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது

*Saint Maur des Fossés* மற்றும் சுற்றுவட்டார மக்களின் வசதிகருதி

EPICE ET SOLEIL SUPER MARCHÉ





மளிகைப்பொருட்கள் – அன்பளிப்புப் பொருட்கள் – வீடியோ, ஓடியோ, சீடிக்கள் அனைத்திற்கும்

ஆதவன்

எக்ஸோ சுப்பர் மார்சே


56, RUE DU PONT DE CRETEIL
94100 - SAINT MAUR DES FOSSÉS
TEL - 0155974540
FAX - 0155974542

எமது நிறுவனத்திற்கு வந்தடையும் வழிகள்:
RER: A (Saint Maur Creteil)
TVM - Bus:112 / 111 / 317

குறிப்பிட்ட பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு வீடுகளுக்குரிய விநியோகம் இலவசம்

அருகில் உள்ள கூப்பனைக் கத்தரித்து வருபவர்களுக்கு நீங்கள் வாங்கும் பொருட்களின் மொத்த விலையிலிருந்து 10% தள்ளுபடி செய்கின்றோம். (போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

நீங்கள் எதிர்பார்த்த விலைக் கழிவுகள் இதோ!
10%





Pub. Fr. 29


# 15 மணி நேரம் நடைபெற்ற உலகத்தமிழர் இயக்கக் கல்விப் பணியின் 10வது ஆண்டு நிறைவு விழா

உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் 10வது ஆண்டு விழா கடந்த 10.06.2000 ஆம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள Eropa Halla Castorop Roxel என்ற முகவரியில் காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரை நடைபெற்றது.

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து உதஇயக்கப் பொறுப்பாளர் திரு. ப. காங்கேயமூர்த்தியும், புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. ஆனந்தன் அவர்களும் மங்கல விளக்கினை ஏற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தனர். தமிழாலய மாணவர்கள் தமிழாலய கீதம் இசைத்தனர். உ.த.இயக்கத்தின் உறுப்பினர் திரு. நரேந்திரசிங்கத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து, திரு. சிவநாதன், உ.த. இயக்கக் கல்விப்பணியை வாழ்த்தி வாழ்த்துப்பா வழங்கினார்.



உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் 10வது ஆண்டுவிழாவில் தமிழாலயமாணவர்கள் தமிழாலய கீதம் இசைக்கின்றார்கள்.



உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் 10-ம் ஆண்டு விழாக்காணத் திரண்டு வந்த மக்கள் கூட்டம்

மண்டபம் நிறைந்த வெள்ளை, நீலச்சீருடை அணிந்த ஆயிரக் கணக்கான மாணவ மணிகளும் ஆசிரியர், நிர்வாகிகள் பெற்றோரும் பட்டாம் பூச்சிகள் போல் சுறுசுறுப்புடன் திரண்டிருந்தனர். பார்வையாளர் கூட்டம் அக் காலை நேரத்திலேயே மண்டபத்தை நிறைத்திருந்தது. இதனைப் பார்த்த பொழுது தாயகத்தில் இருப்பது போன்ற உணர்வும் பூரிப்பும் எல்லோர் முகங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.


இவ்விழாவிலே நீண்டகால நிகழ்ச்சித் தொகுப்பாளரான திரு.வலன்ரைன் தலைமையில் மாணவமணிகள் நிகழ்ச்சிகள் பலவற்றைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தனர். முற்று முழுதும் தாயக நிகழ்வுகளையும் யதார்த்த விடுதலையுணர்வுகள் பொங்கும் கருக்களையும் கொண்ட சங்கீதம் (வாய்ப்பாட்டு, வயலின் இசை, மென் முழவு இசை, சுரத்தட்டிசை, யாழ். வீணை இசை, கும்மி, கோலாட்டம், காவடி, நாட்டுக்கூத்து, தாளலயம், நாட்டியம், நாடகம், நாட்டியநாடகம் போன்ற நிகழ்ச்சிகளை மாணவர்கள் இடையுறாது வழங்கிக்கொண்டிருந்தனர். முற்பகல் நிகழ்ச்சிகளிடையே ஆசிரியர் நிர்வாகிகள் 100 —100 பேராக மேடையில் தோன்றித் தமது சேவைக்காக வழங்கப்பட்ட பாராட்டுக்களையும், பட்டயங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இது ஓர் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது, கிட்டத்தட்ட 700 ஆசிரியர்களும் நிர்வாகிகளும் இவ்வாறு கௌரவிக்கப்பட்டோராவர்.

உலகத் தமிழர் இயக்க கல்விப் பணிப் பொறுப்பாளர் திரு.இரா. நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் தமது உரையிலே, 10 ஆண்டுகளுக்கு முன் உலகத் தமிழர் இயக்கக் கல்விப் பணி எந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் இன்று நிறைவெய்தியமை கண்டு பூரிப்படைகின்றேன்.

தேச, இன, மொழிப் பற்றும் விடுதலை வேட்கையும் கலை, கலாச்சார பண்பாடுகள், நற்பண்புகள் நிறைந்த ஓர் தமிழ்ச் சந்ததி உருவாகிவிட்டது. இவர்கள் வருங்காலங்களிலே மலரப் போகும் தமிழீழத் தாயகத்தைக் கட்டிக்காப்பாற்றும் காவலர்களாக மிளிரப் போகின்றார்கள் எனத் தெரிவித்தார்.

மதிய இடைவேளையின் பின் பிற்பகல் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஈழத்தமிழரின் கோரிக்கைகளை நியாயப்படுத்திக் குரல்கொடுத்து வருபவரும், தாயக நிலைமைகளை நேரில் சென்று அறிந்து கொண்டவருமாகிய வணபிதா அல்பேட் கோலன் அவர்கள் தமது சிறப்புரையிலே, புலம் பெயர்ந்து இங்கே வாழும் தமிழர் தம் தாய் மொழியை நேசித்து தமது இளைய தலைமுறையினருக்கு தமிழ்மொழிக் கல்வி ஊட்டுவது ஓர் நல்ல செயல் என்றும், தமிழினம் தமது தேச விடுதலையைப் பெற்று தாயகம் சென்று சிறப்புடன் வாழ இத்தாய்மொழிக் கல்வி பேருதவியளிக்கும் எனவும், இவ் விழாவையிட்டு தாம் மகிழ்வதாகவும் கூறினார்.



உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் 10வது ஆண்டுவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வணபிதா அல்பேட் கோலன் உரை நிகழ்த்துகிறார்.
தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த வணபிதா அருள்ஜீவா அவர்கள் சிறப்புரை நிகழ்த்துகின்றார்.

தொடர்ந்து தமிழாலயங்கள் இணைந்தும் தனித்தும் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 4000 இற்கு மேற்பட்ட மாணவர்களும், 700 இற்கு மேற்பட்ட ஆசிரியர், நிர்வாகிகளையும் தன்னகத்தே கொண்ட உலகத் தமிழர் இயக்க விழா அறிவாற்றலைப் பிரதி பலிக்கும் எழுச்சி விழாவாகவும் காட்சியளித்தது.

விடுதலைப் புலிகளின் இயக்க ஜேர்மனிக் கிளையின் இணைப்பாளர், சர்வதேசச் செயலகம், உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் 10 ஆண்டு சேவையையும் பாராட்டிய வாழ்த்துச் செய்தியை கல்விப் பணிப்பொறுப்பாளரிடம் வாசித்து வழங்கிக் கௌரவித்தார். உலகத் தமிழர் இயக்கப் பிரச்சாரகராகப் பணியாற்றிய திரு. விவேகானந்தன், உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியால் வெளியிடப்பட்ட 10வது ஆண்டு மலரை வெளியிட்டு வைத்தார். இதன் முதல் பிரதியை விடுதலைப் புலிகளின் அமைப்பின் இணைப்பாளர் பெற்றுச் சிறப்பித்தார்.

அடுத்து மாணவ மணிகளின் பொதுத்தேர்வு, தமிழ்த்திறன் போட்டிகளில் 2ம் ஆண்டு முதல் 10-ம் ஆண்டுவரை தமிழ், சமூகவியற் பாடங்களில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களும், தமிழ்த் திறன் போட்டியில் 7 பிரிவுகளிலும் 7 விடயங்களில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்களும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



உலகத் தமிழர் இயக்க கல்விப் பணிப் பொறுப்பாளர் இரா. நாகலிங்கம் ஆசிரியரின் 10 ஆண்டு சேவையைப் பாராட்டி சர்வதேசப் பணியகம் வாழ்த்தியனுப்பிய வாழ்த்துச் செய்தியை ஜேர்மனி இணைப்பாளர் வழங்குகிறார்.

இடையிடையே தமிழ்த்திறன் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றபேச்சுக்கள், கவிதைகள் என்பனவும் இடம்பெற்றன.

5 ஆண்டுகள் ஆசிரியராகத் தொடர்பணியாற்றிய ஆசிரியர்களுக்கு தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர் அருட்தந்தை அருள் ஜீவா அவர்கள் பட்டயங்கள் வழங்கி பாராட்டிக்கௌரவித்தார். அருட்தந்தை தமது உரையிலே; நான் 40 நாட்கள் கனடாவில் இருந்து தமிழ் மக்களுடன் பல விடயங்களைக் கலந்து கதைத்தேன். 2 1/2 இலட்சம் தமிழர் வாழும் ரொறன்ரோ நகரிலே இப்படியான பெருந்தொகையான தாய் மொழிக் கல்விக்கான முன்னெடுப்புக்களைக் காண முடியவில்லை. என்றும் ஜேர்மனியிலே தமிழர்களின் தாய்மொழிக்கல்வியின் வளர்ச்சிக்கு எடுத்துவரும் உழைப்பைப் பாராட்டுகின்றேன் என்று கூறி, இப்பணி தொடர வாழ்த்துக்களையும் வழங்கினார்.

தொடர்ந்து உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் பொறுப்பாளர் இரா.நாகலிங்கம், திரு.ப.காங்கேயமூர்த்தி, திருமதி காங்கேயமூர்த்தி ஆகியோர் கல்விப்பணிக்கு ஆற்றிவரும் சேவையைப் பாராட்டிக் கௌரவித்தார்.

கல்விப் பணிப்பொறுப்பாளர் திரு.இரா.நாகலிங்கம் ஆசிரியரின் 10 ஆண்டு தொடர் பணியினைப் பாராட்டி உ.த.இ. ஆசிரியர் நிர்வாகிகள் வாழ்த்துப் பட்டயம் ஒன்றினை வழங்கிக் கௌரவித்தனர்.

கலை நிகழ்ச்சிகளின் இறுதிக் கட்டமாக கைல்புரோன் தமிழாலய மாணவர்கள் வழங்கிய 'உறவுக்கு கை கொடுப்போம்' என்னும் நாடகமும் விற்றன் இமானுவலின் நெறிப்படுத்தலில் 4 தமிழாலயமாணவர்கள் இணைந்து வழங்கிய 'வன்னியின் செல்வன்' நாடகமும், வூப்பெற்றால் சிவநாதனின் நெறிப்படுத்தலில் 4 தமிழாலயங்கள் இணைந்து வழங்கிய 'வீரம் செறிந்த மண்' என்னும் நாட்டுக்கூத்து ஆகியன விழாவைச் சிறப்பித்தன. முற்பகல் 9 மணிக்கு ஆரம்பித்த விழாவை இரவு 12 மணிவரை மாணவர்களும் பெற்றோர்களும் மிகப்பொறுமையுடன் இருந்து இரசித்து மகிழ்ந்தனர்.




தமிழாலய மாணவர்கள் வழங்கிய வன்னியின் செல்வன் நாடகத்தின் ஒரு காட்சியினை மேற்படத்திற் காணலாம்.
தமிழாலய மாணவர்கள் வழங்கிய 'வீரம் செறிந்த மண்' நாட்டுக்கூத்தின் ஒருகாட்சி கீழே.



தமிழாலய மாணவர் வழங்கிய கிராமிய நடனம் மேற் படத்திலும் அரிவு வெட்டு நடனம் கீழ்ப் படத்திலும் காணப்படுகின்றது.

# ஜோர்ஜ் வாஷிங்டன்



**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன.**

அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த வேர்ஜீனியாவில் வேக் பீல்டு என்னும் ஊரில் 1732-ம் ஆண்டில் ஜோர்ஜ் வாஷிங்டன் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு பணக்காரத்தோட்ட முதலாளி. வாஷிங்டன் 20-ம் வயதிலேயே ஒரு பெரிய பண்ணைச் சொத்தினை மரபுரிமையாகப் பெற்றார். இவர் 1753 முதல் 1758 வரையில் இராணுவத்தில் பணியாற்றினார். பிரெஞ்சுப் போரிலும், சிவப்பிந்தியப் போரிலும் தீவிர பங்கேற்றார். அப்போது இவருக்கு இராணுவ அனுபவமும், புகழும் கிடைத்தன. இவர் 1758 இறுதியில் வேர்ஜீனியாவுக்குத் திரும்பி, தமது இராணுவப் பதவியிலிருந்து விலகினார். அதன்பின் சிறிது காலத்தில் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக இருந்த மார்த்தா டாண்டிரிட்ஜ் கஸ்டிஸ் என்ற பணக்கார விதவையைத் திருமணம் செய்து கொண்டார்.

வாஷிங்டன் அடுத்த 15 ஆண்டுகள் காலத்தை தமது பண்ணைச் சொத்துகளை நிர்வகிப்பதில் செலவிட்டார். இவர் மிகத் திறமையாகத் தம் சொத்துக்களை நிருவகித்துச் செல்வத்தைப் பெருமளவு பெருக்கினார். 1774-ம் ஆண்டில் நடந்த முதலாவது அமெரிக்கப் புரட்சிப் பேரவைக் (Continental Congress) கூட்டத்திற்கு வேர்ஜீனியாவின் சார்பாளராக இவர் . தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலேயே மிகப் பெரிய பணக்காரர்களுள் ஒருவராக இவர் விளங்கினார். அமெரிக்காவின் சுதந்திரத்தை முதலில் வலியுறுத்தியவர்களில் ஒருவராக வாஷிங்டனைக் கருதமுடியாது. எனினும் 1775-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்ற இரண்டாவது அமெரிக்கப் புரட்சி இராணுவத்தின் தலைமைத் தளபதியாக இவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இராணுவத்தில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவராகவும் விளங்கினார். ஆறடி இரண்டு அங்குலம் உயரமும் கட்டான உடலும், கவர்ச்சியான தோற்றமும் கொண்ட இவர் அஞ்சா நெஞ்சமுடையவராகவும் திகழ்ந்தார். இவரது நிர்வாகத் திறமையையும் நாடு நன்கறிந்திருந்தது. அனைத்திற்கும் மேலாக, சிறந்த மனஉறுதி படைத்தவராகவும், ஒழுக்க சீலராகவும் இவர் விளங்கினார். இவருடைய இந்தப் பண்பியல்புகள் தாம் இவர் தலைமைத் தளபதியாக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தன. அமெரிக்கச் சுதந்திரப் போராட்டம் நெடுகிலும் இவர் ஊதியம் பெறாமலேயே பணிபுரிந்தார். அந்தப் போராட்டத்தை ஈடிணையற்ற அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் நடத்திப் பெரும் வெற்றி தேடித்தந்தார்.

அமெரிக்கப் புரட்சிப் படையின் தலைமைத் தளபதியாகப் பதவி ஏற்ற 1775-ம் ஆண்டு ஜூன் மாதம் முதற்கொண்டு சுதந்திர அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகத் தம் இரண்டாம் பதவிக் காலம் முடிவுற்ற 1797-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலுமான காலத்தில் வாஷிங்டன் மிக முக்கியமான சாதனைகளைப் புரிந்தார். வேர்ஜீனியாவில் வெர்னாம் குன்றிலிருந்த தமது இல்லத்தில் 1799-ம் ஆண்டு டிசம்பரில் அவர் காலமானார்.

அமெரிக்கா ஐக்கிய நாடுகளை நிறுவியதில் வாஷிங்டன் பெற்றுள்ள முதன்மையான இடம், அவர் ஆற்றிய மூன்று முக்கியமான தொண்டுகளினால் கிடைத்ததாகும்.

முதலாவதாக, அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்தில் வாஷிங்டன் வெற்றிகரமான இராணுவத் தலைவராக விளங்கினார். வாஷிங்டனை மிகச் சிறந்த இராணுவ மேதை என்று கூற முடியாது என்பது உண்மைதான். மகா அலெக்சாந்தருடனோ, ஜூலியஸ் சீசருடனோ ஒப்பிடும் அளவுக்கு அவர் திறமை வாய்ந்த தளபதியாக விளங்கவில்லை. அவர் எதிர்த்துப் போரிட்ட பிரிட்டிஷ் தளபதிகளின் அதற்குக்காரணம் ஆற்றலின்மையேயாகும். வேறுபல அமெரிக்கத் தளபதிகளும் இந்தப் போரில் படுதோல்வியடைந்தார்கள். வாஷிங்டன்கூட சில சிறிய தோல்விகளைக் கண்டார். ஆயினும், அவர் அந்தத் தோல்விகளால் துவண்டுவிடாமல் படைகளை ஊக்குவித்து விடா முயற்சியுடன் போரை நடத்தி இறுதியில் வெற்றி வாகை சூடினார்.

இரண்டாவதாக அமெரிக்க விடுதலைப் போர் முடிவுற்ற பின்பு, அமெரிக்காவின் அரசமைப்பை உருவாக்குவதற்காக நடந்த மாநாட்டிற்கு வாஷிங்டன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இம் மாநாட்டில், அமெரிக்க அரசமைப்பை உருவாக்குவதில் வாஷிங்டன் கொள்கைகள் அவ்வளவாக எடுபடவில்லையெனினும், அரசமைப்பு ஆவணத்திற்கு மாநில அரசுகள் ஏற்புறுதியளிக்கும்படி செய்வதில் அவருடைய ஆதரவும், அவருடைய செல்வாக்கும் பெரும் பங்கு வகித்தன. அந்நாளில், புதிய அரசமைப்புக்குப் பெருமளவில் எதிர்ப்பு இருந்து வந்தது. வாஷிங்டன் மட்டும் தமது செல்வாக்கினை ஆணித்தரமாகப் பயன்படுத்தாமல் விட்டிருந்தால், அந்த அரசமைப்பு ஏற்கப்படாமலே போயிருக்கும்.

மூன்றாவதாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளில், முதலாவது குடியரசுத் தலைவராக வாஷிங்டன் பணியாற்றினார். ஜார்ஜ் வாஷிங்டனைப் போன்று திறமையும் ஒழுக்க சீலமும் வாய்ந்த ஒரு மனிதரைத் தனது முதலாவது குடியரசுத் தலைவராகப் பெற்றது உண்மையிலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெற்ற மாபெரும் நற்பேறு எனக் கூறவேண்டும். புதிதாகச் சுதந்திரமடைந்த ஒரு நாடு, மக்களாட்சி முறையிலான அரசமைப்புடன் ஆட்சியைத் தொடங்கிய போதிலும், வெகு விரைவில், மிக எளிதாக இராணுவச் சர்வாதிகாரத்தில் வீழ்ந்து விடுகிறது. இதனைப் பல தென் அமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளின் வரலாறு நமக்குக் காட்டுகிறது. புதிய அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றுமை குலைந்து சிதறுண்டு போகாமல் பேணிக்காக்கும் உறுதிமிக்கப் பெருந்தலைவராக வாஷிங்டன் திகழ்ந்தார். எனினும், ஆட்சியில் நிரந்தரமாக நீடிக்க வேண்டும் என்ற பேராசை அவருக்கு இருக்கவில்லை.

அவர் ஓர் அரசராகவோ, ஒரு சர்வாதிகாரியாகவோ ஆக விரும்பவில்லை. இரண்டு முறைக்கு மேல் குடியரசுத் தலைவர் பதவியில் நீடிக்க மறுத்துவிட்டார். பதவியைத் துறப்பதற்கான ஒரு மரபினை அவர் வகுத்தளித்துச் சென்றார். அந்த மரபு இன்றுகூட அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது.

ஜோர்ஜ் வாஷிங்டன் அவர் காலத்திலிருந்த வேறு சில அமெரிக்கத் தலைவர்களைப் போன்று ஆழ்ந்த சிந்தனையாளராக விளங்கினார் என்று கூற முடியாது. தாமஸ் ஜெஃபர்சன், ஜேம்ஸ் மாடிசன், அலெக்சாண்டர் ஹமில்டன், பெஞ்சமின் பிராங்ளின் போன்றவர்கள் இவரைவிடச் சிறந்த அறிவுத் திறன் வாய்ந்த அவர்களில் எவரையும் விட இவர் பெருமளவு முக்கியத்துவம் வாய்ந்தவராகத் திகழ்கிறார். ஏனெனில், போர்க் காலம், அமைதிக் காலம் இரண்டிலுமே உயிர்நாடியான திறன் வாய்ந்த நிருவாகத் தலைமையில்லாமல் எந்த அரசியல் இயக்கமும் வெற்றி பெற இயலாது. அமெரிக்க ஐக்கிய நாடுகளை உருவாக்குவதில் மாடிசன் ஆற்றிய அரும்பணி முக்கியமானதுதான். ஆனால், வாஷிங்டனின் பணி அதைவிட இன்றியமையாத மாபெரும் பணியாக அமைந்திருந்தது.

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்








# ExcellencE

சர்வதேச தொலைபேசி அட்டை

| | № Local | | № Vert |
|---|---|---|---|
| இலங்கை | 50 | - | 35 |
| இந்தியா | 43 | - | 32 |

இன்னும் பல நாடுகளுக்கு அதிக நிமிடங்கள்

CALLnet

59, Rue d'Avron
75020 Paris
Tel: 0146594024

# ஐரோப்பா கிண்ணம்-2000

அரையிறுதிப் போட்டிகள் 28.06.2000 அன்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் தற்போதைய உலகச் சம்பியன் பிரான்சும், ஐரோப்பியக்கிண்ண ஆரம்பப் போட்டிகளிலிருந்து அதிரடியாக ஆடிவந்த போர்த்துக்கல்லும் மோதிக்கொண்டன. 19-வது நிமிடத்தில் கோமிஸ் அடித்த கோல் ஒன்றால் போர்த்துக்கல் பலம்பெற்றது. இரு அணிகளும் ஒன்றை ஒன்று விட்டுக் கொடுக்காமல் ஆடியபோது 50 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரன் ஹென்றி ஒரு கோலை அடித்து ஆட்டத்தில் சமநிலையை உருவாக்கினார். இச் சமநிலை ஆட்டநேரம் முடியும் வரை நீடித்துக்கொண்டதால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அந்த நேரத்தின் பெரும் பகுதியும் முடிவற்றுக் காணப்பட்டாலும் இறுதிக்கட்டமான 116- வது நிமிடத்தில் பிரான்ஸ்சுக்குச் சார்பாக ஒரு தண்டனை உதை (பனால்ட்டி) கிடைத்தது. அதனைச் சிடான் சரியாகப் பயன்படுத்தி பிரான்சுக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்தார். இதனால் பிரான்ஸ் இறுதியாட்டத்துக்குள் இரண்டாவது தடவையாக நுழைந்தது. பிரெசெஸ்சில் நடைபெற்ற இப்போட்டியில் 50,000 பார்வையாளர்கள் குழுமினர்.

29.06.2000 அன்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் போட்டியை நடாத்தும் நெதர்லாந்தும், ஐரோப்பாவின் முக்கிய உதைபந்தாட்ட நாடுகளில் ஒன்றான இத்தாலியும் மோதிக்கொண்டன. 51,000 பார்வையாளர்கள் கூடி அம்ஸ்ரர்டாம் அரங்கை அலங்கரித்து போட்டிகள் ஆரம்பமாகியதும், நெதர்லாந்து எப்படியாவது சொந்தநாட்டில் வென்றுவிட வேண்டும் என்பதுபோல் சிறப்பாகவே ஆடியது. இவர்களின் வெற்றியைத் தடுத்துவிடுவதில் இத்தாலியின் வீரர்களும் மும்முரமாக செயற்பட்டனர். நெதர்லாந்தின் அபாரமான முயற்சிக்குத் தடைபோட்ட இத்தாலியர்களின் தவறுகளால் ஆட்டத்தின்போது இரு தண்டனை உதைகள் கிடைத்தன. இவற்றை கோட்டைவிட்டது நெதர்லாந்து, கிடைத்த சந்தர்ப்பங்கள் நழுவியதால் ஆட்ட சமநிலை தொடர்ந்து மேலதிக நேரமும் அவ்வாறு அமைய இறுதி முடிவுக்காக தண்டனை உதை (பனால்ட்டி) தேர்வு நடைபெற்றது. ஏற்கனவே கோட்டைவிட்ட நெதர்லாந்து இதிலும் கோட்டைவிட்டதால் 3:1 என இத்தாலி வெற்றி பெற்று 32 ஆண்டுகளின் பின் ஐரோப்பியக் கிண்ண இறுதிக்குச் சென்றது.



### இறுதியாட்டம்

ஐரோப்பாவின் முக்கிய நாடுகள் இரண்டு மோதிக்கொள்ளும் இறுதியாட்டம் றொட்டர்டாம் நகரில் 02.07.2000 ஞாயிற்றுக்கிழமை 50,000 பார்வையாளர்களுடன் நடைபெற்றது. போட்டி ஆரம்பமாகியதிலிருந்து முதல் அரைவாசி நேரம் வரை எவராலும் கோல்போட முடியவில்லை. ஆனாலும் இடைவேளை விட்டு ஆரம்பித்ததும் 55 ஆவது நிமிடத்தில் டெல்விச்சே ஒரு கோலைப்போட்டு இத்தாலியை முன்னிலைப் படுத்தினார். ஆட்டம் முடிவும் நிலைக்கு அண்மிக்கும்வரை இத்தாலியே வெற்றியாளன் என்பது முடிவு செய்யப்பட்டிருந்தது. இத்தாலியின் இரசிகர்களும் தமது நாட்டு வெற்றியைக் கொண்டாட தயார் ஆகிவிட்ட நிலையில், சொற்ப விநாடிகள் இருக்கும்போது பிரான்ஸ்வீரன் வில்டோட் ஒரு கோலைப் போட்டு போட்டியை சமநிலைப் படுத்தினார். இதுவே இப்போட்டியின் மாபெரும் திருப்பு முனையாகியது. முழு கணிப்புக்களும் ஊகங்களும் எதிர்பார்ப்புக்களும் கலைந்து போட்டியின் நிலையே தலைகீழாகியது. நேரம் முடிவுற்று சமநிலை நீடித்ததால் மேலதிகநேரம் கோல்டன் கோல் அடிப்பதற்கு ஒதுக்கப்பட்டது. அந்த நேரத்தைக் சரியாக பயன்படுத்தி 103 ஆவது நிமிடத்தில் திறெசெகே மூலமாக ஒரு சிறப்பான அதிமுக்கிய கோல்டன் கோலை பிரான்ஸ் பெற்று 2:1 என வென்றது. 1984 இற்குப்பின் இரண்டாவது தடவையாக பிரான்ஸ் ஐரோப்பாக்கிண்ணத்தைத் தட்டிச்செல்கிறது. உலக சம்பியன், ஐரோப்பிய சம்பியன் இரண்டுக்கான ஒருமித்த நாயகர்கள் பிரான்ஸ் உதைபந்தாட்ட வீரர்கள் என்ற பெருமையும் கிடைக்கப்பெறுகிறது.

தொகுப்பு: பொன் தாமோதரம்

# விறுவிறுப்பான டெஸ்ட்டில் இங்கிலாந்து வெற்றி



29.06.2000 ஆரம்பமான மேற்கிந்திய தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் மிகவும் விறுவிறுப்பாகி முடிவடைந்தது. லோட்ஸ் மைதானத்தின் 100-வது டெஸ்ட் போட்டியான இதில் முதலில் துடுப்பாடிய மேற்கிந்தியதீவுகள் கம்போல் 82, கின்ஸ் 59 ஓட்ட எண்ணிக்கையுடன் உதவியுடன் 267-ஐ எட்டியது. இங்கிலாந்து வீச்சாளர்கள் கூத், கோர்க் இருவரும் சிறப்பாகப் பந்துவீசி தலா 4 விக்கட்டுகளை வீழ்த்தினர். பதிலுக்காடிய இங்கிலாந்தை 134 உடன் ஓரம் கட்டினர் மேற்கிந்திய அணியின் அனுபவமான வீச்சாளர்கள் அம்புறூஸ், வோல்ஸ். இருவரும் தலா 4 விக்கட்டுகளைப் பெற்றனர். பந்து வீச்சாளரும் சாதகமான நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆடிய மேற்கிந்திய தீவுகள் பெரும் சரிவைச் சந்தித்தது. எதிர்பார்க்கவே முடியாதளவு சிறப்பாக பந்துவீசிய இங்கிலாந்திடம் 54 ஓட்டங்களுடன் வீழ்ச்சியடைந்தது. அதிலும் குறிப்பாக காடிக் 5 விக்கட்டுகளைச் சாய்த்தார். இப்போது இரு அணிக்கும் சமவெற்றி வாய்ப்பு நிலவ 188 ஓட்டங்களுக்காக இங்கிலாந்து களமிறங்கியது. பந்து வீச்சில் காட்டிய திறமையைப்போல் துடுப்பாடுவதிலும், தன் திறமையை நிரூபித்த கோர்க் இறுதிவரை போராடி 191/8 வரை இட்டுச் சென்று வெற்றியைப் படைத்தார். வோர்ஸ் 6 விக்கட்டுகள் வீழ்த்தியபோதும் வெற்றியைத் தடுக்கமுடியவில்லை. ஆட்ட நாயகன் கோர்க் என்பதிலும் ஐயமில்லை.

# 100ஆவது போட்டியை எட்டிய லோட்ஸ்சில் வீரர்கள் கௌரவிப்பு

1975, 1979, 1983, 1999 ஆகிய நான்கு உலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகளுக்கு தலைமை கொடுத்த, கிரிக்கட்டின் சொர்க்கபுரி எனப்படும் லண்டன் லோட்ஸ் மைதானம் தனது 100-வது டெஸ்ட் போட்டியை கடந்தவாரம் சந்தித்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இப்போட்டியில் மேற்கிந்திய தீவுகளும் இங்கிலாந்தும் மோதி, இங்கிலாந்து வெற்றிபெற்றது. அத்துடன் இந்த மைதானத்தில் சாதனைகள் புரிந்த வீரர்கள் பலர் கௌரவிக்கப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது. வெங்சாக்கருக்கு மட்டும் ஆசிய தேசத்திலிருந்து அழைப்புக்கிடைத்தது. முன்னாள் இந்திய அணித்தலைவரான வெங்சாக்கர் 1979, 1982, 1986 ஆகிய மூன்று தடவையும் விஜயம் செய்த இந்திய அணியில் இடம்பெற்று தொடர்ச்சியாக மூன்று தடவையும் இம் மைதானத்தில் சதம் அடித்தார். கௌரவிக்கப்பட்ட ஏனைய வீரர்கள் விபரம்:

பிரட்மன், சோபர்ஸ், பாப் மாசி, மைக்கிராத், கிறினிச், கிரகாம்கூச், அலன்லாம்ப், இயன் போத்தம், அன்டர்வூட்.

# முதல் இரு இடங்களை பெற்றது மக்லேறன்

இவ்வார விளையாட்டுச் செய்திகளிலும் பெரிதாக பேசப்படுவது பிரான்ஸ் நாட்டைப் பற்றியேயாகும். ஐரோப்பியக் கிண்ண வெற்றி, சைக்கிள் ஓட்டம், கார்ஓட்டம் போன்றே பிரான்சின் பிரபல்யம் பறந்து கொண்டிருக்கிறது. விரைவு கார் ஓட்டத்தை (Formula 1) நடாத்தும் சந்தர்ப்பம் 02.07.2000 பிரான்சுக்குக் கிடைத்தது. மக்லேறன், பறாறி போட்டியாக இருந்தபோதும் 59-வது சுற்றில் பறாறியின் முக்கிய ஓட்டுநர் சூமாக்கர் இயந்திரக்கோளாறு காரணமாக வெளியேறிவிட மக்லேறனுக்கே சந்தர்ப்பம் அதிகரித்தது. குல்தாட், ஹக்கினன் இருவரும் கிடைத்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தி முறையே 1ம், 2ம் இடத்தைப் பெற்றனர். 3ம் இடம் பறாறியின் ஓட்டுநர் பார்ச்சிலோவுக்குக் கிடைத்தது. அடுத்த போட்டி 16.07.2000 ஒஸ்திரியாவில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு முன்னதாக ஓட்டுநர்கள், கார்களின் நிலை வருமாறு:




| ஓட்டுநர்கள் | புள்ளிகள் |
|---|---|
| 1. சூமாக்கர் | 56 |
| 2. குல்தாட் | 44 |
| 3. ஹக்கினன் | 38 |
| 4. பார்ச்சிலோ | 32 |
| 5. பிசெல்லா | 18 |

| கார் | புள்ளிகள் |
|---|---|
| 1. பறாறி | 88 |
| 2. மக்லேறன் | 82 |
| 3. பெனட்டன் | 18 |
| 4. வில்லியம்ஸ் | 17 |
| 5. யேர்டன் | 11 |

# பட்டம் வென்ற ஆனந்த்



ஜேர்மனி பிராங்பேட்டில் நடைபெற்ற சீமன்ஸ் ஜயன்டஸ் விரைவு செஸ்போட்டியில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றுள்ளார். 10 சுற்றுகள் கொண்ட போட்டியில் ஆனந்த் 7.5 புள்ளிகளுடன் முதல் ஸ்தானத்தை அடைந்தார். உலகின் நம்பர் 1 செஸ் வீரனான ரஷ்யாவின் காஸ்பரோவ் 6 புள்ளிகளுடன் 2ம் இடத்தையே பெறமுடிந்தது. இது கடந்த இரு ஆண்டுகளில் முதல் முறையாக காஸ்பரோவ் பட்டம் வெல்லும் நிலையை மாற்றியது.


தமிழால் முடியும்...
தமிழர்களால் முடியும்...
தீபம்
SUN TV
வெற்றி... வெற்றி... வெற்றி...
மிகவும் குறைந்த
கட்டணத்துடன் தரமான
நிகழ்ச்சிகளைத் தர
தீபம்
உங்கள் வாசல் தேடி
வருகின்றது.
புலம்பெயர் கலைஞர்களின்
தரமான படைப்புக்கள்
எதிர்பார்க்கப்படுகின்றது.
மிகக் குறைந்த விலையில் அன்ரெனாக்கள்
பொருத்திக்கொள்ள
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
சந்தா விபரங்களுக்கு
தங்கள் நாட்டு முகவர்களுடன்
தொடர்புகொள்ளவும்
தென்னாபிரிக்கா முதல்,
தென்னரேபியா வரை
24 மணி நேரம்
ஓயாது ஒலித்துக்
கொண்டிருக்கின்றது
தமிழ் !
Deepam TV
Sun TV
தீபம் ஒளிபரப்பாகும் செய்மதி:
Eutelsat Hot Bird 4, at 13 ° East
Down link Frequency: 10722. 88 MHZ
Polarisation: X Pol(H)
www.deepamtv.com
முகவரிகள்:-
இலண்டன்: TELE EUROPE LTD - Tél: 0044-2088146565
1,Martindale Road. Hounslow West, TW4 7EW, London, U.K.
Fax: 0044-2088141144 0044-2088140444
டென்மார்க்: MR.K.THIYAGARAJ - Tél: 0045 - 97210496
Grundtvigs vej - 72st, tv, 7400 Heming. Denmark
நோர்வே: MR.RAMANAN - Tél: 0047-22688891
Chola Reiser, Bru gate 1,0186-Oslo, Norway
Mob. N°: 0047-95243726 - Fax: 0047-23135999
பிரான்ஸ்: SAKTHI GROUP - Tél: 0033-1 40 37 26 37
01 42 09 03 04, 01 42 52 53 01, 01 42 05 72 81
அல்லது சசி - Mob. N°: 0663632624
- Fax: 01 42 09 78 24
ஜேர்மனி: MR.K.NADARAJAH - Tél: 0049- 69882765
Aisevinee Agency, Pirazzi Str. 5
63067 Offenbach, Germany.
Mob. N°: 0049 - 729630163 - Fax: 0049-69888018
சுவிஸ்: MR.S.K. NATHAN - Tél: 0041-12724336
S.K.Trading, Gasometer Str.31,
Zurich 8005 Switzerland
Mob. N°: 0041-1794027817 - Fax: 0041-1273237
நெதர்லாந்து: MR.DANIS RAJA
Braille 90,2037 XD Haarlem, Holland
Tél: 0031-235357608
Mob. N°: 0031 -794110915
Pub.Fr

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## கூடுதலான....

எம்மை சரியான திட்டத்தின் படி இணைத்திருந்தார். இன்று நாம் பெரிய வெற்றிகளை ஈட்டிக்கொண்டு போவதற்குரிய காரணம் மக்களும் எமது சிறப்பு எல்லைப்படை வீர்களும், எல்லைப்படை வீரர்களும், மகளீர் எல்லைப்படை வீரர்களும், மகளீர் சிறப்பு எல்லைப்படை வீரர்களும், மாணவ எல்லைப்படை வீரர்களும் தான் என குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆனையிறவு முற்றுகைக்கான தரையிறக்க நடவடிக்கை பற்றி மிகுந்த விளக்கமாக்கூறிய பின்பும் எல்லைப்படை வீரர்கள் உறுதியுடன் எம்முடன் வந்தனர். உறுதியாகவும் அர்ப்பணிப்பாகவும் மனநிறைவோடும் உணர்வோடும் அந்தத் தாக்குதல்களில் பங்குபற்றினர். ஆனையிறவை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும் என்பதில் உறுதியுடன் நின்று எம்முடன் செயற்பட்டனர். இரண்டு டிவிசன் இராணுவத்தை உள்ளடக்கிய பெரும் படையுடன் யுத்தம் நடந்தது. சுமார் 20,000 படையினர் இருந்தனர். இந்த படையினருக்கு மத்தியில் ஏ-9 கண்டிவீதியை ஊடறுத்து நின்றபோது, எல்லைப்படை வீரர்கள் எமது போராளி வீரர்கள்போன்று தள்ராது உறுதியுடன், நம்பிக்கையுடன் எமது இடத்தை தக்க வைப்பதிலும், எமது விழுப்புண்பட்ட, வீரச்சாவைத்தழுவிய போராளிகளை களத்தில் இருந்து அனுப்புவதிலும், எமது ஏனைய பணிகளிலும் ஈடுபட்டதிலும் மிகவும் உணர்வோடு அவர்கள் செயற்பட்டனர். இதன்போது அவர்கள் காயமடைந்தனர், வீரச்சாவடைந்தனர். எங்களுடன் நின்று எதிரியுடன் நேருக்கு நேர் யுத்தத்தில் ஈடுபட்டனர். அணிகள் குறைகின்றபோது அவர்கள் மீண்டும் எம்முடன் இணைந்தனர். தமக்கான பகுதிகளை எல்லைப் படை வீரர்கள் பாதுகாத்தார்கள். எமது தலைவர் அவர்களின் மதிநுட்பமான திட்டத்துடன் எதிர்பார்த்த எதிர்ப்புக்களை வெற்றிகரமாக முறியடித்தோம்.

எமது ஊடறுப்புப் பகுதிகளில எதிரி ஏழு தடவைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டான். எத்தனை ஆயிரம் படை வந்தாலும் எம்மால் அந்த இடத்தை நிச்சயமாக தக்க வைக்கமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. எதிரியின் அதிகூடிய நம்பிக்கைக்குரிய 53ம் டிவிசன் இராணுவம் எம்மிடம் போரிட்டது. 54ம் டிவிசன் கேணல் தீபனின் அணியுடன் போரிட்டது. இவை இரண்டின் முழுப் பலத்தையும் முழு மனோ பலத்தையும் எமது படைப்பிரிவுகள் உடைத்தெறிந்தன. 34 நாட்கள் விடாது யுத்தம் நடந்தது. அதில் போராளிகள் எல்லைப்படை வீரர்கள், அவர்களது மனவுறுதி தளராத துணிச்சலும் உணர்வுகளும் தலைவர் அவர்கள் மீதான விசுவாசமும், தலைவர் அவர்கள் சொன்னதை நாம் நிறைவேற்றுவோம் என்ற இலட்சியமும் கொண்டு தளராது நின்றார்கள். எதிரியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் 200ற்கு மேல் படையினர் கொல்லப்பட்டனர் 700 பேர் வரை காயமுற்றனர். 150 வரையான உடல்கள் கைப்பற்றப் பட்டன.

இப்போது இராணுவம் நம்பிக்கையான கதைகளை கதைக்கின்றது. பலகுழல் ரொக்கட் எறிகணைச் செலுத்திகளை அது பெற்றுள்ளது. அதனால் எம்மை அழிக்கமுடியும் நகர்வுகளை தடுக்கமுடியும் என அது நம்புகின்றது. நிச்சயமாக அது வல்ல பிரச்சனை. அது எமக்கு பிரச்சனைக்குரிய விடையமுமல்ல. அதனுடைய தாக்கங்கள் எமக்குத் தெரியும். அதில் நாம் முதல் அனுபவம் பெற்றவர்கள். பிறகுதான் இராணுவம் அனுபவத்தை பெற்றுக்கொண்டிருக்கின்றது. எனவே எமக்கு அது ஒரு பெரிய பிரச்சனையல்ல. நிச்சயமாக நாம் வெல்லமுடியும். இந்த வெற்றிக்கு மக்களின் பங்களிப்புகளும் எல்லைப் படை வீரர்களின் பங்களிப்புகளும், போராளிகளாக இணைவதும் தான் உறுதுணையாக இருந்தன. இன்று ஒவ்வொரு மக்களும் தலைவர் அவர்களுக்கு கைகொடுக்க வேண்டும். இதனை மக்கள் செய்துகொண்டிருக்கின்றனர். வெகுவிரைவில் விடுதலையை வென்றெடுப்பது மக்களின் கைகளில் தான் உள்ளது. நாம் விரைவில் யாழ்ப்பாணத்தை வென்றெடுக்கவேண்டும். எதிரியான ரத்வத்தை ஒரு இடத்தில் குறிப்பிட்டிருந்தார், யாழ்ப்பாணத்தை பிடித்துவிட்டால் தமிழீழத்தை பெற்றதற்கு சரியென்று. வேறு நாடுகளுக்கும் இது தெரியும். இராணுவத்திற்கும் அதன் தளபதிகளுக்கும் தெரியும் போரில் தாம் வெல்ல முடியாதென்பது. ஆனால் அரசியல்வாதிகளின் நிர்ப்பந்தமே அவர்கள் போரிடக் காரணமாகும். ஆனையிறவை எந்த நேரத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எம்மால் தக்க வைக்கமுடியும் என அரசு அறிக்கைவிட்டது. அங்கிருந்த அமெரிக்க பயிற்சி பெற்ற 54ம் படைப்பிரிவின் கதையே முடிந்துவிட்டது. இனி யார் நின்றுபிடிப்பது. ஆனையிறவு வீழ்ந்ததும் யாழ்ப்பாணம் யாரிடம் இருக்கும் என்பது இராணுவத்திற்குத் தெரியும். அடுத்தகட்ட நடவடிக்கையை செய்ய இராணுவம் தயாரில்லை. அதன் மனோதிடம் உடைந்து விட்டது. அதைக் கட்டியெழுப்ப அதற்கு நீண்டகாலம் தேவைப் படும். எந்த நவீன ஆயுதத்தை வழங்கினாலும் சண்டையிடப் போவது இந்த இராணுவமே. அந்த ஆயுதங்கள் வந்து சேர்வதும் மிகவும் நல்லதே. நீண்ட காலமாக சிறீலங்கா அரச தலைவர்களில் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்திலேயே கூடுதலான ஆயுதங்களை நாம் கைப் பற்றினோம். இராணுவம் அதிக அளவில் கொல்லப்பட்டதும் இவரது காலத்திலேயே தான்.

சந்திரிகா தொடர்ந்து இருக்க வேண்டும். நாம் தமிழீழத்தை பெறும்வரை அவர் இருக்க வேண்டும். இவ்வாறு களமுனைத் தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் தனது உரையில் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு:
12.02.1926



இறப்பு:
30.06.2000

## தம்பிமுத்த கனகலிங்கம்

(கைதடி நுணாவில், சாவகச்சேரி)

கைதடி நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. கனகலிங்கம் 30.06.2000 இல் முல்லைத்தீவில் காலமானார். இவர் யாழ். மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியரும், மகேஸ்வரியின் (முன்னாள் ஆசிரியை) அன்புக் கணவரும், நித்தியகுமார் (பிரான்ஸ்), நித்தியரஞ்சன் (பிரான்ஸ்), நித்தியராஜன் (பிரான்ஸ்), நித்திய ராகவன் (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியலதா (பிரான்ஸ்), மீரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருகா, தீப்திகா, நித்திலா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 01.07.2000 அன்று புதுக்குடியிருப்பு முல்லைத் தீவில் (தமிழீழம்) நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: பிள்ளைகள்
திரு. திருமதி நித்தியகுமார் Tel: 0142266451
திரு. திருமதி நித்தியராஜன் Tel: 01 46520092

Pub. Fr.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## சிறீலங்கா இராணு....

தில்லை. நாங்கள் அனைவரும் ஒன்றுபட்ட சக்தியாக அணிதிரண்டு, எங்கள் தலைவிதியை நிர்ணயிக்கின்ற பலம்பொருந்திய சக்தியாக எமது விடுதலைப் பயணம் தொடர்கின்ற சூழலில்தான் எமது வெற்றி எம்மை நோக்கிவரும். இனி ஒரு நீதியான உண்மையான தீர்வை வெகுவிரைவில் கொண்டுவருவதற்கு நாம்தான் காரணமாக இருக்க வேண்டும். இன்று பல நாடுகள் பல ஆண்டுகளாகப் போராடி தமது விடுதலையைப்பெற்று, சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்ற சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. ஏனெனில் உலகின் பெரிய சக்திகள் கூட இன்று, ஆக்கிரமிப்பு எண்ணம், ஆக்கிரமிப்பு முயற்சிகள் எந்த இனத்தின் விடுதலை உணர்வையும் மழுங்கடிக்க முடியாது, பலவீனப்படுத்தமுடியாது என்ற யதார்த்தத்தை, உண்மையை புரிந்து கொண்டிருக்கின்றன. நாம் சிங்கள தேசத்திற்கும் சிங்கள மக்களுக்கு ஒன்றை உறுதியாக கூறலாம். இந்த இலங்கைத் தீவில் இருக்கின்ற இரு தேசங்களின் இரு இனங்களும் சுதந்திரமாகவும் உரிமைகளோடும் வாழ்கின்ற சூழல் ஏற்படுகின்றபோதுதான் வளர்ச்சிபெற்ற சுதந்திரமான வாழ்வை தமிழரும் சிங்களவர்களும் மேற்கொள்ளலாம். தமிழரை அடிமைப்படுத்தி ஆக்கிரமிப்பை செய்துகொண்டு சிங்கள தேசம் சுதந்திரமாக மகிழ்சியாக வாழலாம் என்றால் அது கனவாகத்தான் அமையும். ஆகவே இந்த யதார்த்தத்தை சிங்களதேசம் உணரும்காலம் வரும்.

தாம் இராணுவ ரீதியாக இவர்களை எதிர்கொள்ள முடியாது, விடுதலைப் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது என்பதை சிங்கள தேசமும் இராணுவமும் புரிந்து கொண்டுவிட்டன. ஆனால் அரசியல் தலைமைகள் யுத்தத்தை அரசியல் மயப்படுத்தி யுத்தத்தாலேயே தமது வாழ்க்கையை கொண்டு செல்லுகின்ற அரசியலை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இன்று யாழ் குடாநாட்டிலே ஓட்டை விழுந்து மூழ்கிக்கொண்டிருக்கின்ற இராணுவக் கட்டமைப்பு, அண்மையில் எமது ஓயாத அலைகள் 3 சற்று ஓய்ந்து தணிந்திருக்கின்ற படியால் தாம் புதிய இராணுவத் தளவாடங்களின் வருகையோடு விடுதலைப் புலிகளின் வெற்றியை அவர்களின் நகர்வை தடுத்து நிறுத்திவிட்டோம் என்ற செய்தியைப்பரப்பி ஒரு நம்பிக்கையை கொண்டிருக்கின்றது. இது உண்மையில் இதனால் ஏற்பட்ட அமைதியல்ல. எங்களின் ஒவ்வொரு கட்டத் தாக்குதல்களும் ஒவ்வொரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒருதடவை முழு அளவில் தயார்படுத்தப்பட்டு அலைவேகமாக வீசியதாகத்தான் வரலாறு இருக்கின்றது. ஆகவே இராணுவம் பிரச்சாரப்படுத்துவது போலான சூழ்நிலை இங்கு இல்லை. மூழ்கிக்கொண்டிருக்கின்ற கப்பலில் தற்காலிகமாக ஒட்டுவேலைகள் செய்து இராணுவம் தாக்குப் பிடித்தது போலிருக்கின்றது.

ஆனால் ஓயாத அலைகள் சற்று தணிந்திருக்கின்றது. அது மீண்டும் பொங்கி பிரவாகிக்கின்ற பொழுது அவர்களின் மூழ்குகின்ற இராணுவக்கட்டமைப்பு நிச்சயமாக ஒரேயடியாக மூழ்கத்தான் போகின்றது. அதற்கான காலம் வெகு விரைவில் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தனது வெளியீட்டுரையில் தெரிவித்துள்ளார்.

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## மணலாற்றில்....

யுள்ளார். இதேவேளை படையினரின் இம் முன்னேற்ற நடவடிக்கையை முறியடிக்கும் சமரில் 15 போராளிகளும் ஒரு எல்லைப் படை வீரரும் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர்.

(இவர்களது பெயர் விபரங்கள் நடுப்பகத்தில் உள்ளன)

*(32-ம் பக்கத் தொடர்ச்சி)*

## உதயன்....

மும் சட்ட விரோதமானது என தீர்பளித்துள்ளமை சந்திரிகாவிற்கு பெரும் தலையிடியினை தோற்றுவித்தள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சந்திரிகாவினால் தடை விதிக்கப்பட்டிருந்த சண்டே லீடர் ஆங்கில வார இதழும் நீதிமன்றத்தின் இத் தீர்ப்பினை அடுத்து குறைந்த பக்கங்களுடன் கடந்த ஞாயிறன்று வெளியாகியுள்ளது.

இதேவேளை மீண்டும் செய்தித் தணிக்கையை கொண்டுவருவது குறித்து சந்திரிகா தரப்பும் அவசர அவசரமாக ஆலோசித்து வருகிறது.

தங்க மாளிகை ஜுவல்லர்ஸ்

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers

Amalia House

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3686
Fax: 020 8690 4157

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# கூடுதலான ஆயுதங்களை நாம் கைப்பற்றியதும், பெருமளவில் இராணுவம் கொல்லப்பட்டதும் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்திலேயே

## – களமுனைத் தளபதி கேணல் பால்ராஜ் –



*(03.07.00)*

நீண்டகாலமாக சிறீலங்கா அரச தலைவர்களில் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்திலேயே கூடுதலான ஆயுதங்களை நாம் கைப்பற்றினோம். இராணுவம் அதிக அளவில் கொல்லப்பட்டதும் இவரது காலத்திலேயேதான் என விடுதலைப் புலிகளின் களமுனைத் தளபதி கேணல் பால்ராஜ் இன்று நடைபெற்ற ஆனையிறவு ஒலிப்பேழை, கவிதை நூல் வெளியிட்டு விழாவின்போது தெரிவித்தார். இந் நிகழ்வில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது தலைவர் அவர்கள் ஜெயசிக்குறுய் ஆரம்பமாகும் முன் நம்பிக்கையுடன் கூறிய வார்த்தைகளின் படி இங்கு நிகழ்ந்ததை அனைவரும் பார்க்கின்றீர்கள். முப்படைகளை இணைத்து ஜெயசிக்குறுய் நடவடிக்கைப் படைகள் மாங்குளத்தை அடைந்தன. அப்போது கிளிநொச்சி தெரிகின்றது என அரசு கூறிக்கொண்டிருந்தது. ஒட்டுசுட்டானைப் பிடித்த பொழுது, 'புதுக்குடியிருப்பை பிடித்து துண்டாடுவோம், எமது பழைய முகாமான முல்லைத் தீவை இணைத்து விட்டால், விடுதலைப் புலிகளின் கதை முடிந்துவிட்டது என அரசு மிகுந்த நம்பிக்கையுடன் கூறிக் கொண்டு இருந்தது. ஆனால் எமக்கு, எப்படித் தலைவர் அவர்களின் திட்டத்துடன், வெற்றிபெறப்போகின்றோம் என்பது தெரியும். எப்படிச் செய்வோம் என்பதில் எமக்கு பரிபூரண நம்பிக்கை இருந்தது. அந்த இராணுவ வேலி எந்த நேரமும் அழியலாம், விழலாம் என்று நாம் குறிப்பிட்டோம். அதேபோல் படிப்படியாக பார்க்கலாம்.

சூரியக்கதிரின் பின் எமது விடுதலைப் போராட்டத்தின் கதை கிட்டத்தட்ட முடிந்து விட்டது என்றார்கள். ஆனால் அதற்குப்பின் ஓயாத அலைகள் ஒன்று நடவடிக்கையில் முல்லைத்தீவில் இருந்த எதிரி நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் தயாராக இருந்தவேளை, நாம் தாக்குதலை ஆரம்பித்தோம். இதில் 1500-கும் மேலான படையினரைக் கொன்று, காயப்படுத்தி அந்த இடத்தை முழுமையாக நாம் வென்றோம். அந்தவேளை அங்கு தரையிறகப்பட்ட இராணுவத்தையும் கொன்று, காயப் படுத்தி பின்வாங்கச் செய்தோம். மிகப்பெரிய வெற்றியை ஈட்டினோம். அதன்பின் ஜெயசிக்குறுய் நடந்தபோது ஓயாத அலைகள்-2 நடத்தினோம். தலைவர் அவர்களின் திட்டத்தின் படியே, எதிரி மிகுந்த நம்பிக்கையுடன் பலம்கொண்டு அமைத்திருந்த கிளிநொச்சி நகரை வென்றோம். அடுத்து ஓயாத அலைகள்-3 ஒட்டுசுட்டானில் ஆரம்பமானது. அரசு மிகுந்த நம்பிக்கையுடன் பிடித்து வைத்திருந்த பகுதிகளை குறுகிய இழப்புடன் மீட்டு படையினரை ஓமந்தைவரை விரட்டினோம்.

அடுத்த கட்டமாக ஆனையிறவினை துண்டிக்கும் நோக்குடன் எமது படைப்பிரிவுகள் தாக்குதலுக்கு தயாராகின. தலைவர் அவர்கள் இந்த திட்டத்திற்கு முன்திட்டத்தை போடும்பொழுது நாம் அனைவரும் ஒன்று சேர்ந்திருந்தோம். அந்தவேளை அவர் தீட்டிய திட்டத்தில் பரிபூரண நம்பிக்கை எமது வீரர்களுக்கும் தளபதிகளுக்கும் இருந்தது. அதேவேளை, அதில் நிச்சயமாக நாம் வெல்லுவோம் என்ற உறுதியை எமது வீரர்களும் தளபதிகளும் எடுத்துக்கொண்டோம். ஏனெனில் ஒன்பது அண்டுகாலம் ஆனையிறவுடன் நாம் மோதிக்கொண்டிருந்தோம். அதில் நாம் வெற்றி பெற்றிருக்கின்றோம். சில இடங்களில் தோல்வியையும் சந்தித்திருக்கின்றோம். இராணுவமும் சில இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. சில இடங்களில் தோல்வியையும் சந்தித்திருக்கின்றது. ஆனால் ஆனையிறவு விழவில்லை. 1991 முதல் ஒன்பது ஆண்டுகள் அனுபவம், ஜெயசிக்குறுய் எதிர் தாக்குதல்கள், எல்லாவற்றையும் பரிசீலித்து எமது தலைவர் அவர்கள் அதில் நடந்த சம்பவங்களை சரியாக குறிப்பிட்டு, திட்டமிட்டு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# மணலாற்றில் முன்னேற்ற நடவடிக்கை முறியடிப்பு அதிகாரி உட்பட 15ற்கு மேற்பட்ட படையினர் பலி

*(02.07.00)*

தமிழீழத்தின் இதயபூமியான மணலாறில் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பெரும் எடுப்பிலான முன்னேற்ற நடவடிக்கை ஒன்று விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மணலாற்றுப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் முன்னணி காவலரண்களை உடைத்துக் கொண்டு சிறீலங்காப் படையினர் முன்னேறியுள்ளனர். கடும் எறிகணை தாக்குதலை மேற்கொண்டபடி ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை முன்னேறிய படையினரை வழிமறித்த புலிகளின் அணிகள், கடும் தாக்குதலை தொடுத்தனர். புலிகளின் கடும் தாக்குதலால் தொடர்ந்து முன்னேற முடியாத சிறீலங்கா படையினர் பலத்த இழப்புக்களுடன் தமது முன்னைய இடங்களுக்கு பின்வாங்கியுள்ளனர்.

இம் மோதலில், 15ற்கு மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டதுடன், பெருமளவிலான படையினர் படுகாயமடைந்துள்ளனர். இத் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரில் அதிகாரியொருவரும் அடங்கி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# உதயன் வெளியாகும் ?

*(03.07.00)*

சிறீலங்கா படையினரால் மே மாதம் 19 திகதி மூடப்பட்ட யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை மீண்டும் நாளை முதல் வெளியாகும் என அப்பத்திரிகை நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆயினும் இராணுவத்தினர் இப் பத்திரிகை மீண்டும் இயங்குவதற்காக என்னென்ன நிபந்தனைகளை விதித்திருக்கின்றார்கள் என்ற விபரம் எதுவும் தெரியவரவில்லை.

கடந்த வாரம் சிறீலங்காவின் மேன்முறையீட்டு நீதிமன்றம் சந்திரிகாவினால் கொண்டுவரப் பட்ட செய்தித் தணிக்கையும், அதற்காக நியமிக்கப்பட்ட செய்தித்தணிக்கை அதிகாரி நியமன

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, HA0 2DJ,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub



- Leela அரிசிமா - 89P ல் இருந்து
- Kingfish- 2.59 ல் இருந்து
- நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
- 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
- CD 2.99 இல் இருந்து – Audio 99 இல் இருந்து
- நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
- அனைத்துத் தொலைபேசி அட்டைகளும் 10% விலைக் கழிவில்

£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!

லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!